www.padippakam.com


16-31 டிசம்பர் '91 ரூ. 2-50

# புதிய ஜனநாயகம்

ஆளும் துரோகிகளால்
நாடு மீண்டும் காலனியாகிறது

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

## தண்ணீருக்காக தமிழனின் ரத்தம்!




படிப்பகம்

www.padippakam.com



அசாம் துணை ராணுவப் படையின் பாலியல் வன்முறைககு பலியான திரிபுரா பழங்குடிப் பெண்கள்

# துணை ராணுவத்தின் கும்பல் கற்பழிப்பு மறைக்க முயன்றன அரசும் ராணுவமும்

அமைதியாக வாழ விரும்பும் இந்தியக் குடி மக்கள் அனைவருக்கும் அதிர்ச்சியும் பீதியும் ஏற்படுத்தும் சில தகவல்கள் புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் நடந்துவரும் ஒரு வழக்கில் வெளியாகியுள்ளன.

மேற்குத் திரிபுரா கோவாய் போலீசு நிலையத்தின் கீழ் உள்ளது உஜாமைதான் என்ற பழங்குடி கிராமம். அங்கே மூன்று "தீவிரவாதி"களைத் தேடுவதாகப் புகுந்த 21 அசாம் துப்பாக்கிப் படையினர் 1988 மே 31 முதல் ஜூன் 2ம் நாள் வரை கல்வியறிவற்ற, வெகுளிகளான பல பழங்குடிப் பெண்களைக் கும்பல் கும்பலாய்க் கற்பழித்தனர்.

இந்தக் குற்றத்திற்கு எதிராக நீதி கோரி அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் உச்சநீதி மன்றத்திடம் முறையிட்டது. அது கல்கத்தா உயர்நீதிமன்ற ஒய்வு பெற்ற நீதிபதி தேவ் விசாரணைக் கமிசனை நியமித்தது. அவர் தனது 137 பக்க அறிக்கை சமர்ப்பித்தார். அதில் கும்பல் கற்பழிப்பு நடந்தது உண்மைதான்; ஆனால், இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்படாதது மட்டுமல்ல, அச்சம்பவமே நடக்கவில்லை என மூடி மறைப்பதில் அரசும், அதிகாரிகளும் இராணுவமும், துணை இராணுவமும் முயன்றனர்; இப்படிச் செய்தவர்கள் விசாரணைக் கமிசன் முன்பு வரவும் இல்லை - என நீதிபதி தேவ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்தக் கும்பல் கற்பழிப்பு நடந்த மூன்றாம் நாள் திரிபுரா அரசாங்கம் நியமித்த உண்மை அறியும் கமிட்டி தனது விசாரணையைத் துவக்கி எட்டே நாளில் அறிக்கை சமர்ப்பித்தது. அதே சமயம் இராணுவம் இரு நாட்களுக்கு ஒரு வழக்கு விசாரணை மன்றத்தையும் நடத்த முடிவு செய்தது. இரண்டுமே கும்பல் கற்பழிப்புச் சம்பவம் உண்மையானதல்ல; ஜோடிக்கப்பட்டது என்று கூறி மூடி மறைத்தன என்கிறார் நீதிபதி தேவ்.

"கும்பல் கற்பழிப்புக்குப் பலியான பழங்குடிப் பெண்களுக்கும் சாட்சிகளுக்கும் கோக்போராக் என்கிற பேச்சுமொழி மட்டுமே தெரியும். உண்மை அறிய நியமிக்கப்பட்ட கமிட்டியில் இருந்த போலீசு துணை சூப்பிரடெண்ட் ஒருவருக்கு மட்டுமே அம்மொழி தெரியும்; மொழிபெயர்ப்பாளரே இல்லாமல் விசாரணை நடந்ததாம்; ஒரு நாளைக்கு எட்டுப்பேரை மட்டுமே விசாரிக்க முடியும், ஆனால் 18 பேரை விசாரித்ததாக கூறப்படுகிறது; அரசு ஆணை இல்லாமலேயே அசாம் துப்பாக்கிப் படையின் மேஜர் உண்மை அறியும் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்; கற்பழிப்புக் குற்றம் சாட்டப்பட்ட 21 துப்பாக்கிப் படையினர் விசாரிக்கப்படவே இல்லை; மூன்று "தீவிரவாதிகள்" அந்தச் சம்பவ நாளில் கைது செய்யப்பட்டதாகக் கூறுவதற்கும் ஆதாரம் இல்லை" என்று கூறும் நீதிபதி தேவ் உண்மை அறியும் கமிட்டி உண்மையை மூடி மறைக்கவே முயன்றது என்கிறார்.

இராணுவம் நியமித்த வழக்குமன்றமோ, அந்தப்பழங்குடிகள் சி.பி.எம்.க்கு ஓட்டளித்தவர்கள் என்பதை வைத்தே கும்பல் கற்பழிப்பு குற்றச்சாட்டு பொய்யானது; பாதுகாப்புப் படையை இழிவுபடுத்தச் செய்த அவதூறு என்று முடிவு செய்துவிட்டது; தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரான இந்த வழக்குமன்ற விசாரணை உள்நோக்கமுடையது; அதை நடத்தியவர்கள் தனது கமிசன் முன்பு வரவே இல்லை என்கிறார் நீதிபதி தேவ்

இந்த வழக்கின் மீதான போலீசு நாட்குறிப்பே மோசடியானது; கற்பழிக்கப்பட்ட பழங்குடிப் பெண்களோ, அசாம் துப்பாக்கிப் படையினரோ மருத்துவ சோதனைக்குட்படுத்தப்படவே இல்லை; பொய்ச் சாட்சிகள் தயாரிக்கப்பட்டனர்; திரிபுரா அரசாங்கம் இந்த மூடி மறைக்கும் முயற்சிக்கு முழு உடந்தையாக இருந்தது என்கிறார் நீதிபதி தேவ்.

இது ஒரு தனிப்பட்ட சம்பவமல்ல. வடகிழக்கு மாநிலங்களிலும், காஷ்மீரிலும், அசாமிலும் குவிக்கப்பட்டுள்ள இராணுவமும் துணை இராணுவங்களும் இப்படிப் பல குற்றங்கள் இழைத்து வருவதாக தொடர்ந்து செய்திகள் வருகின்றன. 'உல்பா'வை ஒடுக்கக் காண்டாமிருக நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட இராணுவத்துக்கு எதிராக கொலை, கற்பழிப்பு குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து மக்கள் போராட்டங்களும் அரசியல் கட்சிகளின் எதிர்ப்பும் கூட வலுக்கிறது.

இருந்தபோதும் சீக்கியத் தீவிரவாதத்தை ஒடுக்குவதாகக் கூறி பஞ்சாபில் இராணுவமும், புலிகளை ஒடுக்குவதாக் கூறித் தமிழ் நாட்டில் துணை இராணுவமும் குவிக்கப்படுகின்றன. இதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதற்கு மேற்படி உச்ச நீதிமன்ற வழக்கே உதாரணமாக உள்ளது. ஆகவே இராணுவம், துணை இராணுவம், போலீசுப் படையினர் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை; அவ்வாறு செய்வது தேச துரோகம் என்கிற பம்மாத்து இனிமேலும் பலிக்காது.

● மாணிக்க வாசகம்

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

தவிர்க்கவியலாத காரணங்களால் 1 - 15 டிசம்பர் இதழ் வெளிவருவது தாமதப்பட்டதால் 16 - 31 டிசம்பர் இதழையும் சேர்த்து ஒரே இதழாக வெளியிட்டுள்ளோம். இதனால் தங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு மிகவும் வருந்துகிறோம். இடமின்மையின் காரணமாக இவ்விதழில் கேள்வி - பதில் இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்

— ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

2 - 3

16-31 டிசம்பர் '91

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராசு
ஆசிரியர், புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# காவிரி:
# தண்ணீருக்காகத் தமிழனின் இரத்தம்

இந்த நாட்டில இதறகு முன்பு பல மதவெறிப் படுகொலைகள் நடந்திருக்கின்றன. சாதிவெறிப் படுகொலைகள் நடந்திருக்கின்றன. ஆனால் இப்போது முதன் முதலாக மிகப்பெரும் அளவிலான, மிகப் பயங்கரமான இனவெறிப் படுகொலைகள் கர்நாடகாவில் நடக்கின்றன. கர்நாடகாவில், குறிப்பாக பெங்களூர் பெருநகரில் பல்லாண்டுகளாகக் குடியேறி அதன் பொருளாதார, தொழில், வர்த்தகம் மட்டுமல்ல, மொழி, கல்வி, பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரும் பங்களித்துள்ள தமிழர்கள் கன்னட வெறியர்களின் கொலை - கொள்ளை - கற்பழிப்பு - தீ வைப்பு - சூறையாடலுக்கு இலக்காகி ஆயிரக்கணக்கில் அகதிகளாக ஓடி வருகிறார்கள்.

தமிழ்நாட்டுக்கும் கர்நாடகாவுக்கும் இடையிலான காவிரி நீர் வழக்கை விசாரிக்கும் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்கமறுத்து சண்டித்தனம் செய்துவந்த கர்நாடக அரசு, காவிரியில் ஏகபோக உரிமை பாராட்டி எதேச்சதிகாரமாக ஓர் அவசரச் சட்டம் பிறப்பித்தது. அது சட்டவிரோதமானது என உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து வேறுவழியின்றி மத்திய அரசு அரசிதழில் பிரசுரித்தது. இவற்றையும் அடாவடித்தனமாக எதிர்த்து கர்நாடக அரசும் அங்குள்ள அனைத்துக் கட்சியினரும் "பொது அடைப்புப் போராட்டம்" நடத்தினர். அதைத் தொடர்ந்துதான் கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் மீது கடந்த ஒரு வாரமாக இனவெறித் தாக்குதல்கள் நடக்கின்றன.

குறிப்பாக பெங்களூரின் புறநகர் பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான கன்னட வெறியர்களும், குண்டர்களும் திரட்டப்பட்டு தமிழர் வீடுகளில் புகுந்து ஆண்களையும், குழந்தைகளையும் கோரமான முறையில் வெட்டியும் குத்தியும் கொன்று சாக்கடைகளிலும், சாலைகளிலும் வீசுகின்றனர்; தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துக் கொல்லுகின்றனர்; வீடுகளைச் சூறையாடி - கொள்ளையிட்டுக் கொளுத்துகின்றனர்; தமிழருக்குச் சொந்தமான சிறிய - பெரிய தொழிற்சாலைகள், கடைகள், சினிமாக்கள், வாகனங்கள் இதேபோன்று அழிக்கப்படுகின்றன. குறைந்தது ஆயிரம் பேராவது கொல்லப்பட்டு, ஐம்பதாயிரம் பேராவது அகதிகளாக ஓடிவந்துள்ளார்கள் என ஆளும் கட்சிகளின் தமிழக எம்.பி.க்களே கூறுகின்றனர்.

இது ஏதோ சமூக விரோதிகள் புகுந்து தன்னிச்சையாக செய்யும் அட்டூழியங்கள் அல்ல. 1984 நவம்பர், டில்லி சீக்கியர் படுகொலையைப் போன்று திட்டமிட்டு நடத்தப்படுவனவாகும். வெளியில் இருந்து அடையாளம் தெரியாத ஆட்கள் திரட்டப்பட்டு உள்ளூர் பிரமுகர்கள் தலைமை தாங்கிட தமிழ்ப் பெண்களின் தாலி, தமிழர்களின் உடை, வீடுகளில் உள்ள தமிழக் கடவுளர்கள் - நடிகர்களின் படங்களை வைத்து இனங்கண்டு தாக்குதல்கள் நடக்கின்றன. கன்னட சாளுவாலிகர் சங்கம், நடிகர் ராஜ்குமார் ரசிகர் மன்றம் ஆகியன பகிரங்கமாக முன்னின்று இந்த இனவெறி அக்கிரமங்களைச் செய்கின்றன. கலவரங்களைத் தடுத்துத் தமிழர்களைக் காப்பதாகக் கூறி அனுப்பப்பட்ட கர்நாடக சிறப்பு ஆயுதப் போலீசே பங்கேற்றுத் தாக்குதல்களை நடத்துகின்றது. கர்நாடக அரசே, முதல்வர் பங்காரப்பாவும் அவரது மந்திரிகளுமே கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்துவதாக சில கர்நாடக எதிர்க்கட்சித் தலைவர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழர்களைப் படுகொலை செய்து, பயபீதியூட்டி - மிரட்டி பணியவைத்து ("பிளாக் மெயில் செய்து") காவிரி நடுவர்மன்ற தீர்ப்பை முடக்கி விடுவது, மீண்டும் பேச்சுவார்த்தை என்கிற இழுத்தடிப்புக்கு தமிழக அரசை ஒப்புக்கொள்ள வைப்பது. இதுதான் கர்நாடக அரசின் நோக்கம் என்பது அப்பட்டமாகவே தெரிகிறது.

ஓர் ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதியைப் போலவே வடிகால் பகுதிக்கும் அதன் நீரில் உரிமை உண்டு. நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகிய அனைத்து வகையிலும் தமிழ்நாட்டின் பக்கமே உரிமையும் நீதியும் உள்ளது. இதை அங்கீகரிக்காது காங்கிரசு, பாரதீய ஜனதா, ஜனதாதளம் போன்ற ஆளும் வர்க்கக் கட்சிகள், மற்றும் போலிக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் இரு மாநிலங்களும் சமரசமாகவும் பேச்சுவார்த்தை மூலமும் பேசித் தீர்க்க வேண்டும் என்று கூறுகின்றன. கடந்த 16 ஆண்டுகளாக இந்தக் கட்சிகளின் இரு மாநிலப் பிரிவுகளோ அந்தந்தத் தரப்புகளை ஆதரித்து சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்கின்றன. கர்நாடகாவிலுள்ள பிரிவுகளே தமிழர்களுக்கு எதிரான தாக்குதலை ஆதரித்துப் பங்கேற்றுமுள்ளன. இந்தக் கட்சிகள் எல்லாம் போட்டு வரும் தேசிய ஒருமைப்பாடு என்கிற முழக்கம் வெறும் கூப்பாடு தான் என்பதை இப்போது நடக்கும் தமிழினப் படுகொலையே நிரூபித்து விட்டது.

தமிழர்களுக்கு எதிரான இந்தப் படுகொலைகளுக்கு, நேரடி, உடனடிக் காரணமாக கன்னட வெறியர்கள் இருந்தாலும் இதற்கான அதிகபட்ச அரசியல், தார்மீகப் பொறுப்பு மத்தியில் ஆளும் பாசிச காங்கிரசுக் கும்பல்தான். கடந்த காலங்களில் மட்டுமல்லாது, இப்போதும் தமிழ்நாட்டின் நியாயத்தை அங்கீகரித்து அது அமுலாக்க மறுக்கிறது; பிரச்சினையை இழுத்தடிக்க உச்ச நீதிமன்றத்துக்குப் போனது; கண் துடைப்புக்காக அரசிதழில் பிரசுரித்தது; ஆனால் நடைமுறையில் மீண்டும் பேச்சுவார்த்தை நாடகமாடவே முயலுகிறது. நதிகளை இணைக்கும் திட்டம், தேசிய நதிநீர்க் கொள்கை, சமரசத்தீர்வு என்று பொதுவாகப் பேசி நழுவ முயலுகிறது. இப்போது தமிழர் உரிமை, உயிருக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் திராவிடக் கட்சிகளும் இந்தக் காங்கிரசு மோசடிகளுக்கு உடந்தையாக இருந்தவைதாம். இப்போதும் கன்னட எதிர்ப்பு அவர்களது குறியாக இருக்கிறது. ஆனால் தமிழர் - கன்னடர் போன்ற ஒடுக்கப்பட்ட இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடும் ஆளும் பாசிச கும்பல்களுக்கு எதிரான போராட்டம் இல்லாமல் எந்தவொரு நீதியையும், உரிமையையும் பெறவே முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

# பாசிச வேட்டையின் நோக்கங்கள்

தி.மு.க தலைவர் கருணாநிதி கைது செய்யப்பட்டதாக வதந்திகள் பரவி போக்கு வரத்துகள் நிறுத்தப்பட்டு வாகனங்கள், குறிப்பாக பஸ்களும் கடைகளும் தாக்கப்படுவது இங்கே, சென்னையில் அடிக்கடி நடக்கிறது. தமிழ் நாட்டின் வேறுசில நகரங்களிலும் இப்படி நடப்பதாக அவ்வப்பொழுது செய்திகள் வருகின்றன. எப்போதும் கலவரங்கள் மூளும், தாக்கப்படலாம் என்கிற பயபீதியிலேயே சிறிய - நடுத்தர வியாபாரிகள், தொழிலாளர்கள், அலுவலர்கள் குறிப்பாக உழைக்கும் பெண்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரசியல் அனுதாபம் தேடுவதற்காகக் கருணாநிதியே பரப்பிவிடும் வதந்தியும் விளைவும்தான் இவை என்று பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் கூறுகிறது. ஆனால், "ஆதாரங்கள் சிக்கிவிட்டன; விரைவில் முக்கிய அரசியல் புள்ளிகள் பிடிபடுவார்கள்; யாரும் தப்பிக்க முடியாது" என்று போலீசுக்காரர்களே அடிக்கடி பேட்டியளிக்கிறார்கள்; வதந்திகளைப் பரப்புகிறார்கள் என்பதுதான் உண்மை.

இதிலிருந்து மோப்பம் பிடித்துக்கொள்ளும் அரசியல் கிசுகிசு பத்திரிக்கைகள் இன்னின்னார்கள் கைதாவார்கள் என்று வாரா வாரம் "பரபரப்பான" பட்டியல்கள் வெளியிடுகின்றன. அவை மட்டுமல்ல, பிரபலமான, ஆட்சியாளர்களுடன் நெருக்கமான பல ஆங்கில ஏடுகளும் கூட "கருணாநிதியும் இன்னும் சில தி.மு.க. தலைவர்களும் அதிகாரிகளும் கைதாவார்களா என்கிற சந்தேகம் இப்போது மறைந்துவிட்டது. அவர்கள் எப்போது கைதாவார்கள் என்கிற கேள்விதான் உள்ளது" என்றும் "கருணாநிதி மற்றும் அவரது சகாக்களுடைய கழுத்தை சுற்றும் கயிறின் பிடி இறுகுகிறது" என்றும் "கருணாநிதி சுடுமணலில் சிக்கிக் கொண்டது போல பதறுகிறார்" என்றும் (ஊகங்களாகவும் செய்திகளாகவும் சேர்த்து) எழுதுகின்றன.

அதே சமயம் ஜெயலலிதா தனது அரசியல் எதிரிகளுக்கு எதிரான கைது போன்ற நடவடிக்கைகளில் அவசரம் காட்டக்கூடாது; தகுந்த ஆதாரங்கள், தயாரிப்புகள் இல்லாமல் போனால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளே அரசியல் பழிவாங்குதலாகக் கருதப்பட்டு எதிரிகள் மீது அரசியல் அனுதாபத்தை ஏற்படுத்திவிடும் என்று பார்ப்பன - பாசிச ஜெயாவின் பாதந்தாங்கும் பத்திரிக்கைகள் எச்சரிக்கின்றன. அந்த அளவுக்கு வெறியோடும் வேகத்தோடும் பாசிச அடக்கு முறைகள் ஏவிவிடப் படுகின்றன.

ராஜீவ் கொலையையும் தேர்தல்கள் முடிந்து பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் மிருக பலத்துடன் பதவியேற்றதையும் தொடர்ந்து வந்த ஆரம்ப நாட்களில் ஓரிரு புரட்சிகர அமைப்புகள் தவிர அனைத்து அதிகார பூர்வ எதிர்த்தரப்பினரும் கையது கொண்டு மெய்யது பொத்தி பக்கவாதம் வந்தவர்களைப் போல முடங்கிப் போனார்கள். அவர்களில் எவரும் ராஜீவ் கொலை விசாரணை என்கிற பெயரில் மத்திய சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழுவும், மாநில கியூ பிரிவு போலீசும் மேற்கொண்ட அத்துமீறல்களை எதிர்க்கத் துணியவே இல்லை.

ராஜீவ் கொலைக்குக் காரணமானவர்களைத் தேடுவது என்கிற பெயரில் ஈழ அகதிகள் அனைவர் மீதும் பாய்ந்து, அகதி முகாம்களைத் திறந்த வெளிச் சிறைகளாக்கியது; வெளியில் தங்கியுள்ள அகதிகளை வேட்டையாடியது; நூற்றுக் கணக்கானோரைக் கைதுசெய்து சித்திரவதை செய்து, சட்டவிரோதமாகச் சிறையலடைத்தது; ஒருசிலரை மட்டுமே வழக்கு மன்றதுக்குக் கொண்டு வந்து, அவர்களையும் கொடிய "தடா" சட்டத்தின் கீழ் பூட்டியது; போராளிகளுக்கு எதிராக அருவெறுப்பான அவதூறுகளையும், மர்மக் கதைகளையும் பரப்பியது; முக்கிய சாட்சியமாகக் கருதப்பட்ட வேதாரண்யம் சண்முகத்தைக் கொன்றது; ராஜீவ் கொலையில் சம்பந்தமில்லாதவர்கள் என்று தெரிந்தும் கோவை ராமகிருட்டிணன், ஆறுச்சாமி போன்றவர்களைத் "தடா"வின் கீழ் கைதுசெய்தது; ராஜீவ் கொலையில் நேரடித் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் சிவராஜன் - சுபா ஆகியோர் பிணமாகப் பிடிபட்ட பின்னரும் சி.பி.ஐ. மற்றும் கியூ பிரிவு போலீசு வேட்டை நிற்கவில்லை; இவர்களிடம் சிக்குவதை விட சாவதே மேலானது என 25 ஈழப் போராளிகள் சயனைடு குப்பிகளைக் கடித்து மாண்டுபோயினர்.

இவ்வளவும் நடந்த மூன்று மாதங்களாக அதிகாரப் பூர்வ எதிர்த் தரப்பினர் எவரும் மூச்சு விடவில்லை, முடங்கியே இருந்தனர். இவற்றைக் கண்டு பொறுக்காது ஈழ அகதிகள் மற்றும் ஈழப் போர்ராளிகளது ஜனநாயக உரிமைக்கும் ஈழ விடுதலைக்கும் ஆதரவு தெரிவித்து புரட்சிகர, ஜனநாயக அமைப்புகள் பிரச்சாரம் துவங்கின. உடனே அவர்கள் மீதும் பாய்ந்த பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல், புலிகள் ஆதரவாளர்கள் என்று முத்திரை குத்தி தேச துரோகம், தேசியப் பாதுகாப்பு, தடா முதலிய கறுப்புச் சட்டங்களை ஏவி நூற்றுக்கணக்கானோரைச் சிறையிலடைத்தது. அறைக் கூட்டங்கள், பத்திரிக்கையாளர் கூட்டங்களைக் கூட தடை செய்தது; சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தாக்குதலை மீறிவந்த புதிய ஜனநாயகத்தின் மீதும் தேசத் துரோக வழக்குகள் போட்டு முடக்கிட முனைந்தது.

ராஜீவ் கொலைவழக்கை விசாரிப்பது என்பதாகத் தொடங்கி விடுதலைப் புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் மட்டுமல்ல; அனைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளையும், அரசியல் எதிரிகளையும் ஒடுக்குவது என்பதாக மத்திய, மாநில ஆளும் பாசிச கும்பல்கள் தமது கைவரிசைகளை விரிவு படுத்தினர். அவை தத்தமது சொந்த நலன்களுக்காக உடன்பட்டு செயல் படுகின்றன.

மத்தியில் ஆளும் காங்கிரசு பாசிச கும்பலைப் பொருத்தவரை ராஜீவ் கொலை வழக்கில் சிவராஜன், தானு, சுபா ஆகிய ஒரு சிறு குழுவினர் மட்டுமல்ல; விடுதலைப் புலிகளின் தலைமையே, குறிப்பாக பிரபாகரனே சம்பந்தப்பட்டிருப்பதாகவும் முடிந்தால் சர்வதேச சதியே பின்னணியாக இருப்பதாகவும் ஆதாரங்களைக் "கண்டுபிடிக்க" முயலுகிறது. விடுதலைப் புலிகள் இந்தியாவில் மட்டுமல்ல. வேறு பிற நாடுகளிலும் "சுய சார்பாக" உருவாக்கிக் கொண்டிருக்கும் செய்தித் தொடர்பு, ஆயுதக் கொள்முதல், நிதிதிரட்டல், மருத்துவ வசதி மற்றும் சமூக - அரசியல் ஆதரவு வலைப் பின்னலைத் தகர்த்து விடுவது; இதன் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எஃப், பிளாட், டெலோ, ஈ.என்.டி.

"தடா" சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டுள்ள கருணாநிதியின் சகாவும், முன்னாள் உள்துறை செயலாளருமான நாகராஜன்; பழிவாங்கும் நடவடிக்கை.





படிப்பகம்

www.padippakam.com

எல்.எஃப் போன்ற குழுக்களை மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்கிற யுத்த தந்திரத்தோடு செயல்படுகிறது.

இதற்காக மாநிலத்தில் ஆளும் ஜெயா பாசிச கும்பல் முழு ஒத்துழைப்புத் தரும் போதே தனது சொந்த நோக்கத்தோடும் செயல்படுகிறது. பொதுவில் விடுதலைப் புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களான பிளவுவாத, தீவிரவாத சக்திகளையும் ஒடுக்குவதாகக் கூறிக் கொள்கிறது; குறிப்பாக பத்மநாபா கொலை, காவற்சாவடி போலீசுக்காரர் கொலை ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் மீதான நடவடிக்கைகள் எனக் காட்டிக் கொள்கிறது. ஆனால், இதையும்விடப் பெரிய, பரந்த நோக்கத்தோடு பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் செயல்படுவதாகத் தெரிகிறது. கருணாநிதி போன்ற தனது உடனடி எதிரிகளை சொந்த முறையிலும், அரசியல் முறையிலும் பழிவாங்குவது அதன் பல்வேறு நோக்கங்களில் ஒன்றுதான். தனது பார்ப்பன சனாதன மீட்பு நடவடிக்கைகளை மூடி மறைக்கவும், பாசிச அரசியலை நியாயப்படுத்தவும் புலிகள் எதிர்ப்பு - ஒழிப்பு முயற்சியையே முகாந்திரமாக வைத்து அனைத்து புரட்சிகர, ஜனநாயக சக்திகளையும் அரசியல் எதிரிகளையும் அடக்கி ஒடுக்குவதே ஜெயா கும்பலின் விரிந்த நோக்கமாக உள்ளது. இந்த நோக்கத்தோடுதான் ''கியூ'' பிரிவு போலீசு ஏற்கனவே முடுக்கிவிடப்பட்டுள்ளது. இப்போது இதற்காகவே சிறப்பான அதிகாரம் மற்றும் கூடுதலான நிதி - ஆள் பலத்துடன் கூடிய தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்த போதும், தேர்தல்களின் போதும், ராஜீவ் கொலையைத் தொடர்ந்தும் காங்கிரசு, அ.தி.மு.க, ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. ஆகியவற்றின் பார்ப்பன - பாசிச கும்பல்கள் பரப்பி வந்த பொய்களையும் அவதூறுகளையும் உண்மையானவை தாம் என்று நிரூபிக்கும் வேலைகளில் மத்திய மாநில உளவுப் படையினர் இறக்கிவிடப்பட்டுள்ளனர். புலிகள் - தி.மு.க. கூட்டுகாரணமாக தமிழ்நாட்டில் ஆயுதக் கலாச்சாரம் பரவி விட்டதாகக் கூறிய பொய்யை உண்மையானதென நிரூபிப்பதற்காக ஆங்காங்கே ஆயுதக் கிடங்குகள், தொழிலகங்களையும், செய்தித் தொடர்புகளையும் கண்டுபிடித்ததாகப் புளுகுகின்றன. தமிழ்நாட்டுக் கடற்கரை நெடுக ஆயுதங்கள், டீசல், பெட்ரோல், செய்தித் தொடர்புச் சாதனங்கள் கைப்பற்றப்பட்டதாக ஆயிரக் கணக்கான போலீசாரைத் திரட்டி சூரப்புலி தேவாரம் நாடகமாடியதை பார்ப்பன -பாசிச ஜெயா கும்பலின் ஊதுகுழலான ஜூனியர் விகடனே எழுதியது.

ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாக குண்டு சாந்தன், குணராஜ் ஆகிய போராளிகளை பிடிக்க முயன்றதில் சாந்தன் மர்மமாக மாண்டு போனதாகக் கூறினர்; இது தொடர்பாக தி.க. பிரமுகர்கள் செபஸ்தியன், ஆனந்தராஜ், வாசுகி என்கிற பெண் ஆகியோரைக் கைது செய்தனர்.

இறந்துபோன சாந்தன், பிடிபட்ட புலிகள் ஆகியோரிடம் இருந்து சிக்கிய ஆதாரங்கள், கப்பலில் கிடைத்த டைரியிலிருந்து தெரிந்த விவரங்கள் என்கிற பெயரில் திருச்சி வக்கீல் மருதநாயகம், டாக்டர் கோபால கிருட்டிணன், சென்னை வக்கீல் வீரசேகரன் போன்ற மேலும் பலரைக் கைது செய்தது தமிழ்நாடு ''கியூ'' பிரிவு போலீசு. புலிகளுக்குத் தஞ்சமளித்ததாக தி.மு.க. மக்களவை எம்.பி. வை.கோபால்சாமியின் தம்பி ரவிச்சந்திரனைக் கைது செய்தது. இவர்கள் அனைவரும் பத்மநாபா மற்றும் பட்டினம் சாத்தான் காவற்சாவடி கொலைகளில் சம்பந்தப்பட்டிருப்பதாக வழக்கு ஜோடித்து ''தடா''வின் கீழ் அடைத்தது.



''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள (வை.கோபால்சாமியின் தம்பி) ரவிச்சந்திரன் மற்றும் வழக்கறிஞர் வீரசேகரன்; பாசிச வேட்டை.

இவர்கள் தவிர திண்டுக்கல், பழனி, உடுமலை பகுதிகளில் தி.க.(ரா) குழுவைச் சேர்ந்த சில இளைஞர்களைப் பிடித்து அவர்கள் ''தமிழர் மீட்புப் புரட்சிப்படை'' அமைத்திருப்பதாகவும் ஈழத்தில் பயிற்சி பெற்றுத் திரும்பியதாகவும், ஆயுதங்கள் - தங்கம் முதலிய கடத்தல் பொருட்களுடன் சிக்கியதாகவும் கதை கட்டி விட்டது.

மத்திய, மாநில உளவுப் படையினர் மேற்கொண்ட இப்படிப்பட்ட வேட்டையின் உச்சகட்டமாக கருணாநிதியின் சகாவும் முன்னாள் போலீசுத்துறை செயலருமான நாகராஜனைக் கைது செய்தது. கொலைகாரர்கள் தப்பிப்போகவும், தஞ்சம் புகவும் நாகராஜன் தவிர கருணாநிதி மகன் அழகிரி, முன்னாள் மந்திரிகள் நேரு, தங்கவேலு, சுப்புலட்சுமி ஆகியோரும் உதவியதாக செய்தி பரப்பியது. அதுவரை மத்திய, மாநில உளவுப்படைகள் மேற்கொண்டு வந்த பாசிச ஒடுக்குமுறைகளைக் கண்டு கொள்ளாதிருந்த கருணாநிதி கட்சியினர், நாகராஜன் கைதுக்குப் பின்னரும், வீரமணி, வீரசேகரன் கைதுக்குப் பின்னரும் தான் ''தடா'' என்பது கொடியது என்று தெரிந்து கொண்டனர். கூச்சல் போடத் துவங்கினர்.

அடுத்து பார்ப்பன - பாசிச ஜெயாவின் நேரடி மேற்பார்வையில் உளவுப்படை கருணாநிதியையே குறிவைத்தது. மிரட்டியும் துன்புறுத்தியும், ஆசை காட்டியும் தாமே தயாரித்த சாட்சிய வாக்குமூலத்துக்கு ஒப்புக் கொள்ளும்படி நாகராஜன் நிர்ப்பந்திக்கப் பட்டார். கருணாநிதி மற்றும் சில அதிகாரிகளுக்கு எதிரான அந்த வாக்குமூலப் பிரதியை திருத்தியும் ''தடா'' சட்டத்தின் விதிகளுக்கு மாறாக பத்திரிக்கையாளர் கூட்டம் நடத்தியும் போலீசே காட்டிய அந்தப் பிரச்சார முயற்சிகள் இதை அம்பலப்படுத்தி விட்டது.

இதனால் அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடுதான் ஜெயலலிதா கும்பல் செயல்படுகிறது என்பதை மறைமுகமாக ஒப்புக் கொள்ளும்படி பார்ப்பன ஏடுகளே நிர்ப்பந்திக்கப்பட்டன. எதிர் விளைவு ஏற்பட்டுவிடக் கூடாது, எச்சரிக்கை தேவை என பார்ப்பன - பாசிச கும்பலுக்கு நெருக்கமானவர்கள் கொடுக்கும் உபதேசப்படி இப்போதைக்கு கருணாநிதி கைது போன்றவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 1983-இல் இருந்து புலிகள் விவகாரம் குறித்து நீதி விசாரணை வேண்டுமெனக் கருணாநிதி கோருவதும் அவர்களது தயக்கத்துக்குக் காரணமாக உள்ளது.

பகிரங்கமான வழக்கு விசாரணை மத்திய, மாநில உளவுப் படைகளின் ஜோடனைகளை அம்பலப்படுத்தி விடும் என்பதால்தான் ''தடா''வின் கீழ் இரகசிய விசாரணைகள் நடத்தப்படுகின்றன. எதிர்த்தரப்பினருக்குப் பல உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தன்னையும் தனது சகாக்களையும் காத்துக் கொள்வதற்குமேல் கருணாநிதி எதற்கும் துணியமாட்டார். வீரமணியும் அவர் மூலமாக ராமதாசும் ஜெயலலிதா கும்பலுடன் மறைமுக சமரசம் செய்துகொண்டு எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்று பெயரளவிற்கான எதிர்ப்பே காட்டுகின்றனர். இந்த நிலையில் மத்திய - மாநில ஆளும் பாசிச கும்பல்களின் எல்லா உள் நோக்கங்களையும் அம்பலப்படுத்தி முறியடித்திட வேண்டிய பொறுப்பும் தகுதியும் புரட்சிகர, ஜனநாயக சக்திகளுக்கு மட்டுமே உள்ளது.

● ஆர்.கே.

www.padippakam.com

# இடைத்தேர்தல்கள்: தில்லுமுல்லுச் சாதனைகள்

அண்மையில் நடந்து முடிந்த இடைத்தேர்தலில் நந்தியால் தொகுதியில் போட்டியிட்ட ஆந்திராவின் மண்ணின் மைந்தரான பிரதமர் நரசிம்மராவ் வெற்றி பெற்று விட்டார். சாதாரண வெற்றி அல்ல; வரலாறு காணாத வெற்றி! தேர்தல் பிரச்சாரத்துக்காக இத்தொகுதிக்குச் செல்லாமலேயே 5,80,297 வாக்குகள் பெற்று உலக சாதனையை - ''கின்னஸ்'' சாதனையை நிகழ்த்தியுள்ளார். ஆளும் வர்க்கப் பத்திரிகைகள் அவரது சாதனையையும் வெற்றியையும் உச்சி முகர்ந்து, ராஜீவுக்குப் பிறகு மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவராக நரசிம்மராவ் தன்னை நிரூபித்துக் காட்டிவிட்டார் என்று பாராட்டுகின்றன.

ஆனால் இந்த வெற்றியானது, பீற்றிக் கொள்ளப்படும் நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கிவிட்டு கள்ள ஓட்டு, வன்முறை, கிரிமினல் அட்டூழியங்களின் மூலம் சாதித்த வெற்றி. காங்கிரசு யுத்தப் பிரபுக்களின் துப்பாக்கி ஜனநாயகத்தின் வெற்றி!

நந்தியால் தொகுதியை உள்ளடக்கிய ஆந்திராவின் ராயலசீமா பிராந்தியம் ஏற்கனவே தேர்தல் வன்முறைகளுக்குப் பெயர் பெற்ற பகுதியாகும். ரெட்டி சாதிவெறி நிலப்பிரபுக்கள் தான் இப்பகுதியின் தேர்தல் வெற்றி - தோல்விகளைத் தீர்மானிக்கிறார்கள். இன்றும் கூட கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்கு காடுகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் நிலப்பிரபுக்களை எதிர்த்து சுதந்திரமாக வாக்களிக்க முடியாது.

அக்டோபர் - 10ந் தேதியன்று நரசிம்மராவ் வேட்புமனு தாக்கல் செய்தார். 11-ம் தேதியிலிருந்து வேட்பு மனு தாக்கல் செய்யும் இடமான கர்னூல் மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் 50-60 காங்கிரசு குண்டர்கள் காவலுக்கு நின்றனர். நரசிம்மராவை எதிர்த்துப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய வருவாரை முன்கூட்டியே கடத்திச் செல்வதுதான் இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலை. மாநில காங்கிரசு பொதுச் செயலாளரான பிரகாஷ் ரெட்டியும், நந்தியால் தொகுதியில் நரசிம்மராவ் போட்டியிட தனது பதவியை ராஜினாமா செய்த கங்குலு பிரதாப் ரெட்டியும் மற்றும் மூன்று எம்.எல்.ஏக்களும் இக்குண்டர் படையை தலைமையேற்று வழிநடத்தினர். தமிழகம், கர்னாடகத்திலிருந்து வேட்புமனு தாக்கல் செய்யச் சென்றவர்கள் மட்டுமல்ல; ஆந்திராவைச் சேர்ந்த பல சுயேட்சை வேட்பாளர்களும் இக்குண்டர்களால் கடத்திச் செல்லப்பட்டு, மத்திய மந்திரி விஜய பாஸ்கர் ரெட்டியின் உறவினருக்குச் சொந்தமான மாதவி லாட்ஜில் அடைத்து வைக்கப்பட்டனர். அங்கு குண்டர்களால் சித்திரவதை செய்யப்பட்டவர்கள், வேட்பு மனுத்தாக்கலுக்கான இறுதி நாளுக்குப் பிறகே விடுவிக்கப்பட்டனர்.

அட்மாகூர் எனும் தாலுகா நகரத்தைச் சேர்ந்த வழக்கறிஞரான அனுமந்த ரெட்டி அக்.14 அன்று வேட்புமனு தாக்கல் செய்யச் சென்றார். கர்னூல் கலெக்டர் அலுவலகத்திலிருந்த குண்டர்கள் அவரைக் கடத்திச் செல்ல பலவாறு முயற்சித்தனர். அவர்களிடமிருந்து எப்படியோ தப்பித்து உள்ளே நுழைந்துவிட்ட அவருக்கு வேட்புமனு விண்ணப்பம் தராமல் அதிகாரிகளும் ஊழியர்களும் இழுத்தடித்தனர். விண்ணப்பபடிவம் பெற ஒவ்வொரு அலுவலகப் பிரிவுக்கும் ரகசியமான அலைந்து கொண்டிருந்த அவரை காங்கிரசு செயலாளரான பிரகாஷ் ரெட்டி சட்டையைப் பிடித்து இழுத்து பளாரென அறைந்தார். உடனே குண்டர்கள் ஓடி வந்து அவரைத் தாக்கி அலுவலகத்துக்கு வெளியே அமர்ந்திருந்த இதர காங்கிரசு தலைவர்களின் காலில் விழச் செய்தனர். பிறகு அவர் மாதவி லாட்ஜில் சிறை வைக்கப்பட்டார்.

அனுமந்த ரெட்டிக்கு என்ன நேர்ந்ததோ அதுதான் ராயலசீமா ரயத்து சங்க (விவசாய சங்க) தலைவரான சஞ்சீவ ரெட்டிக்கும், காகினாடாவைச் சேர்ந்த ஒரு சோதிடருக்கும், குவாலியரைச் சேர்ந்த ஒரு இளைஞருக்கும், ஐதராபாத்தின் ஆசிரியரான மஸ்தான் வாலிக்கும், தமிழகத்தைச் சேர்ந்த வீரப்ப கவுண்டருக்கும் நேர்ந்தது. அக் 18-ந் தேதிக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்ட இவர்களில் சிலர் தமக்கு நேர்ந்த கொடுமைகளைப் பற்றி பத்திரிகைகளுக்கு பேட்டியளித்த பின்னரும் தேர்தல் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

> ''பிரதமர் நரசிம்மராவின் நந்தியால் தொகுதி வெற்றியானது கள்ள ஓட்டு, வன்முறை, கிரிமினல் அட்டூழியங்கள் மூலம் சாதித்த வெற்றி! காங்கிரசு யுத்தப் பிரபுக்களின் துப்பாக்கி ஜனநாயகத்தின் வெற்றி!''



எல்லாவற்றையும் விட, சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த ஐதராபாத் உயர்நீதி மன்ற வழக்கறிஞரான கோடி ரெட்டிக்கு நேர்ந்த அனுபவம் மிகக் கொடுமையானது. தனது உறவினரான ஆலம்பூர் தொகுதியின் பாரதீய ஜனதா கட்சி எம்.எல்.ஏ உதவியுடன், நந்தியால் தொகுதியில் போட்டியிடும் பாரதீய ஜனதாவின் வேட்பாளரான பங்காரு லட்சுமணனுடன் சேர்ந்து கலெக்டர் அலுவலகம் வந்த அவர், ஓசைப்படாமல் வேட்புமனுதாக்கல் செய்துவிட்டார். பங்காரு லட்சுமணனின் பதிலி (டம்மி) வேட்பாளராக அவர் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கருதி காங்கிரசு குண்டர்கள் அசட்டையாக இருந்துவிட்டனர். அக்.21-ந் தேதிதான் அவர்களுக்கு உண்மை தெரிந்தது. உடனே குண்டர் படை ஐதராபாத்துக்கு விரைந்தது.

கோடி ரெட்டியின் வீட்டை முற்றுகையிட்ட காங்கிரசு குண்டர்கள் அவரது மகனை மிருகத்தனமாக தாக்கியதோடு, அவர்களது காரையும் உடைத்து நொறுக்கினர். அவரது மகன் போலீஸ் நிலையத்துக்குச் சென்று புகார் கொடுத்தார். புகாரை ஏற்க மறுத்த போலீசார், அவரை வேறொரு கிரிமினல் வழக்கில் முடிச்சுப் போட்டு குற்றவாளியாக்கி சிறையில் அடைத்தனர். பீதியடைந்த கோடி ரெட்டி அடுத்த வாரமே வேட்புமனுவை திரும்பப் பெற்றுக் கொள்வதாக அறிவித்தார்.

கடைசியில் ஒரு பாரதீய ஜனதா வேட்பாளரும், இரண்டு 'நக்சல்பாரிகுழு'க்களின் வேட்பாளர்களும் ஒரு தாழ்த்தப்பட்ட சுயேட்சை எம்.எல்.ஏவும் மற்றும் மூன்று சுயேட்சைகளும் மட்டுமே நரசிம்மராவை எதிர்த்து தேர்தலில் போட்டியிட முடிந்தது. தென்னாட்டைச் சேர்ந்த, அதிலும் ஆந்திராவைச் சேர்ந்த ஒருவர் முதன்முறையாக பிரதமராகியுள்ளதால் அவரை எதிர்த்துப் போட்டியிடப் போவதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான தெலுங்கு தேசக் கட்சி அறிவித்தது. இடது, வலது போலிக் கம்யூனிஸ்டுகளும் வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை என்றனர் சந்தர்ப்பவாதமாக.

வேட்புமனு தாக்கலின் போதே தொடங்கி விட்ட ஆள் கடத்தலும் வன்முறையும் தேர்தல் நாளன்று எல்லை மீறிப் போனது. தேர்தல் நாளான நவம்பர் 15, 16 தேதிகளில் கொட்டிய பெருமழையின் காரணமாக வாக்காளர்கள் ஓட்டுப் போடவே வரவில்லை. பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சி நிலையத்தாரும் மாலை 4 மணிவரை துல்லகடா சட்டமன்றத் தொகுதியின் பெரும்பாலான வாக்குச் சாவடிகள் காலியாக இருந்ததாகக் கூறினர். அனைத்து சாவடிகளிலும் 15 முதல் 20% வாக்குகளே பதிவாகியிருந்தன. அன்று மாலை 6 மணிக்கு தேர்தல் அதிகாரிகள் 56% வாக்குகள் பதிவானதாகப் புளுகினர். திடீரென

படிப்பகம்

www.padippakam.com

இந்த சதவீதக்கணக்கு விலைவாசி போல் ஏறத் தொடங்கியது. இரவு 7 மணிக்கு இது 70% ஆக உயர்ந்துள்ளதாகக் கூறிய தேர்தல் அதிகாரிகள் 8 மணி வாக்கில் 75% ஆகிவிட்டது என்றனர். இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?

அட்மாகூர் எம்.எல்.ஏ.வான வெங்கட ரெட்டி 4 லாரிகளில் குண்டர்களுடன் ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் சென்று சர்வசாதாரணமாக வாக்குச் சீட்டுக்களைக் கைப்பற்றி கை சின்னத்தில் முத்திரை குத்திப் போட்டார். சில பத்திரிகையாளர்கள் அவரிடம் இவ்வளவு நேரமாக உங்கள் தொண்டர்களுடன் வாக்குச் சாவடியில் என்ன செய்தீர்கள் என்றுகேட்டனர். ''ராயலசீமா பிராந்தியத்திற்கென தனியே ஒரு தேர்தல் விதிமுறை உண்டு. அதன்படி எனது கடமையைச் செய்துள்ளேன்'' என்றார் அவர். அவரைப் போலவே நந்திகொட்டூர், பனயாம் தொகுதிகளின் காங்கிரசு எம்.எல்.ஏக்கள் தமது கடமையைச் செய்தனர். பல வாக்குச் சாவடிகளில் எதிர்க்கட்சிகளின் தேர்தல் ஏஜெண்டுகளைத் துரத்திவிட்டு காங்கிரசு குண்டர்கள் கள்ள ஓட்டுப் போட்டனர். பல்வேறு பத்திரிகையாளர்களின் கூற்றுப்படி கள்ள ஓட்டுப்பதிவு அமைதியான முறையில் நடந்தது. ஆனால் இதுவே பின்னர் காங்கிரசுக்காரர்களுக்கு புதிய பிரச்சினையாகி விட்டது.

ஏனெனில் 10-வது சுற்று வாக்கு எண்ணிக்கையின்போது பாரதீய ஜனதா வேட்பாளரை விட நரசிம்மராவ் 5.08 லட்சம் வாக்குகளை கூடுதலாகப் பெற்று முன்னணியில் இருந்தார். இதுதவிர இன்னும் 2 சுற்றுகள் பாக்கியிருந்தது. அதையும் சேர்த்தால் 6.1 லட்சம் வாக்குகள் பெற்றதாகிவிடும். இதன்படி பார்த்தால் மொத்தம் பதிவான வாக்குகளில் 94% பேர் நரசிம்மராவுக்கு வாக்களித்ததாக கணக்காகிவிடும். உலகில் இதுவரை கண்டிராதபடி மோசடி என்று அவமானப்பட நேரிடும் என்று பீதியடைந்த காங்கிரசாரும் தேர்தல் அதிகாரிகளும் மீண்டும் தில்லுமுல்லுகளில் இறங்கினர். அடுத்த இரு சுற்று வாக்குகளை எண்ணாமலேயே, 5.8 லட்சம் வாக்குகள் பெற்று நரசிம்மராவ் வெற்றி பெற்றதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்தனர். இந்த அறிவிப்பு காங்கிரசாரிடம் உற்சாகத்தை ஏற்படுத்தவில்லை; ஆனால் நிம்மதியைக் கொடுத்தது.

இம்மோசடிகளையும் வரலாறு காணாத தில்லுமுல்லுகளையும் எதிர்த்து பாரதீய ஜனதா வேட்பாளரும், 'நக்சல்பாரி குழு'க்களின் வேட்பாளர்களும் வாக்கு எண்ணிக்கையைப் புறக்கணித்தனர். வேலுகொடு சட்டமன்ற தொகுதியில் 'நக்சல்பாரி' வேட்பாளரரான சுப்பாரெட்டி 20,000 பேர் கொண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினார். தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள் வழக்கமாகச் செய்யும் புகார்கள் இவை என்று அரசு அதிகாரிகள் இவற்றைக் கண்டுகொள்ளவேயில்லை. தேர்தல் நாளன்று இத்தொகுதியைப் பார்வையிட்ட ஆந்திர சிவில் உரிமை கவுன்சில் தலைவர்களான கண்ணபிரானும், டாக்டர் பாலகோபாலும், ''இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த அவமானகரமான நிலையை கண்கூடாகப் பார்க்க முடிந்தது'' என்றனர்.

## நரசிம்மராவ் ஏழையா?

சென்ற மாதம் நடந்த இடைத் தேர்தலில் அதிகப் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றி ஈட்டினார், இந்தியப் பிரதமர் நரசிம்மராவ். ''நான் ஏழைகளின் பங்காளன், அதனால்தான் மக்கள் என்னை நேசித்து இந்து அபார வெற்றியைத் தந்தனர்'' என நரசிம்மராவும் அவரது பரிவாரங்களும் தம்பட்டமடித்தனர். ஏழைப் பிரதமரின் சொத்துக்களையும், அவரது குடும்பத்தின் நிலையையும் பாருங்கள் உண்மை புரிந்துவிடும்.

நரசிம்மராவ் ஒரு நிலப்பிரபு. அவருடைய தந்தையும், வளர்ப்பு தந்தையும் ஹனம்கொண்டா பகுதியின் நிலப்பிரபுக்கள். நரசிம்மராவுடன் பிறந்த சகோதரர்கள் மனோகர் ராவ், மாதவ்.ராவ் இருவரும் கூட ஹனம்கொண்டாவில் பெரிய பணக்கார விவசாயிகள். நரசிம்மராவின் மூன்று மகன்களும், 5 மகள்களும் நல்ல செல்வ செழிப்போடு வாழ்கிறார்கள்.

ஆந்திரா - வங்காரா பகுதியில் நரசிம்மராவ் குடும்பத்துக்கு சொந்தமான நிலங்கள், 1,169 ஏக்கர் உள்ளது. நில உச்சவரம்பு சட்டப்படி இதில் 941 ஏக்கர் நிலம் உபரி என அறிவிக்கப்பட்டு கிராமத்தில் நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள நிலத்திலும் நரசிம்மராவிற்கும், அவரது 3 மகன்களுக்கும் சொந்தமான நிலங்கள் 35 ஏக்கர்தான். இது அரசிடம் உள்ள புள்ளி விவரப் பொய்கள். நரசிம்மராவ் குடும்பத்திற்கு உண்மையில் 1200 ஏக்கர் நிலத்திற்கு மேல் சொந்தமாக உள்ளன. அரசு தரும் 941 ஏக்கர் நிலம் உட்பட எண்ணற்ற ஏக்கர்கள் பினாமி பெயர்களில் உள்ளன. இதுவன்றி வங்காரா கிராமத்தில் ஒரு பெரிய பண்ணை வீடு உள்ளது. இப்பகுதியில் உள்ள 'மக்கள் யுத்தக்' குழுவினர் நரசிம்மராவின் இச்சொத்துக்களை பறிமுதல் செய்து ஏழைகளுக்கு வழங்கப் போவதாக அறிவித்ததும் அவற்றிற்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு கொடுத்துள்ளார்கள்.

நரசிம்மராவின் முதல் மகன் பி.வி.ரங்காராவ் மட்டும் அரசியலில் நுழைந்து மாநில அமைச்சராக உள்ளார். மற்றொரு மகன் பி.வி.ராஜேஸ்வர் ராவ், ஆந்திராவில் உள்ள சாக்டியா சிமிண்ட் ஆலையின் முதலாளி. மேலும் 'ஹீரோ ஹோண்டா' மோட்டார் சைக்கிள் நிறுவனத்தின் ஹைதராபாத் பகுதியின் முகவர் உரிமையையும் பெற்று நல்ல லாபம் ஈட்டும் தொழிலதிபர். கடைசி மகன் பி.வி.பிரபாகர் ராவ், ஆந்திராவில் புகழ்பெற்ற சின்கிளேர் (Sinclaire) டெலிவிசன் கம்பெனியின் முதலாளி. நரசிம்மராவின் மகள்கள் ஐவரும் தொழிலதிபர்கள், டாக்டர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகளை மணந்து செல்வ செழிப்போடு வாழ்கிறார்கள். நரசிம்மராவின் 30 பேரப் பிள்ளைகளும் ஒரு மேட்டுக்குடி வீட்டு பிள்ளைகளின் சகல வசதிகளுடன் வளர்கிறார்கள். நரசிம்மராவ் பிரதமர் ஆனதும் ஆந்திரா 'நக்சலைட்டுகள்' இவர்களை கடத்தாமல் இருப்பதற்காக 'தனி போலீஸ் படை' மூலம் இவர்களனைவருக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

நம்புங்கள் நரசிம்மராவ் ஏழை! பசுக்களை வேட்டையாட ஓநாய்களுக்கு பசுத்தோல் தேவைப்படத்தானே செய்யும்?

பிரதமரின் தொகுதியே இப்படியென்றால் இடைத்தேர்தல் நடைபெற்ற இதர தொகுதிகளின் யோக்கியதையைப் பற்றி சொல்லவேண்டியதில்லை. மழை காரணமான பெரும்பான்மையான மககள் வாக்களிக்காத போதிலும் கடப்பா தொகுதியில் 70% வாக்குகள் பதிவாகி காங்கிரசு வேட்பாளர் ராஜசேகர ரெட்டி அமோக வெற்றி பெற்றார்! மைதுக்கூரிலுள்ள ஒரு வாக்குச் சாவடியில் பிற்பகல் ஒரு மணிவரை எந்தவொரு வாக்காளரும் வராதபோதிலும் 57% வாக்குகள் பதிவாகியிருந்த அதிசயத்தை முதலாளித்துவப் பத்திரிகையாளர்களே அம்பலப் படுத்தினர்.

ஏற்கனவே கிரிமினல் அரசியலுக்கும் தேர்தல் வன்முறைக்கும் புகழ் பெற்ற உ.பி., பீகார் மாநிலங்களில், தற்போதைய தேர்தலின்போது தில்லுமுல்லு, வாக்குச்சாவடி சூறையாடல், கள்ளஓட்டு, கிரிமினல் - மாபியாக்களின் அட்டகாசம் என இன்னும் ஒரு படி முன்னேறியது. பீகாரில் வன்முறை நடக்காத வாக்குச்சாவடியே இல்லை. 322 வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவிற்கு தேர்தல் கமிஷன் உத்தரவிடுமளவுக்கு அராஜகமும் அட்டூழியங்களும் தலைவிரித்தாடின. கிரிமினல் - மாபியாக்களும், கொள்ளைக்காரர்களுமே வேட்பாளர்களாக போட்டியிட்டதால், வாக்காளர்களுக்குப் பதிலாக ஆயுதமேந்திய குண்டர்களே வாக்களித்தனர். வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொள்வதும், வாக்குச் சீட்டுகளைப் பறித்துச் செல்வதும் சர்வ சாதாரணமாக நடந்ததை பத்திரிகையாளர்களே அம்பலப்படுத்தினர். பல தொகுதிகளில் 20% வாக்குப்பதிவு நடந்தபோதிலும், கள்ள ஓட்டுக்களின் மூலம் அது 60% ஆக உயர்ந்ததை தேர்தல் அதிகாரிகளே ஒப்புக் கொண்டனர். விதிவிலக்கின்றி அனைத்து ஓட்டுக் கட்சிகளும் வன்முறையில் இறங்கிவிட்டபிறகு துப்பாக்கிகளே தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதாக இருந்தன.

வரலாறு காணாத வன்முறை - மோசடித் தேர்தல் என்று பத்திரிகைகளும் முதலாளித்துவ அறிஞர்களும் பகிரங்கமாக ஒப்புக் கொள்கின்றனர். அவர்களின் கூற்றுப்படி, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் முக்கிய தூணாகக் கருதப்படும் தேர்தல் முறை கசாப்புக் கடைக்கு இழுத்து வரப்பட்டு அங்கம் அங்கமாக சிதைக்கப்பட்டு விட்டது. இனி, அதன் தலையைச் சீவி உயிரைப் பறித்து விடுவதுதான் பாக்கிஇருக்கிறது.

● மனோகரன்.

படிப்பகம்

www.padippakam.com



# இட ஒதுக்கீடு மோசடிகள்: திராவிடக் கட்சிகளை அம்பலப்படுத்தும் மண்டல்

**இடஒதுக்கீடு பிரச்சினை பற்றிய திராவிடக் கட்சிகளின் மோசடிகளை மண்டல் கமிசன் அறிக்கை அம்பலப்படுத்துகிறது; எனவேதான் அந்த அறிக்கையை அக்கட்சிகள் முழுமையாக வெளியிடவில்லை என்கிற புதிய ஜனநாயகத்தின் விமர்சனத்தை நிரூபிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட பகுதியை கடந்த இதழில் வெளியிட்டிருந்தோம்.**

**மண்டல் கமிசன் அறிக்கையில் பகுதி-II, தொகுதி-IV அத்தியாயம் II-வதாக பிரசுரிக்கப்பட்டுள்ள டாடா சமூக அறிவியல் கழக ஆய்வறிக்கை மேலும் கூர்மையாகவே திராவிடக் கட்சிகளின் மோசடிகளை அம்பலப்படுத்துகிறது. அதன் முக்கிய அம்சங்களைக் கீழே தருகிறோம்.**

● வகுப்புரிமை என்று சொல்லிக் கொள்ளும் இட ஒதுக்கீடு கோரிக்கையின் பிதாமகன்கள் தமது முன்னோடிகளான நீதிக் கட்சியினர் தாம் எனத் திராவிடக் கட்சிகள் உரிமை பாராட்டிக் கொள்கின்றன. ஆனால், நீதிக் கட்சியும், அதன் கோரிக்கையும் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்பே, ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கே அத்தகைய கண்ணோட்டம் இருந்தது; பார்ப்பனரை மட்டுமல்லாது பிற சாதிகளைச் சேர்ந்தவர்களையும் தமது ஆளும் நிறுவனத்தில் இணைத்துக் கொள்ள முயன்றனர். "1851லேயே அரசாங்கப் பதவிகளிலும் பிராமணர்கள் நுழைவதைக் கட்டுப்படுத்தும்படி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு சென்னை வருவாய்த் துறை வாரியம் அறிவுறுத்தியது." என்கிறது ஆய்வறிக்கை. "சமூகத்தின் ஒடுக்கப்பட்ட அல்லது வாய்ப்புகள் பறிக்கப்பட்ட பிரிவினரின் நலனுக்கான தனிச் சிறப்பான திட்டங்களை இந்தியாவின் மாகாண அரசாங்கங்கள் ஏறக்குறைய நூறாண்டுகளாக அமுலாக்கி வருகிறது. ஒடுக்கப்பட்ட வகுபபு மாணவர்களுக்குச் சிறப்பு வசதிகள் செய்து தருவதற்காக கல்வி நிறுவனங்களுக்கான நிதியை முறைப்படுத்தும்படி 1885இல் உதவிக்கான மானிய முறைமையை சென்னை அரசாங்கம் உருவாக்கியதானது இத்தகைய முதல் நடவடிக்கை" என்கிறது மண்டல் அறிக்கை (பக்:5). "1920 இல் ஆட்சிக்கு வந்த பிறகு நீதிக்கட்சியானது 1881 ஆணையை 1921 இல் விரிவுபடுத்தியது; அதன்படி எல்லா மாவட்டங்களிலுமான நியமனங்களையும் பல்வேறு சமூகத்தாருக்கும் பிரித்து ஒதுக்கும்படி எல்லா இலாக்காக்களின் தலைவர்களையும் பணித்தது." (பக் 14) ஆகவே, நீதிக்கட்சிக்கு முன்பாகவே, ஆங்கிலேயருக்கே பார்ப்பனரல்லாதாருக்கு ஒதுக்கீடு செய்யும் கண்ணோட்டம் இருந்தது. பார்ப்பனர்கள் அரசு மற்றும் பிற தொழிற்துறைப் பணிகளில் நுழைவதைக் கட்டுப்படுத்தவும் முயன்றனர் என்பதே உண்மை.

● திராவிடக் கட்சிகளால் மிகவும் பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்படும் 1927 வகுப்புவாரி அரசாணை பின்வருமாறு இருந்தது.

| | |
|---|---|
| 1. பிராமணரல்லாத இந்துக்களுக்கு 12 பதவிகளில் 5 அதாவது | 42% |
| 2. பிராமணரல்லாத உப பதவிகளில் 2 அதாவது | 17% |
| 3. முஸ்லீம்களுக்கு 12 பதவிகளில் 2 அதாவது | 17% |
| 4. ஆங்கிலோ - இந்தியர்களுக்கு 12 பதவிகளில் 2 | 17% |
| 5. தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கு 12 பதவிகளில் 1 | 8% |
| | 100% |

இந்த இட ஒதுக்கீடுத் திட்டம் 1947 வரை அமலில் இருந்தது .... தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு 8 சதவீத வேலைகள் மட்டுமே அந்த அரசாணையிலிருந்து பார்க்க முடியும்; அவர்களது மக்கள் தொகைக்குத் தேவையானதைவிட இது மிகமிகக் குறைவானதாகும்." ஆகவே பார்ப்பனரல்லாத மேல்சாதி மேட்டுக்குடியினர் தமது நலன்களுக்காக செய்து கொண்ட ஏற்பாடுதான் நீதிக் கட்சியின் இட ஒதுக்கீடு. பார்ப்பனரல்லாதோரிடையே பிற்படுத்தப்பட்டோர், முற்பட்டோர் என்கிற பாகுபாடு இல்லாதது இதையே உறுதிப்படுத்துகிறது.

● "நீதிக் கட்சியின் தலைவர்கள் நிலவுடமை வகுப்புகளில் இருந்து வந்தவர்கள்; தங்களது அணிவரிசையில் நிலமற்ற சாதிகளைச் சேர்த்துக்கொண்டு தமது சமூக அடிப்படையை விரிவுபடுத்திக் கொள்வதில் அவர்கள் அவ்வளவு அக்கறை கொண்டிருக்கவில்லை. பிற பலவீனமான, பிற்பட்ட சாதிகளின் நிலைமைகளை மேம்படுத்துவது மற்றும் சமூக சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் ஒரு குறிப்பான விருப்பமின்மை (அல்லது வெறுப்பை)க் காட்டத் துவங்கினர் என்பதே உண்மை. 1920 களிலேயே நீதிக்கட்சியின் அணிவரிசை சிறுகச் சிறுகக் கரைந்து காங்கிரசுக்குக் கட்சிமாறுவது துவங்கிவிட்டது. காங்கிரசுக்குள் ஊடுருவி, அதன் உள்ளிருந்து அமைப்பைக் கைப்பற்றுவது பிராமணரல்லாதோரின் வியூகமாக இருந்தது. ஜமீன்தார்களைப் பொருத்தவரை தமது நலன்கள், குறிப்பாக அரசாங்கப் பதவிகள் மற்றும் கல்வித் துறைகளிலான நலன்கள் பறிபோய்விட்டதான உணர்வு கொண்டிருந்தார்கள்; அந்த உணர்வை ஒரு பெருமளவு குறைத்திடும் வரலாற்றுப் பணியை 1930 களுக்குள்ளாகவே நீதிக் கட்சி பூர்த்தி செய்துவிட்டது" என்கிறது ஆய்வறிக்கை. ஆகவே இட ஒதுக்கீட்டுத் திட்டத்தை நீதிக்கட்சி யாருக்காகக் கொண்டு வந்தது என்பது தெளிவாகிறது.

● நீதிக்கட்சி செல்வாக்கிழந்து காங்கிரசிடம் தோற்றுப்போனதற்கான காரணம் என்னவென்று கூறாது திரும்பத்திரும்பத் திராவிடக் கட்சிகள் மழுப்புகின்றன. ஆனால், அதன்காரணத்தை பின்வருமாறு ஆய்வறிக்கை தெளிவுபடுத்துகிறது. "பிராமண இளைஞர்கள் வெளியேறிய இடத்தை மேல்சாதி இளைஞர்கள் நிரப்பினார்கள். இட ஒதுக்கீடு தமிழர்களின் அரசியல் உணர்வில் நிலைத்த யதார்த்தமாகியது. எனவே, அக்கட்சி சமூக அடித்தளத்தையும் திடீர் வேகத்தையும் இழந்தது. அது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் வைத்திருந்த நெருங்கிய உறவு காரணமாக மிகவும் களங்கப்பட்டுப் போனது; எனவே, தேசிய அலையின் எழுச்சிக்கு முன்பு தாக்குப் பிடித்து நிற்க முடியவில்லை... சுயமரியாதை இயக்கம் மட்டும் இல்லை என்றால் 60 களின் இறுதியில் கர்நாடகாவில் லிங்காயத்து, ஒக்கலிகா தலைவர்களுக்கு நேர்ந்ததைப் போல சென்னை மாகாண பிராமணரல்லாத மேட்டுக் குடியினர் காலப்போக்கில் கீழ்ச் சாதிப் பிரிவுகளிடம் இருந்து தனிமைப்பட்டுப் போயிருப்பார்கள். 1944 ல் நீதிக்கட்சியானது திராவிடர் கழகமாக மறு ஒழுங்கமைக்கப்பட்டது".

படிப்பகம்

www.padippakam.com

● திராவிடக் கட்சிகளால் மீண்டும் மீண்டும் போற்றப்படும் 1927 வகுப்புவாரி அரசாணையானது 1947இல் மாற்றியமைக்கப்பட்ட போதும் அதுவும் பிரதானமாக பார்ப்பனரல்லாத மேல் சாதிகளின் நலன்களுக்காகவே இருந்தது.

''பிராமணரல்லாத இந்துக்களுக்கு 14 பதவிகளில் 16 அதாவது 43%

பிற்பட்ட இந்துக்களுக்கு 14 பதவிகளில் 2 அதாவது 14%

பிராமணர்களுக்கு 14 பதவிகளில் 2 அதாவது 14%

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 14 பதவிகளில் 2 அதாவது 14%

ஆங்கிலோ இந்தியர், இந்திய கிறிஸ்தவர்களுக்கு 14 பதவிகளில் 1 அதாவது 7%

முஸ்லீம்களுக்கு 14 பதவிகளில் 1 அதாவது- 7%

1947 வகுப்புவாரி அரசாணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால் முதன்முறையாக பிராமணரல்லாத சாதிகளை பிராமணரல்லாத இந்துக்கள் என்றும் பிராமணரல்லாத பிற்படுத்தப்பட்ட இந்துக்கள் என்றும் இது இரண்டாகப் பிரித்தது. இந்தப் பிரிவினை அப்போதிருந்த கல்விச் சலுகைகளுக்கான சாதிப் பட்டியல்களின் அடிப்படையிலானது. வெள்ளாளர், நாயுடு, செட்டியார், ரெட்டி மற்றும் பிற முற்பட்ட சாதிகளை உள்ளடக்கிய பிராமணரல்லாத சாதிகள் மேற்கண்டவாறான இடஒதுக்கீடு குறித்து அதிருப்தி காட்டவில்லை; ஏனென்றால் ஒரு தொகுதியாக 43% வேலைகளில் அவர்களுக்கு இடஒதுக்கீடு தரப்பட்டதில் இது வெளிப்படையாகிறது,'' என்கிறது டாடா சமூக அறிவியல் கழக ஆய்வறிக்கை.

● 1947 இடஒதுக்கீடு அரசாணை உச்ச நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட்டது. அதன் பிறகு 1951இல் வேறொரு அரசாணை வந்தது; அதுவும் 1954இல் சிறு மாற்றமடைந்தது. 1951, மற்றும் 1954 அரசாணைகளில் தான் பொதுப் போட்டிக்கான தொகுதி (59%) எனவும், பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு தனித் தொகுதி (25%) என்றும், தாழ்த்தப்பட்ட பழங்குடி சாதிகளுக்கு (16%) என்றும் இடஒதுக்கீடு வந்தது. இவ்வாறு ஒரு பொதுத் தொகுதியின் கீழ் பார்ப்பனரோடு பார்ப்பனரல்லாத மேல் சாதிகள் தள்ளப்பட்டது குறித்து ஆய்வறிக்கை பின்வருமாறு கூறுகிறது. ''20 ஆண்டுகளுக்கு முன்பு பிராமணரல்லாத இயக்கத்துக்குத் தலைமை தங்கிய ஆதிசைவ வெள்ளாளர்கள், காருகாத்த வெள்ளாளர்கள், முதலியார்கள், கம்மாநாயுடுகள் போன்ற அந்த பிராமணரல்லாத முற்பட்ட சாதிகள் இப்போது வேலைக்கும் இடத்துக்கும் பொதுத் தேர்வுப் பிரிவில் பிராமணர்களுடன் போட்டியிட வேண்டியிருந்தது. பொதுத் தேர்வுப் பிரிவிற்குத் தள்ளி விட்டதால் பிராமணரல்லாத இந்த முற்பட்ட சாதிகள் எவ்வித அச்சுறுத்தலையும் பெறுவதாக இல்லை. அவை ஏற்கனவே தமது அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டன; இந்த மூலாதாரத்தைக் கொண்டு அரசாங்கப் பணித் துறைகளில் போதுமான அளவுக்கு ஊடுருவிட்டார்கள். அவர்களுக்கு பிராமணர்கள் கூட எந்த வகையிலும் கடுமையான போட்டியைத் தர முடியாதவாறு பொதுத் தேர்வுப் பிரிவுக்குள்ளாகவே கூட தங்களுடைய பங்கிற்கு மேலாகவே அவர்கள் பெற முடிந்தது. மேலும் துணை சாதிப் பிரிவுகளின் அடிப்படையில் முற்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்ற வகைப்படுத்தும் தனிச்சிறப்பான முறைமையின் காரணமாக அதையே வரைமுறையின்றிக் கேடாகப் பயன்படுத்துதலும் இருந்தது; இதுபற்றிப் பின்னர் விவாதிப்போம். சுருக்கமாகக் கூறினால், வகுப்புவாரி இடஒதுக்கீடுத் திட்டம் புதிய வடிவத்தில் அமுலுக்கு வந்த போது, பிராமணரல்லாத முற்பட்ட சாதிகள் தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு போதிய சக்தியுடையவர்களாக மாறி இருந்தார்கள். எனவே அவர்கள் எந்த வகையிலும் கண்டித்தெழவோ எதிர்விளைவைக் காட்டவோ இறங்கவில்லை'' என்கிறது ஆய்வறிக்கை.

**பார்ப்பனரல்லாதவர் வகுப்புரிமை என்கிற பெயரில் மேட்டுக்குடி மேல்சாதியினர் நலன்களுக்கும் ஆதிக்கத்துக்காகவுமே திராவிடக் கட்சிகள் பாடுபட்டு வந்துள்ளன.**

● மேற்கண்ட விவரங்கள் காட்டுவதென்ன? 1927 முதல் 1951 வரையிலான இடஒதுக்கீடு பார்ப்பனரல்லாத மேட்டுக்குடி மேல்சாதிகளும் பார்ப்பனர்களும் தங்களுக்குப் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் உண்மையான பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளையும் வஞ்சிப்பதாகவுமே இருந்தது. பார்ப்பனரல்லாதவா வகுப்புரிமை என்கிற பெயரில் மேட்டுக்குடி மேல்சாதி நலன்களுக்கும் ஆதிக்கத்துக்காகவுமே திராவிடக் கட்சிகள் பாடுபட்டு வந்ததைக் காட்டுகின்றன. 1951 முதல் இன்று வரையிலான இடஒதுக்கீடும் கூட பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்குள்ளாகவே ஒரு சில சாதிகள் மட்டுமே பயனடைவதாக இருக்கிறது. 1970ல் வந்த சட்டநாதன் கமிசன் அறிக்கை இதைத் தெளிவாக சுட்டிக் காட்டிய பின்னரும் திராவிடக் கட்சிகள் உண்மையான பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்காக முன்னிற்கவில்லை.

● மேற்கண்ட கருத்தைப் பின் வருமாறு மண்டல் கமிசன் அறிக்கை பகுதி II தொகுதி IV அத்தியாயம் Iல் ஆய்வறிக்கை விளக்குகிறது. ''மொத்தமுள்ள பிற்பட்ட வகுப்புகளின் மக்கள் தொகையில் 11.7% மட்டுமே அடங்கிய 9 சாதிகள் அரசு பதிவிதழ் பெறாத 37.3% பதவிகளையும் அரசு பதிவிதழ் பெற்ற 48.2% பதவிகளையும் சுருட்டிக் கொண்டு விட்டன என்பதை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் கமிசன் திட்டவட்டமாக நிரூபிக்கிறது. பிற சிறிய மற்றும் பலவீனமான பிற்படுத்தப்பட்ட சாதிகள் இடஒதுக்கீடுத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அரசாங்கத் துறைப் பணிகளிலும் கல்விக்கான இடங்களிலும் மேலே சொன்ன பிராமணரல்லாத முற்பட்ட துணை சாதிகள் மட்டுமல்லாது, வேறுபிற 9 பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆதிக்கத்தின் கீழும் கூட வந்துவிட்டன. வடுகர்கள், வீரகோடி -வெள்ளாளர்கள், கவரா நாயுடுகள், சௌராஷ்டிரர்கள், துளுவ வெள்ளாளர்கள், தேவாங்கர்கள், சோழிய வெள்ளாளர்கள், அகமுடையார்கள் மற்றும் சாதுச் செட்டியார்கள் ஆகியவைகளே இந்த 9 சாதிகள்.... பலன்களை எல்லாம் ஒரு கையளவேயான சாதிகள் மட்டுமே சுருட்டிக் கொண்டதைக் கண்ட கமிசன் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் வெவ்வேறு வகைகளுக்காக தொகுதி வாரி இடஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது; ஆனால் கருணாநிதி நிர்வாகம் இப்பரிந்துரையை ஏற்கவே இல்லை.'' சட்டநாதன் அதன் பிறகு வந்த அவசரநிலை ஆளுநர் ஆட்சிக்கும் எழுதினார். அதுவும் கண்டு கொள்ளவில்லை.

இவ்வாறு பெரும்பான்மையினரான பிற்படுத்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டு 9 சாதிகளே இடஒதுக்கீட்டினால் பலனடைந்தன என்பதைச் சுட்டிக் காட்டியும் அதற்குப் பரிகாரம் காணப்படவில்லை என்பது மட்டுமல்ல. கீழே தள்ளிய குதிரை குழியையும் பறிப்பது போன்று கருணாநிதி - எம்.ஜி.ஆர் ஆட்சிகள் மேலும் கேடான முடிவுகள் எடுத்தன. அதாவது ஏற்கனவே ஆதிக்கத்தில் இருந்த

## நன்றி அறிவிப்பு

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

நமது இதழுக்கு அச்சக உரிமம் அளித்துவந்த நீட் பிரிண்டர்ஸ் அச்சகத்தார் மாற்றப்பட்டு தற்போது புதிய அச்சகத்தார் பொறுப்பேற்றுள்ளனர்.

அரசின் நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், பலதரப்பட்ட குழப்பவாதிகளின் அவதூறுகளுக்கு நடுவிலும் புதிய ஜனநாயகம் இதழுக்கு அச்சக உரிமம் அளித்து, கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக நம்முடன் ஒத்துழைத்த நீட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திருமதி. ராஜாத்தி அம்மாள் அவர்களுக்கும் அவரது கணவர் திரு. நவநீதன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு.

**பார்ப்பனரல்லாத மேட்டுக்குடி மேல்சாதியினர் தமது நலன்களுக்காக செய்து கொண்ட ஏற்பாடுதான் நீதிக்கட்சியின் இட ஒதுக்கீடு!**

கொங்கு வேளாளர்கள், சோழிய வேளாளர்கள், கருணீகர்கள் போன்ற முற்பட்ட சாதிகளையும் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் பட்டியலில் சேர்த்தன. இதனால் உண்மையான பிற்படுத்தப்பட்ட சாதிகள் வஞ்சிக்கப்பட்டனர். இவ்வளவையும் அம்பலப்படுத்தும் ஆய்வறிக்கை பல முற்பட்ட சாதிகள் துணை சாதிகளின் பெயரால் மோசடி செய்து வருவதையும் அம்பலப்படுத்துகிறது. உதாரணமாக முற்பட்ட கம்மா நாயுடுகள், கௌரா மற்றும் வடுகநாயுடுகள் என்றும், காருகாத்த வேளாளர்கள், சோழிய வேளாளர்கள் என்றும், வேளாள முதலியார்கள், கைக்கோள செங்குந்த முதலியார்கள் என்றும் போலிச் சான்றிதழ்களைக் காட்டி இடஒதுக்கீடு ஆதாயம் அடைகின்றனர்.

● திராவிடக் கட்சிகளை மேலும் அம்பலப்படுத்தும் முகமாகப் பின் வருமாறு அந்த ஆய்வறிக்கை எழுதியுள்ளது. ''ஒரு கையளவேயான சாதிகளுக்கு இடஒதுக்கீட்டின் பலன்கள் போவது குறித்து பிற்படுத்தப்பட்ட சாதிகளின் மக்கள் தொகையில் 88.7 சதவீதமானவர்களைக் கொண்ட சிறிய மற்றும் பலவீனமான பிற்படுத்தப்பட்ட சாதிகள் ஏன் ஆத்திரமும் வெறுப்பும் கொள்ளவில்லை? இதுதான் முக்கியமான கேள்வி. அவை தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி சாதிகளுடன் ஒன்றாகவே இணைந்து அரசாங்கத்துக்கு நிர்பந்தம் கொடுத்திருக்க முடியுமே! கர்நாடகாவில் இடஒதுக்கீடு மற்றும் அரசியல் முறைமைகளின் இயக்கங்களின் பலன்கள் லிங்காயத்துக்கள் மற்றும் வொக்கலிகா சாதிகளுக்கு மட்டுமே போவதைத் தாழ்த்தப்பட்ட சாதிகள், பிராமணரல்லாத, லிங்காயத்துக்கள் மற்றும் வொக்கலிகாக்கள் அல்லாத சாதிகள் கண்டுபிடித்ததும் அல்லது உணர்ந்ததும் அவை ஆழமான ஆத்திரமும் வெறுப்பும் அடைந்தன . இதை மூலதனமாக்கிக் கொண்ட தேவராஜ் அர்ஸ் இச்சாதிகளை வைத்துத் தனக்கென ஒரு புதிய அடித்தளத்தை வளைத்துப் போட்டுக் கொண்டார். காங்கிரசு கட்சி அமைப்பிலும் அதிகாரத் தாழ்வாரத்திலும் லிங்காயத்துக்களுக்கும் வொக்கலிகாக்களுக்கும் இருந்த அதிகாரத்தைக் குறைத்தார். பிறகு ஒரு அரசாணையின் மூலம் அமுலாக்கப்பட்ட ஹாவனூர் கமிசன் பெரும்பாலான லிங்காயத்துச் சாதிகளை இடஒதுக்கீட்டுத் திட்டத்திலிருந்து நீக்கிவிட்டது. பலவீனமான, சிறுபான்மையினரான பிற்படுத்தப்பட்ட சாதிகளிடம் இருந்து அம்மாதிரியானதொரு அரசியல் இயக்கம் தமிழ்நாட்டில் ஏன் எழவில்லை? இதற்கான பதிலை குறிப்பாக திராவிடர் கழகப் பண்பாட்டில் காணவேண்டும்; அப்பண்பாடு தி.மு.க மற்றும் அ.இ.அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளாலும் பாரம்பரியமாகக் கொள்ளப்பட்டது. மாநிலத்தைத் தமிழ் பண்பாட்டு மீட்புவாதம் கவ்வியிருக்கும் வரை, மக்கள் மனதில் இந்தி எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு, ஆரிய எதிர்ப்பும் பிரச்சினைகள் ஆதிக்கம் வகிக்கும் வரை உண்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் நலன்களுக்கான ஒரு உண்மையான பிற்பட்ட வகுப்புகளின் இயக்கம் தோன்றாது. இந்தக் காரணிகளே பிராமணரல்லாத பல்வேறு சாதிகளுக்கிடையில் ஒரு நெருக்கம் தொடர்வதற்கானதாக இருக்கின்றன. குறிப்பாக திமுக தலைவர்கள் தமிழ் இயக்கத்தின் இனப்பண்பைப் பலவீனப்படுத்தி விடும் எதிலும் நாட்டம் கொண்டவர்கள் அல்ல'' என்கிறது ஆய்வறிக்கை.

☆ ★ ☆

நீதிக் கட்சியும் அதன் வாரிசுகளான திராவிடக் கட்சிகளும் உண்மையில் மேல்சாதி மேட்டுக்குடியின் நலன்களுக்காகவே இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையை அணுகி வந்திருப்பதை மண்டல் கமிசன் அறிக்கையில் உள்ள டாடா சமூக அறிவியல் கழகம் மேற்கண்டவாறு அம்பலப்படுத்துவதால் தான் அக்கட்சிகள் அந்த அறிக்கையை முழுவதுமாக வெளியிடவில்லை என்று நாம் கருதுகிறோம். அதே சமயம் இன்னொன்றையம் நாம் கூறுகிறோம். மேல்சாதி மேட்டுக் குடியின் நலன்களுக்காகப் பாடுபடுவதை மூடிமறைப்பதற்காக திராவிடக் கட்சிகள் எழுப்பும் இந்தி எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு, ஆரிய எதிர்ப்பு என்பதும் கூட தமிழ் இனப் பண்பாட்டைக் காத்து வளர்ப்பதல்ல. இந்த எதிர்ப்புகளும் கூட அவ்வப்போது பயன்படுத்தப்படும் ''பெருங்காய டப்பா'' போன்றதுதான். இந்த விவகாரங்களிலும் அக்கட்சிகள் தேவையான போது சமரசம் செய்து கொண்டு வருவதையும் திராவிடக் கட்சிகளின் வரலாற்றில் காண முடியும். ஆகவே திராவிடக் கட்சிகளின் ''தமிழ் பண்பாட்டு மீட்பு வாதம்'' என்பதும் அதன் மீதான திராவிடக் கட்சிகளின் உறுதி என்பதும் கூட ஒரு மோசடி தான்!

● ஆர்.கே.

# போலிகளின் துரோகப்புத்தி

*நாம் எதிர்பார்த்தவாறே போலிக் கம்யூனிஸ்டுகள் தமது துரோகப் புத்தியை மீண்டும் வெளிப்படுத்தி விட்டார்கள். தி.மு.க., விடுதலைப் புலிகள் பற்றிய கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்; பார்ப்பன எதிர்ப்பு இயக்கத்தைப் பற்றியும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று சி.பி.எம். கட்சி தனது 14-வது மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மக்களது ஆதரவைத் தி.மு.க. திரும்பப் பெறவேண்டுமானால் இது அவசியம் என அத்தீர்மானம் கோருகிறது.*

*தி.மு.க. தனது இரண்டாண்டு ஆட்சியின்போது புலிகளை ஆதரித்ததுதான் ராஜீவ் கொலைக்குப் பிறகு பெருங்கேடான எதிர் விளைவாகிவிட்டது; இதனால்தான் தி.மு.க.வின் கூட்டணி கட்சிகள் கூட மக்களது கடும் கோபத்திலிருந்து தப்ப முடியாமல் போனது என்று போலிக் கம்யூனிஸ்டுகள் இப்போது கண்டுபிடித்துள்ளனர்! இந்திய 'அமைதி' காக்கும் படையை சட்டமன்றத்திலேயே விமர்சித்த கருணாநிதி போராளிகளின் குற்றங் குறைகளைக் கண்டிக்கத் தவறிவிட்டாராம்.*

*சி.பி.எம். கட்சி தனி ஈழம் கோரிக்கையை எப்போதுமே ஏற்கவில்லை; இலங்கைப் பிரச்சினையில் தி.மு.க.வுடனான கருத்துவேறுபாடுகள் குறித்துப் பலமுறை அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறது;. ராஜீவ், பத்மநாபர் கொலைகளைக் கண்டித்திருக்கிறது என்கிறார் அதன் செயலாளர் நல்லசிவம்.*

*புலிகளுக்கும் பஞ்சாப், காஷ்மீர், அசாம் பிரிவினை இயக்கங்களுக்கிடையில் உள்ள தொடர்பு பெரும் கவலையளிப்பதாகவும், புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில் மத்திய, மாநில அரசுகளை முழுமையாக ஆதரிப்பதாகவும் மாநில மாநாடு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அ.தி.மு.க. - காங்கிரசு கூட்டுக்கு எதிராக மக்களைத் திரட்டுவதற்குத் தடையாக இருக்குமாதலால் ''பிராமண எதிர்ப்பு'' இயக்கத்தைத் தி.மு.க. கைவிட வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.*

*இதன் மூலம் ஈழ எதிர்ப்பிலும், பார்ப்பன ஆதரவிலும் சி.பி.எம. கட்சியானது அ.தி.மு.க, காங்கிரசு, ஆர்.எஸ்.எஸ் - பாரதீய ஜனதா கும்பலுக்குத் தான் வால் பிடித்துத் துணை போவதைக் காட்டிக் கொண்டுள்ளது. வெறும் கண்துடைப்பாக அ.தி.மு.க அரசுக்கு எதிராக சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. ஈழப் போராளிகள் மற்றும் இலங்கை விவகாரத்தில் அ.தி.மு.க. - காங்கிரசின் ஊரறிந்த பல்வேறு குற்றங்களையும் பாசிச ஜெயலலிதாவின் பார்ப்பனீய மீட்பு வாதத்தையும் இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள் கண்டு கொள்ளவே இல்லை. பதவிப் பிச்சைக்காக ஆள்காட்டி வேலை செய்யவும் தயங்காதவர்கள் தான் போலிக் கம்யூனிஸ்டுகள் என்பதை மீண்டும் நிருபித்து விட்டார்கள்.*

படிப்பகம்

www.padippakam.com



## காங்கிரசு - பாரதீய ஜனதா கள்ளக்கூட்டு

# இந்து வெறியர்களின் இரத்த யாத்திரை

இரத்த வெள்ளத்தில் மீண்டும் இந்தியாவை தள்ள இந்து வெறியர்கள் ஏக்தா யாத்திரை புறப்பட்டுள்ளனர். எதிர்பார்த்த படியே இந்த யாத்திரை சென்ற இடங்களில் எல்லாம் இரத்த ஆறு ஓடுகிறது.

''பிரிவினை வாதிகளால் காஷ்மீர் கை நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது; சிறுபான்மை இந்துக்கள் துன்புறுத்தப்பட்டு அகதிகளாக ஓடி வருகிறார்கள். இப்பிரிவினை வாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியும் ஆயுத உதவியும் அளிக்கிறது. மேலும், அசாமின் உல்பா பிரிவினைவாதிகள் வடகிழக்கிந்திய பிளவுவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டைத் துண்டாட சதி செய்கின்றனர். புலிகளும் உல்பா தீவிரவாதிகளும் ரகசியமாக கூட்டுச் சேர்ந்து ஆயுதப் பயிற்சியும், ஆயுதப் பரிமாற்றங்களும் நடத்துகின்றனர். இந்நிலையில் பிரிவினைவாத - பிளவுவாத - பயங்கரவாத சக்திகளிடமிருந்து நாட்டைக் காக்கவும் தேசிய ஒருமைப்பாட்டை கட்டி எழுப்பவுமே இந்த ஏக்தா யாத்ரா - ஒருமைப்பாடு யாத்திரை'' என்று இந்து வெறி பாரதீய ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

''பாரதியார் பிறந்த நாளான டிசம்பர் 11ம் நாளன்று துவங்கும் இந்த யாத்திரை 14 மாநிலங்களில் 15,000 கி.மீ. தூரம் பிரச்சாரம் செய்துகொண்டே குடியரசு நாளான ஜனவரி 26ம் நாளன்று ஸ்ரீநகர் சென்றடையும். அங்கு லால் சௌக்கில் இந்தியாவின் மூவர்ணக் கொடி ஏற்றப்படும். இந்த யாத்திரை முஸ்லிம்களுக்கோ இதர சிறுபான்மையினருக்கோ எதிரானதல்ல; மதம், மொழி, பிராந்திய உணர்வுகளைக் கடந்து தேசிய ஒருமைப்பாட்டை கட்டிக்காக்கவே இந்த யாத்திரை'' என்று இந்த நெடும் பயணத்தை தலைமையேற்றுச் செல்லும் பாரதீய ஜனதா தலைவர் முரளி மனோகர் ஜோஷி கூறுகிறார்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளான பகத்சிங் - ராஜகுரு ஆகியோரின் சகோதரர்களும், 1965ல் இந்திய - பாக். போரில் மாண்டு பரம் வீர் சக்ரா பதக்கம் பெற்ற அப்துல் ஹமீதுவின் மகன்களும், முன்னாள் அகாலி மந்திரியான உம்ரா நங்கலும் இந்த யாத்திரை துவக்க விழாவில் பங்கேற்றனர். சீக்கிய இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஜோஷியின் வாகன ஓட்டியாக நியமிக்கப்பட்டார். இவற்றையெல்லாம் காட்டி தமது புனிதயாத்திரை மதம், மொழி, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது என்று இந்துவெறியர்கள் நிருபிக்க முயன்றனர்.

ஆனால், இந்துமுறைப்படி நடந்த 50 மணிநேர யாகமும், மேடையில் ஆதிசங்கரர், விவேகானந்தர் முதலான இந்து மத குருமார்களின் படங்களும், புனிதமண், புனித நீர் கலசங்களும், ''தேசரிய வாஹினி'' என்ற காவியுடை இந்துவெறி குண்டர்படையும் அதன் உண்மைச் சொருபத்தை அம்பலப்படுத்திக் காட்டின. உண்மையில் இந்த யாத்திரையை ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் தான் பின்னாலிருந்து கொண்டு இயக்குகின்றனர். ஆர்.எஸ்.எஸ். தலைவரான தேவரசின் பிறந்த நாள் டிசம்பர் 11 என்பதாலேயே அந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. பாரதீய ஜனதா தலைவர்களைவிட ஆர்.எஸ்.எஸ்.சின் உயர் மட்டத் தலைவர்களான மாதவ ராவ் ஜோஷி, சுதர்சன், கிருஷ்ணப்பா ஆகியோரே யாத்திரையை முன்னிருந்து வழி நடத்துகின்றனர். ''வந்தே மாதரம்'', ''ஜெய் சிறீராம்'', ''காஷ்மீரைக் காப்போம்'' முதலான முழக்கங்களுடன் கிளம்பியுள்ள இந்த யாத்திரையில் காவியுடை அணிந்த ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் ''கேசரிய வாஹினி'' என்ற பெயரில் பிரச்சாரகர்களாகச் செல்கின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், முஸ்லிம்கள் என்றாலே பாகிஸ்தான் கைக்கூலிகள், தேசப்பற்று இல்லாதவர்கள் என்கிற வெறியூட்டும் பிரச்சாரம் செய்து கலவரத்தைத் தூண்டிவிடும் நோக்கத்துடன்தான் இந்த யாத்திரை புறப்பட்டிருக்கிறது. பிரிவினைவாத சக்திகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து நாட்டைத் துண்டாட சதி செய்கிறது என்று தேசிய வெறியூட்டியும், பிரிவினைவாத பீதியூட்டியும் இந்து ஒற்றுமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் நிறுவ இந்துவெறி பாரதீய ஜனதா முயற்சிக்கிறது.

அதன் தேச ஒற்றுமை என்பது மதம், மொழி, இனச் சிறுபான்மையினர் மீது அரசு பயங்கரவாத அடக்குமுறையை ஏவி அகண்ட பாரதத்தை நிறுவுவதாகும். இந்தியாவிலுள்ள சிறுபான்மை மதத்தவர்கள் பெரும்பான்மை இந்து மதத்துக்கு அடிபணிந்து இணக்கமாகச் செல்ல வேண்டும் என்பதுதான் இந்து வெறியர்களின் கொள்கை. அதன்படியே காஷ்மீருக்கு சிறப்புச் சலுகை அளிக்கும் 370வது சட்டப் பிரிவை நீக்கக் கோருகின்றனர். கிறிஸ்தவர்கள் அதிகமாக உள்ள குமரி மாவட்டத்திலிருந்து திருவனந்தபுரம் நோக்கிப் பயணம் செய்த இந்து வெறியர்கள் வழியில் எதிர்பட்ட சிலுவைக் குறியிட்ட வாகனங்களைத் தாக்கினர். பாலக்காட்டில் முஸ்லிம் கடைகளைச் சூறையாடி தீவைத்தனர். அதைத் தொடர்ந்து நடந்த போலீசு துப்பாக்கிச் சூட்டில் ஒரு சிறுமி கொல்லப்பட்டாள்.

இவ்வளவுக்குப் பிறகும் மத்தியிலுள்ள காங்கிரசு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி ஏதாவது செய்தால் வலுவான எதிர்க் கட்சியான இந்து வெறியர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடுமே என்று அஞ்சுகிறது. கடைசி நேரத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் என்ற பெயரில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார், பிரதமர் நரசிம்மராவ். அது இந்து வெறியர்களின் யாத்திரைக்கு இன்னுமொரு விளம்பரமாகியதே தவிர, அதைத் தடுக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. உண்மையில் நரசிம்மராவ் கும்பலும் இந்து வெறியர்களும் ஒரு கள்ளக் கூட்டில் சேர்ந்துள்ளனர். ஏற்கனவே அக்.30 அன்று அயோத்தியில் மசூதியை இடிக்கக் கிளம்பிய இந்து வெறியர்கள் மீது எந்த நடவடிக்கையுமின்றி அனுசரணையாக நடந்து கொண்ட நரசிம்மராவ் கும்பல், இப்போதும் இந்து வெறியர்களிடம் இணக்கமாக நடந்து கொண்டு இரத்த வெள்ளத்தில் நாட்டைத் தள்ளியுள்ளது.

காங்கிரசின் கையாலாகாத்தனம், எதிர்க்கட்சிகளின் போலி மதச்சார்பின்மை, நாட்டின் அரசியல் - பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு இந்து வெறி பாசிசம் பற்றிப் படர்வதையே இவை நிருபிக்கின்றன. போதாக்குறைக்கு பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலும் இந்த யாத்திரையை வரவேற்று ஆதரித்துள்ளது. இந்து வெறியர்கள் ஓரளவிற்கு வேர்விட்டுள்ள கேரளா கர்நாடக மாநிலங்களிலேயே இந்த யாத்திரைக்கு கடுமையான எதிர்ப்பு நிலவும் போது, வேரோ விழுதோ இல்லாத தமிழகத்தில் எதிர்ப்பேயில்லாமல் இந்து வெறியர்கள் யாத்திரை செல்வதற்கு பாசிச ஜெயாவின் ஆதரவே காரணம்.

படர்ந்துவரும் இந்துவெறி பாசிசத்துக்கு விட்டுக் கொடுப்பதன் மூலமோ, தேசிய இனங்களின் மீதான அரச பயங்கரவாத அடக்குமுறையின் மூலமோ ஒருமைப்பாட்டை ஒருக்காலும் சாதிக்க முடியாது. ஆர்.எஸ்.எஸ். முதலான இந்துவெறி பாசிச அமைப்புகளைத் தடை செய்தும், தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை அளித்தும், அரசியலுக்கும் மதத்துக்கும் இடையிலான உறவை அறுத்தெறிவதன் மூலம் மட்டுமே ஜனநாயக ரீதியிலான ஒருமைப்பாட்டை சாதிக்க முடியும். ● குமார்

படிப்பகம்

www.padippakam.com

# பா
# பட்டினி



ஆந்திரா - குண்டூர் மாவட்டம் கோல்லப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த பர்வதம்மாவிற்கு இனி குடும்பம் நடத்த வழி தெரியவில்லை. அடிக்கடி பிரம்மை பிடித்தவர் போல் நின்று விடுவார்! பர்வதம்மா - உடுதா ராதா கிருஷ்ணமூர்த்தி தம்பதிகளுக்கு நான்கு குழந்தைகள். மாதம் 3, 4 பச்சம் (24 மீட்டர்) துணி நெய்து 300, 400 ரூபாய் சம்பாதிப்பார் ராதாகிருஷ்ண மூர்த்தி. இதில் கஞ்சியோ கூழோ குடித்து காலத்தள்ளி வந்த இக்குடும்பத்தினருக்கு ஜூலை மாதத்திலிருந்து அதுவும் அரைகுறையாகிப் போனது. தற்போதைய பட்ஜெட்டில் நூல் விலை ஏறியதால் கைத்தறி உற்பத்தி சுருங்கியது. இதனால் ராதாகிருஷ்ணமூர்த்தி வருமானம் 20% குறைந்தது. தான் எப்படியோ, பிள்ளைகளாவது உண்ணட்டும் என பல நாள் பட்டினி கிடந்த ராதாகிருஷ்ண மூர்த்தி உடல்நிலை பாதிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 4ந் தேதி இறந்து போனார்.

ஆந்திரா - பிரகாசம் மாவட்டம் எருபாலம் கிராமத்தைச் சேர்ந்த தனலக்ஷ்மியை விதவையாக்கிவிட்டது, பாழாய்ப் போன வறுமை! இவரது கணவர் லட்சுமண நாராயணன், அரசு கூட்டுறவு ஆலையில் உறுப்பினராகி 'ஜேக்குவார்டு' தறி நெய்து வந்தார். கைத்தறி உற்பத்தி குறைந்ததால் மூன்று மாத காலமாக கூட்டுறவில் வேலையில்லை. கடனுக்கு சொந்தமாக தறி வாங்கி நெய்து பார்த்தார். ஆனாலும் வறுமை விட்டபாடில்லை. அண்மையில் நூல் தட்டுப்பாடு, விலையேற்றம் காரணமாக அவரது வருமானம் மேலும் 40% குறைந்தது. தனலக்ஷ்மி 5 முறை கருவுற்று கருச்சிதைவு ஆகிய வேதனையோடு அதற்காக கடன் வாங்கி செலவழித்த மருத்துவச் செலவும் கூடுதல் சுமையாக அழுத்தியது. வாங்கிய கடனையும் அடைக்க முடியவில்லை; மேலும் கடன் வாங்காமலும் குடும்பம் நடத்த முடியவில்லை; மனமுடைந்து போன லட்சுமண நாராயணன் அக்டோபர் 24ந் தேதி தறியிலேயே தூக்கு மாட்டிக் கொண்டார்.

ஆந்திரா - குண்டூர் மாவட்டம் பட்டிபுரோலு கிராமத்துக்காரர் வெங்கடராமைய்யாவில் சிறிது நேரம் கூட நிற்க முடியவில்லை; கால்கள் தள்ளாடுகின்றன. கண்களும் மங்கிவிட்டன. இருந்தும் இவர் இரண்டு ஜீவனுக்குரிய உணவிற்காக உழைத்தே ஆகவேண்டும். வெங்கட்ராமைய்யா - நாகமலேஸ்வரம்மா தம்பதியருக்கு வேலை செய்ய முடியாத - புத்தி சுவாதீனமில்லாத 21 வயது மகனும் கூடுதல் சுமையானான்! தம்பதியர் இருவரும் சேர்ந்து நெசவு நெய்தாலும் மாதம் 200 ரூபாய்க்கு மேல் ஈட்ட முடியவில்லை. ஜூலைக்குப் பின் என்னதான் மூச்சைப் பிடித்துக் கொண்டு உழைத்தாலும் 100 ரூபாய்தான் கிடைக்கிறது. சத்துணவு இல்லாததால் நாகமலேஸ்வரம்மா பாதிக்கப்பட்டு படுக்கையில விழுந்தார். இவருக்கு உணவும் தரமுடியாமல், சிகிச்சையும் பார்க்க முடியாமல் விழிபிதுங்கி நின்றார் வெங்கடராமைய்யா. இதைக் கண்டு சகிக்க முடியாத நாகமலேஸ்வரம்மா ஆகஸ்டு 30ந் தேதி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

● ○ ●

எட்டு வயதே நிரம்பிய சிறுமி ரீனா, 2 மாத காலமாக கால் வயிறும் காலி வயிறுமாகக் கிடந்ததால் உடல் குன்றி போனாள். தொடர்ந்து மூன்று நாள் சாப்பிடாமல் இருந்தவள், அக்டோபர் 3ந் தேதி துடிதுடிக்க செத்து போனாள்! ரீனாவின் தந்தை பாய்சக் தேபர்மா, ஒரு கூலி விவசாயி. திரிபுரா - அதரமுரா மலைப் பகுதியிலுள்ள ராமகிருஷ்ணாபூர் கிராமத்துக்காரர். விவசாயம் பொய்த்ததால் ஏதோ கிடைத்து வந்த கூலி வேலையும் செப்டம்பர் மாத கடைசி வாரத்தில் சுத்தமாக இல்லாமல் போனது. மலைப் பகுதியில் கிடைக்கும் சிறிதளவு கிழங்குகள், காட்டுப் பழங்கள், பறவை - விலங்கு இறைச்சிகளைக் கொண்டு எப்படியோ பெரியவர்கள் காலந்தள்ளி விடுகிறார்கள். ஆனால் சிறு குழந்தைகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.



தூக்கில் - நெசவாளி லட்சுமண நாராயணன்; மேலே அவரது மனைவி தனலக்ஷ்மி.

ஒரிசாவில் 3000 பேர் பட்டினியால் செத்ததை தொடர்ந்து இன்று திரிபுரா, ஆந்திரா, கர்நாடகா என பட்டினிச் சாவுக்கு உழைப்பாளர் குடும்பங்கள் பலியாகி வருகின்றன.

செத்த பிறகாவது மகளுக்கு வாய்க்கரிசி போடலாம் என்றால் அதற்கும் தேபர்மாவிடம் காசில்லை. ஊரில் பணக்கார விவசாயி ஒருவர் ரேசன் கார்டை அடமானமாகப் பெற்று கடன் கொடுப்பார். அவரிடம் இருந்த ஒரே சொத்தை - ரேசன் கார்டையும் அடகு வைத்து 150 ரூபாய் பெற்று மகளின் இறுதிச் சடங்கை செய்தார், தேபர்மா. அன்றோடு அவர் குடும்பத்திற்கு மலிவு விலையில் கிடைத்து வந்த குடிமைப் பொருட்களும் அதாவது கால் வயிறு உணவிற்கான உத்திரவாதமும் போய்விட்டது.


☆ ★ ☆

தெற்காசிய நாடுகள் மீதான இந்தியாவின் பிராந்திய ஆதிக்க வெறி விரிவடைந்து வருகிற இவ்வேளையில், இந்தியாவில் பட்டினிச் சாவு சத்தமே இல்லாமல் விரிவடைந்து வருகிறது. ஒரிசா மாநிலத்தில் கலகாந்தி, கோரபுட் பகுதிகளில் 3000 பேர் பட்

www.padippakam.com

# ம்
# ...சாவுகள்







...டினியால் செத்ததையும் இன்றும் செத்து மடிவதையும் அறிவோம். இந்நிலை இன்று பல மாநிலங்களில் உருவாகிவிட்டது. திரிபுரா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் பட்டினியால் பலர் மாண்டு போன செய்தி அண்மையில் அம்பலத்திற்கு வந்தது.

திரிபுராவில் ஆகஸ்டு, செப்டம்பர் மாதத்தில் மட்டும் பட்டனியால் 40 பேர் இறந்தனர். 200க்கும் மேற்பட்டவர்கள் போதிய (சத்து) உணவின்றி குடல் சம்பந்தமான நோய்கள் தாக்கி மரணப் படுக்கையில் கிடக்கிறார்கள். அரசு மருத்துவமனையிலும் உரிய சிகிச்சையின்றி அன்றாடம் சாகிறார்கள்.

இந்நிலைக்கு இன்று திரிபுராவை ஆளும் காங்கிரசு கட்சியினர் மட்டுமல்ல, முந்தைய ஆட்சியாளர்களான 'மார்க்சிஸ்டுகளும் பொறுப்பாவார்கள். திரிபுரா போன்ற எல்லை பகுதிகளில் பாதுகாப்பாற்வையென மத்திய அரசு தொடர்ந்து திட்டமிட்டே வளர்ச்சிப் பணிகளை புறக்கணித்து வருகிறது. போடப்படும் சில திட்டங்களும் எதிரான நடைமுறையையே கொடுத்துள்ளன. தெற்கு திரிபுராவில் நடைமுறைப்படுத்தப்பட்ட 'தம்பர் நீர்மின் திட்டம்', நிலங்களையெல்லாம் தரிசாக்கியது. அந்நிலத்தில் வாழ்ந்த 15000 பழங்குடியினரை வெளியேற்றியது. பழங்குடியினருக்காகப் போடப்படும் மேம்பாட்டு திட்டங்களையும் உள்ளூர் ஆதிக்க கும்பல்கள் அரசியல் செல்வாக்குடன் கையகப்படுத்திக் கொள்கின்றன. பழங்குடியினருக்கு கடன் கொடுத்து ரேசன் கார்டை தட்டிப் பறிக்கும் கந்துவட்டி - பணக்கார விவசாயிக் கும்பல், அரசு குடிமைப் பொருட்களை எளிதாக கள்ள மார்க்கெட்டிற்கு கடத்தி விடுகின்றன. இதனால் அத்தியாவசியப் பொருட்கள் சந்தையில் விலை அநியாயமாக கூடி (திரிபுரா மலைப் பகுதியில் அரிசி ஒரு கிலோ 12-14 ரூபாய்; மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் 20-25 ரூபாய்) மக்களுக்கு எட்டாக்கனியாகி விட்டது.

அதரமுரா, பாரமுரா, தெப்தமுரா, லாங்தேரி சேகன்தாங் ஆகிய திரிபுரா மலைப் பகுதியில் வாழும் 30,000 குடும்பங்கள் வறுமையில் பரிதவிக்கின்றன. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மிஜோராம், அசாம், பங்களாதேஷ் என பஞ்சம் பிழைக்க போய் விட்டன.

ஆந்திராவில் கடந்த ஆகஸ்டு மாதம் முதல் நவம்பர் வரை மட்டும் 73 பேர் பட்டினிச் சாவுக்கு பலியானார்கள். இதில் குண்டூர், பிரகாசம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அதிகம். ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையால் கைத்தறி உற்பத்தி பெருமளவிற்கு பாதிக்கப்பட்டது. அரசின் தொடர்ச்சியான புறக்கணிப்பால் கூட்டுறவு நிறுவனங்கள் உற்பத்தியை முடக்கி நெசவாளர்களை நிர்கதியாக்கின. வேலையிழந்த நெசவாளர்களால் எளிதில் விவசாயிகளைப் போல் வேறு வேலைக்கு மாற முடியவில்லை. சொந்தமாக - தனியாக நெசவு நெய்தாலும் விசைத்தறி, மில் துணிகளோடு அதன் உற்பத்தியோடு போட்டி போட முடியாமல் நலிவடைகிறார்கள். வருடத்தில் 6 மாதம், 3 மாதம் என வேலை சுருங்கியது.

இந்நிலையில் காங்கிரஸ் அரசின் தற்போதைய பட்ஜெட், நெசவாளர்கள் தலையில் இடிவிழுந்தது போல் சில திட்டங்களை அறிவித்து, நடைமுறைப்படுத்தியது. அரசு துறைகளுக்குத் தேவையான கைத்தறி துணி ஆர்டர்களை குறைத்தார்கள். கைத்தறி கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மத்திய அரசு உற்பத்தி செய்து வந்த ஜனதா துணியின் அளவில் 25% வெட்டினார்கள். கைத்தறி துறைக்கு அரசு வழங்கிய மானியத் தொகையிலும் 25% வெட்டப்பட்டது. இவற்றையெல்லாம் விட பருத்தி நூலின் ஏற்றுமதியை அதிகரித்து நூல் விலையை இரு மடங்காக்கினார்கள். போதாக் குறைக்கு ஆந்திர அரசு இந்த ஆண்டு நிதிப் பற்றாக்குறையென கைத்தறி கூட்டுறவு துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 20 கோடி ரூபாயை பிடித்துக் கொண்டது.

விசைத்தறி மற்றும் மில் முதலாளிகள் கொள்ளைக்காகவும், (நூல் ஏற்றுமதியின் மூலம்) அந்நிய செலாவணிக்காகவும், செயற்கை நூல் இழை இறக்குமதி - அந்நிய கம்பெனிகள், தரகு முதலாளிகளின் கொள்ளைக்காகவும், ஐ.எம்.எப்-ன் கட்டளையினாலுமே ஆட்சியாளர்கள் இவையனைத்தையும் பட்ஜெட் மூலம் திணித்தார்கள். ஏற்கனவே நொடித்திருந்த நெசவாளர்கள் இப்பேரிடியை தாங்க முடியாமல் சாவின் படுகுழியில் விழுந்தார்கள்.

திரிபுரா, ஆந்திரா பட்டினிச் சாவுகள அம்பலமாகி நாறியதும் பாராளுமன்றத்தில் அனைத்து ஓட்டுகட்சி எம்.பி.க்களும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூப்பாடு போட்டனர். அப்பொழுது ராம் விலாஸ் பஸ்வான் திடீரென சொரணை வந்தவராக, கர்நாடகாவில் தான் சுற்றுப் பயணம் செய்த போது, ஜூன் - ஜூலை மாதங்களில் தடாவி எனுமிடத்தில் 2 முதல் 5 வயதே உடைய 8 குழந்தைகள் பட்டினியால் செத்ததை கேட்டறிந்ததாக அறிவித்தார்.

"வறுமையை ஒழிப்போம்", "2000-க்குள் வளமையான - ஒளிமயமான இந்தியாவை உருவாக்குவோம்", "நெசவு, கைத்தொழில், விவசாயம் போன்ற பின்தங்கிய உற்பத்திக்கே முன்னுரிமை - சலுகை"... போன்ற ஆட்சியாளர்களின் வெற்று

படிப்பகம்

www.padippakam.com

கோஷங்களுக்கு மட்டும் என்றைக்கும் குறைவிருந்ததில்லை. நேரு, இந்திரா, ராஜீவ் என 40 வருடத்திற்கும் மேல் ஆண்ட, ஆளுகின்ற காங்கிரசு பரம்பரை மட்டுமல்ல; பிற தேசிய - பிராந்திய கட்சிகளும் சேர்ந்து இதுவரை இந்தியாவிற்கு தேடித்தந்த சொத்துதான் இந்த பட்டினிச்சாவுகள்! கொள்கையற்ற இக்கும்பலின் உருப்படியற்ற திட்டங்கள், இன்று இந்தியாவையே அந்நியனுக்கு அடகு வைக்கத்தான் பயன்பட்டுள்ளன. ஓட்டுக் கட்சி கும்பல் அனைத்தும் ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்காகவும், நிலப்பிரபுகள், தரகு முதலாளிகள் நலன்களுக்காகவுமே நாட்டை வழிநடத்தி இந்தியாவையே பாலைவனமாக்கி விட்டார்கள்! மக்களை ஓட்டச் சுரண்டி சாவின் விளிம்பிற்கே தள்ளிவிட்டார்கள்!

பின்தங்கிய உற்பத்தி முறைகள் நலிவடைந்து உழைப்பாளிக் குடும்பங்கள் வறுமையில் வாடுவதும், விவசாயம் பொய்த்துப் போய் விவசாயிகள் பஞ்சம் பிழைக்க நகரங்களுக்கு வந்து அங்கும் வேலையில்லாமல் அலைந்து திரிவதும், தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டு தொழிலாளர்கள் வீதியில் வீசப்படுவதும் பட்டினிச் சாவுகள் இந்தியாவில் தொடர்வதற்கான அடிப்படைகளாகவே விளங்குகின்றன. இந்நிலை மாறுவதற்கான வழிமுறையோ, திட்டமோ, கொள்கையோ, ஓட்டுக் கட்சிகளிடம் இல்லை. அதனாலேயே கவர்ச்சித் திட்டங்கள், வெற்றி கோஷங்கள், கண்துடைப்பு நடவடிக்கைகள் மூலம் பிரச்சினையை மறக்கடிக்க முயலுகிறார்கள்.

● ○ ●

உழைப்பவன் கூழ் இல்லாமல் பட்டினியால், சாகிற அதே வேளையில் மறுபுறம் ஆளுங்கும்பல் உல்லாச - சுகபோக வாழ்க்கையில் திளைக்கிறது. தேர்தல்கள், கட்சி கூட்டங்கள், பொது விழாக்கள், வீட்டு நிகழ்ச்சிகளில் புகழுக்காகவும், விளம்பரத்திற்காகவும் பணத்தை வாரி இறைக்கிறது.

உதாரணத்திற்கு அண்மையில் நடந்த காங்கிரசு மத்திய அமைச்சர் சரத்பவார் மகளது திருமணமும், ஹரியானா காங்கிரஸ் முதல்வர் பஜன்லால் மகன் திருமணமும் பல கோடிகளை விழுங்கியது. சாதாரண 'கொலு' நிகழ்ச்சிக்கு லட்சங்களை செலவழித்து விழா நடத்தி குதூகலித்தது, ஜனாதிபதி வெங்கட்ராமன் குடும்பம்.

இவற்றிற்கெல்லாம் இக்கும்பல் மக்கள் வரிப் பணத்தை பேரங்கள், ஊழல்கள் மூலம் சுருட்டுகிறது. கறுப்பு பணம், கள்ள மார்க்கெட், கடத்தல், கொள்ளை, சமூக விரோத தொழில், லஞ்சம், ஊழல், குறுக்கு வழி மூலமே பணத்தை சேமிக்கிறது!

உழைக்காத இந்த ஓட்டுண்ணி கும்பல் ஆட்சியிலிருக்கும் வரை உழைப்பாளியின் உதிரம் உறிஞ்சப்படுவதையும் அவனது குடும்பம் பட்டினியால் சாவதையும் தடுக்க முடியாது. உழைப்பவன் கைக்கு ஆட்சி அதிகாரத்தை மீட்டெடுக்கும் பொழுதே உழைக்கும் மக்களின் வாழ்விற்கு உத்தரவாதமளிக்க முடியும். "உழைக்காதவனுக்கு உணவில்லை" என விதியமைத்து உழைக்காத இக்கும்பலை சிறையிலிட்டு பட்டினி போட முடியும். ● சுப்பு

## ஆளும் துரோகிகளால்
# நாடு மீண்டும் காலனியாகிறது

ஆமையும் அமீனாவும் புகுந்த வீடு உருப்படாது என்பது பழமொழி. உலக வங்கியும் ஐ.எம்.எப்.பும் புகுந்த நாடு உருப்படாது என்பது இன்றைய புதுமொழி யாகி விட்டது.

பொருளாதார சீர்திருத்தம், தேக்க நிலையை உடைப்பது, மறு சீரமைப்பு என்ற பெயரில் உலக வங்கியிடமும் சர்வதேச நாணைய நிதியத் (IMF) திடமும் நாட்டை முற்றாக அடகு வைத்த காங்கிரசு ஆட்சியாளர்கள், அடுத்தடுத்து ஐ.எம்.எப்.பின் கட்டளைகளை ஏற்று நாட்டை மீண்டும் மறு காலனியாக்கி வருகின்றனர்.

ஆட்சிக்கு வந்ததுமே ரூபாயின் மதிப்பை இரு தவணைகளில் 20% குறைத்து செல்லாக் காசாக்கினார் நிதியமைச்சர். அதன்பிறகு ஐ.எம்.எப்.பின் கட்டளைப்படி, அன்னியச் செலாவணி தடுப்புச் சட்டம் (FERA) முடக்கப்பட்டு நேரடியாக 51% அளவுக்கு அன்னிய நிறுவனங்கள் முதலீடு செய்ய உரிமை அளிக்கப்பட்டது. ஏகபோகத் தடுப்புச் சட்டம் (MRTP) குப்பைக் கூடையில் வீசப்பட்டு ரூ.2000 கோடிவரை சொத்து மதிப்பை உயர்த்திக் கொள்ள ஒவ்வொரு தனித்தனி நிறுவனங்களுக்கும் சலுகை காட்டப்பட்டது. இதுதவிர 100% அன்னிய முதலீட்டிற்கும் உற்பத்தியானவற்றை நேரடியாக ஏற்றுமதி செய்து கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டன.

இவை மட்டும் போதாது என்று அரசுத் துறை நிறுவனங்களை தனியார் பொறுப்பில் விட வேண்டும்; பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த தொழிற்கழகங்களுடன் சுதந்திரமான தொழிற்கூட்டு வைத்துக் கொள்ள எல்லாத் தடைகளும் நீக்கப்பட வேண்டும்; அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளின் பங்குகளை தனியார் முதலாளிகளுக்கு விற்க அனுமதிக்க வேண்டும்; சுதந்திரமான சந்தை -போட்டிக்கு பொருளாதாரத்தை திறந்து விட வேண்டும்; இலவச - கவர்ச்சித் திட்டங்களை நிறுத்த வேண்டும்; பற்றாக்குறையை ஈடுகட்ட மானியங்களை வெட்டியும், விவசாயத்துக்கு வரிவிதித்தும், பேருந்து - ரயில் - அஞ்சல் கட்டணங்களை உயர்த்தியும் வருவாயைப் பெற வேண்டும் என்று அடுக்கடுக்காக ஐ.எம்.எப். விதித்த நிபந்தனைகளை ஏற்று அவற்றை செயல்படுத்தக் கிளம்பிவிட்டது காங்கிரசு அரசு.

> உலக வங்கிதான் இந்தியாவில் இணையான அரசாங்கத்தை நடத்துகிறது. நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலே, மந்திரிகளுக்கே கூட தெரியாமல் ஐ.எம்.எப். விதிக்கும் நிபந்தனைகள் அடுத்த நிமிடமே அரசின் கொள்கை முடிவாக அறிவிக்கப்படுகின்றன.

### கட்டளையிடுகிறது உலக வங்கி காலில் விழுகிறது காங்கிரஸ் அரசு

உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கடுமையான நிபந்தனைப்படி பொருளாதாரக் கொள்கை அறிவிக்கப்பட்ட 4 மாதங்களுக்குள் 94 அன்னிய கூட்டுப் பங்கு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரலுக்குப் பிறகு அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்கு இந்தியாவில் பொற்காலம் என்று நிதிமந்திரியே கூறுகிறார். சின்னஞ்சிறு நாடான சிங்கப்பூரில் 700 அன்னிய ஏகபோக நிறுவனங்கள் உள்ளபோது, பெரிய நாடான இந்தியாவில் அதைவிட அதிகமாக இருப்பதில் என்ன தவறு என்று ஏகாதிபத்திய சுரண்டலுக்கு வக்காலத்து வாங்குகிறார், நிதி மந்திரி. நாட்டை மறுகாலனியாக்கும் இக்கொள்கைகளின் விளைவாக, 14 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து விரட்டப்பட்ட அமெரிக்காவின் கோகோ கோலா நிறுவனம் மீண்டும் நாட்டைச் சூறையாட வரவேற்கப்படுகிறது. அதிகார வர்க்க இழுத்தடிப்புகள் ஏதுமின்றி 18 மணி நேரத்தில் அன்னிய முதலீட்டாளர்களுக்கு இந்தியாவில் தொழில் தொடங்க அனுமதி அளிக்க ஏற்பாடாகியுள்ளது. வரப்போகும் பட்ஜெட்டில் அன்னியச் செலாவணி தடுப்புச் சட்டத்தையே (FERA) ரத்து செய்துவிட ஆட்சியாளர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

ஐ.எம்.எப்.பின் கட்டளைகளுக்கு கோலெடுத்தால் ஆடும் குரங்காக மாறி ஆட்டம் போடும் ஆட்சியாளர்கள், இப்போது ஏற்றுமதி - இறக்குமதி கொள்கைகளைக்கூட ஏகாதிபத்தியங்களின் காலடியில் வைத்து விட்டனர். வர்த்தகம் மற்றும் தீர்வைக்கான பொது உடன்பாடு (GATT) காண்பதற்காக அண்மைக் காலமாக அனைத்து நாடுகளும் விவாதித்து வருகின்றன. இதில் ஏழை நாடுகள் தமது சுய சார்பைக் கட்டி காக்கும் வகையில் உருவாக்கியுள்ள காப்பு வரியோ, தீர்வையோ ஏதுமின்றி அன்னிய வர்த்தகத்துக்கும் சுரண்டலுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டுமென ஏகாதிபத்தியங்கள் நிர்பந்தித்து வருகின்றன. பொது உடன்பாடு காண

படிப்பகம்

www.padippakam.com

பதற்கு முன்னரே ஐ.எம்.எப். கடனைக் கொண்டு மிரட்டி பல ஏழை நாடுகளை தீர்வையைக் குறைக்கச் செய்வதில் ஏகாதிபத்தியங்கள் வெற்றி பெற்று வருகின்றன.

இந்த வகையில் ஐ.எம்.எப்.பின் மிரட்டலுக்கு அடிபணிந்து இந்தியாவும் தன் பங்குக்கு இறக்குமதி தீர்வையை 30% குறைத்து விட்டது. "குறைவான தீர்வையை நோக்கி உலகம் செல்லும்போது நமக்கு வேறு வழியில்லை. எப்படியிருந்தாலும் பொது உடன்பாடு ஏற்படும்போது நாம் தீர்வையைக் குறைக்க நேரிடும். முன்கூட்டியே குறைப்பதால் வர்த்தகம் பெருகவே செய்யும்'' என்று வர்த்தக அமைச்சர் சிதம்பரம் தனது சரணாகதியை நியாயப்படுத்துகிறார்.

**உலக வங்கியின் இரும்புப் பிடியில் இந்திய விவசாயம்**

உலக வங்கியின் கட்டளைகள் வெறுமனே பொருளாதாரத் துறையோடு நின்றுவிடவில்லை. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பங்கேற்கும் விவசாயத் துறையை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நோக்கத்துடன் புதிய நிபந்தனைகளை அது விதித்துள்ளது.

உணவு - தானிய சேமிப்பைக் குறை; அரசுத்துறை நிறுவனமான இந்திய உணவுக் கார்ப்பரேஷனின் (FCI) ஏகபோகத் தன்மையை நீக்கு; பயிர் பாதுகாப்புத் திட்டம், கொள்முதல் விலை உயர்வு முதலானவற்றை நிறுத்து; சர்வதேச விலைகளின்படி கொள்முதல் செய்; உணவு மற்றும் விவசாய சாதனங்களை தாராளமாக இறக்குமதி செய்! என்று உலக வங்கி புதிய கட்டளைகளை விதித்துள்ளது. இவை தவிர உர விலையை உயர்த்த வேண்டும்; நீர்ப்பாசன வரிகளையும் மின் கட்டணத்தையும் உயர்த்த வேண்டும்; விவசாயத்துக்கான மானியங்களை குறைக்க வேண்டும்; டீ, காபி, ரப்பர் முதலான பணப்பயிர் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.



வரப்போகும் பட்ஜெட்டில் இவற்றை நிறைவேற்ற காங்கிரசு அரசும் முடிவு செய்து விட்டது. இதுதவிர, மின் சக்திக்கான கடன் திட்ட அறிக்கையின்படி, இந்தியா மின்சக்தியை வீண் விரயமாக்குவதாக உலக வங்கி குற்றம் சாட்டுகிறது. அதாவது மானிய விலையில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் தருவதால் ஏறத்தாழ 7000 கோடி ரூபாய் விரயமாகிறதாம். அதை உடனடியாக நிறுத்த வேண்டும்; இல்லையேல் இதர மின் திட்டங்களுக்கு கடன் தர முடியாது என்று உலக வங்கி மிரட்டுகிறது. அதையும் விசுவாசமாக ஏற்றுக் கொண்டு வரப்போகும் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்குவதை ரத்து செய்ய ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்திய விவசாயம் பற்றி உலக வங்கியின் மற்றொரு அறிக்கையின்படி, 40% நகர்ப்புற மக்கள் ஒப்பீட்டளவில் போதிய வருமானம் இருந்த போதிலும் ரேஷன் கடைகளின் மூலம் குறைந்த விலையில் உணவுப் பொருட்களைப் பெறுகிறார்களாம். இந்த 40% மக்கள் எனப்படுபவர்கள் மாத வருமானம் ரூ.1500/-க்கு மேற்பட்டவர்கள். இவர்கள் ரேஷனில் உணவுப் பொருட்களை வாங்குவதால், ஒதுக்கப்படும் மானியம் வசதி படைத்தவர்களுக்காக விரயமாக்கப்படுகிறதாம்! இந்த விரயத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென உத்திரவிட்டுள்ளது உலக வங்கி. வாய் பொத்தி இதையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டு, மாத வருமானம் ரூ.2000-க்கு மேற்பட்டவர்களுக்கு இனி ரேஷனில் உணவுப் பொருள் கிடையாது என அறிவிக்க முடிவு செய்துள்ளது.

தேசிய அனல் மின் கார்ப்பரேஷன் (NTPC) தனது விரிவாக்கத் திட்டங்களுக்காக உலக வங்கியிடம் கடன் வாங்கியது. இக்கடனை தவணை முறையில் கொடுத்து மேற்பார்வையிட்டு வந்த உலக வங்கி, இப்போது அடுத்த தவணைக்கான கடன் தொகையைத் தராமல் நிறுத்திவிட்டது. ஏனெனில் நிபந்தனைப்படி மாநில மின் வாரியங்கள் ஆண்டுக்கு 3% இலாபம் ஈட்டத் தவறியதோடு நட்டத்தில் இயங்குவதாக குற்றம் சாட்டுகிறது. இதனை உடனடியாக சீரமைக்கப்படாவிட்டால், கடன் தர முடியாது என்று உலக வங்கி மிரட்டுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், மின் கட்டணத்தை உயர்த்தி, நட்டத்தைக் குறை என்று உலக வங்கி உத்திரவிட்டுள்ளது. இதன் காரணமாகவே மின் கட்டணங்கள் இவ்வாண்டு உயர்த்தப்பட்டன.

**நர்மதா திட்டத்தின் தலைவிதி உலக வங்கியின் கையில்**

வெறும் பேருந்துக் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு மட்டுமல்ல; ஒவ்

# ஐ.எம்.எப்-பின் புதிய கட்டளைகள்

உலக வங்கி - சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) இந்திய அரசு கடன் வாங்கியுள்ளதன் விளைவாகவும், அடுத்து ரூ.15,000 கோடிக்கு கடன் வாங்கப் போவதை ஒட்டியும் பின்வரும் பொருளாதார மாற்றங்களைச் செய்யுமாறு உலக வங்கி கட்டளையிட்டுள்ளது. பற்றாக்குறையை ஈடுகட்ட வருவாயை உயர்த்துவது, செலவினங்களைக் குறைப்பது என்ற பெயரில் இவற்றை விசுவாசமாகச் செயல்படுத்த ஆட்சியாளர்களும் முடிவு செய்துள்ளனர்.

- 1991-ம் ஆண்டின் இறுதிக்குள் டீசல் விலையை 10% உயர்த்தவேண்டும். இதன் மூலம் 1200 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும்.
- 1992-93 பட்ஜெட்டில் உர விலையை உயர்த்த வேண்டும். இதன்மூலம் ஏறத்தாழ 1800 கோடி வருவாய் கிடைக்கும்.
- மத்திய பஞ்சப்படியை (DA) அடுத்த பட்ஜெட்டில் முடக்கி வைப்பது.
- மாத வருமானம் ரூ.2000-க்கு குறைவானவர்களுக்கு மட்டுமே ரேஷன் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்க அனுமதிப்பது; தற்போது ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் அளவு வரம்பைக் குறைத்து விடுவது.
- திட்டச் செலவுகளை பெருமளவில் குறைப்பது; அதாவது கல்வி, மருத்துவம், சுகாதாரம், சாலை-குடிநீர், கழிப்பிட வசதிகளுக்கான செலவுகளை குறைப்பது.

— ஐ.எம்.எப். விதித்துள்ள இக்கட்டளைகளை நிறைவேற்ற முயற்சித்தால் மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு வரும் என்று ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர். எனவே புதிதாக ஒரு கவர்ச்சித் திட்டத்தை அறிவித்து அதன் ஒளி வெள்ளத்தில் மக்களின் கண்களைக் குருடாக்குவது அல்லது எல்லையில் பதற்ற நிலை - பயங்கரவாத பீதியூட்டி இக்கட்டளைகளை செயல்படுத்தி விடலாம் என்று கணக்கு போடுகின்றனர்.

ஆனால் ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளை செயல்படுத்துவதன் விளைவாக, விலைவாசிகள் தாறுமாறாக உயர்வதோடு, ஏகாதிபத்தியங்களின் இரும்புப் பிடிக்குள் இந்தியா சிக்கிக் கொள்ளும். ஏற்கனவே பின்தங்கிய - வறுமை நிலையிலுள்ள உ.பி., பீகார், ம.பி. ராஜஸ்தான், ஒரிசா மாநில மக்கள், திட்டச் செலவுகளை மேலும் குறைப்பதன் விளைவாக பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுவர். இந்தியா இன்னுமொரு எத்தியோப்பாவாக மாறப்போவது மட்டும் நிச்சயம்.

www.padippakam.com

வொரு வளர்ச்சித் திட்டமும் உலக வங்கியால் மதிப்பீடு செய்யப்பட்டு, 'உதவி' செய்யப்பட்டு, அதன் நேரடி மேற்பார்வையில் தான் செயல்படுத்தப்படுகின்றன. திட்டங்கள் நிறைவேறுவதும் கிடப்பில் போடப்படுவதும் உலக வங்கியின் கையில்தான் உள்ளது.

மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களின் விவசாய விரிவாக்கத்திற்கும் கட்ச் வளைகுடாவின் குடிநீர் பஞ்சத்தைப் போக்கவும் நர்மதை ஆற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டத்துக்கு உலக வங்கி கடனுதவி செய்துள்ளது. சர்தார் சரோவர் எனப்படும் இந்த அணைக்கட்டு திட்டத்தால் மத்தியப் பிரதேசத்திலுள்ள பல்லாயிரக் கணக்கான ஆதிவாசி பழங்குடி - மக்கள் தமது பூர்வீக நிலங்களைப் பறிகொடுத்து வாழ்விழந்துள்ளார்கள். இதோடு சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதால் தன்னார்வக் குழுக்களும் பழங்குடி மக்களும் இத்திட்டத்தை எதிர்த்துப் போராடி வருகின்றனர். மறுபறம் இந்திட்டத்தால் ஆதாயமடையப் போகும் பணக்கார விவசாயிகளும், ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும் இதை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடுகின்றனர். இந்நிலையில் இத்திட்டத்தை தொடருவதா, அல்லது கைவிடுவதா என்ற முடிவெடுக்கக் கூட இந்திய அரசுக்கு உரிமையில்லை. இது பற்றி உலக வங்கியின் ஆய்வுக் குழுவினர் இப்பகுதியில் சுற்றுப்பயணம் செய்து கொடுக்கும் ஆய்வறிக்கையின்படி உலக வங்கியே இறுதி முடிவெடுக்கும்.

### நாட்டை சுடுகாடாக்கும் உலக வங்கியின் நிபந்தனைகள்

இந்தியப் பொருளாதாரத்தின் மீது தனது இரும்புப் பிடியைப் பதித்துள்ள உலக வங்கி பட்ஜெட்டில் அற்ப அளவே ஒதுக்கப்படும் சமூக நல்வாழ்வுத் திட்டங்களுக்கான தொகையைக் கூட குறைக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளது. மருத்துவ சுகாதாரப் பணிகளுக்காக இந்தியப் பட்ஜெட்டில் 2% தான் செலவிடப்படுகிறது. ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகள் 12%-க்கு மேல் செலவிடுகின்றன. உலக வங்கியின் நிபந்தனையால், இது மேலும் குறைந்து வெறும் 260 கோடியாகச் சுருங்கிவிட்டது. இதேபோல கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையை குறைக்கச் சொல்லி உலக வங்கி கட்டளையிட்டுள்ளது. 1989-90இல் ரூ.918 கோடியாக இருந்த கல்விக்கான ஒதுக்கீடு '90-91-ல் ரூ.735 கோடியாக சுருங்கிவிட்டது. வரப்போகும் பட்ஜெட்டில் இதை மேலும் குறைக்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.



ஏற்கெனவே கல்வியறிவற்ற உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டவர்கள் இந்தியாவில்தான் உள்ளனர். இந்நிலையில் கல்விக்குச் செலவிடும் தொகையை மேலும் குறைப்பதன் விளைவாக, பள்ளி -கல்லூரிகளை மூட வேண்டிய நிலை ஏற்படும். அடுத்த ஐந்தாண்டுகளில் படிப்பறிவற்ற மக்களைக் கொண்ட நாடாக இந்தியா முதலிடம் பெற்றுவிடும் என்று பொருளாதார ஆய்வாளர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

1981-ம் ஆண்டில் ஜமைக்கா நாட்டில் ஐ.எம்.எஃப் திணித்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, பட்ஜெட்டில் கல்வி மற்றும் மருத்துவ - சுகாதார வசதிகளுக்கான தொகை பெருமளவில் குறைக்கப்பட்டு பள்ளி- கல்லூரிகளும், மருத்துவமனைகளும் இழுத்து மூடப்பட்டன. மேலும் குடியிருப்பு வசதிக்கான மானியங்கள் முற்றாக நிறுத்தப்பட்டதால் நகர்ப்புற சேரிகள் பெருகத் தொடங்கின. சத்துணவின்மையாலும் மருத்துவ - சுகாதார வசதியின்மையாலும் 1983-ல் கொள்ளை நோய் தாக்கி ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர்.

இத்தகைய நிலைமையை நோக்கித் தான் இந்தியா சென்று கொண்டிருக்கிறது. கல்விக்காக செலவிடும் தொகையைக் குறைத்ததோடு, கல்வி நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர பல்கலைக் கழகங்களில் குறிப்பாக பம்பாய் கல்லூரிகளில் 500% கல்விக் கட்டணங்களை உயர்த்தியுள்ளது. இனி நடுத்தர மக்கள் தமது குழந்தைகளைக் கல்லூரிகளில் படிக்க வைக்க முடியாது; ஏழைக் குழந்தைகள் ஆரம்பக் கல்வி கூட பெறமுடியாது என்கிற நிலைமைதான் யதார்த்தமாகி விட்டது.

ஜமைக்காவைப் போலவே இந்தியாவிலும் உலக வங்கியின் உத்தரவுப்படி வறுமை ஒழிப்புத் திட்டங்களும் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. 1989-90-ம் ஆண்டை ஒப்பிடும்போது தற்போதைய பட்ஜெட்டில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு 13% குறைக்கப்பட்டுள்ளது. 1989-90-ல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ.372 கோடி ஒதுக்கப்பட்டது..அது 90-91-ல் 356 கோடியாக சுருங்கிவிட்டது. விலைவாசி ஏற்றம், ரூபாய் மதிப்பு குறைப்பு ஆகியவற்றை

# இந்திய அரசை இயக்குவது உலக வங்கி அடிவருடிகளே!

எங்கோ தொலை தூரத்திலிருந்து கொண்டு உலக வங்கியும் ஐ.எம்.எப்.பும் இந்தியாவை நிர்பந்திப்பதாக யாராவது கருதினால் அது அவரது அறியாமையேயாகும். பிறப்பால் இந்தியனாக இருந்தாலும், ஏகாதிபத்தியங்களின் - உலக வங்கியின் விசுவாச எடுபிடிகள் தான் இந்திய நிதியமைச்சகத்திலும் திட்டக் கமிஷனிலும் விரவியுள்ளனர். உலக வங்கியின் கைக் கூலிகளான இப் பொருளாதாரவாதிகளின் ஆலோசனைப்படிதான், நிதிக் கொள்கையும் திட்டங்களும் தீட்டப்படுகின்றன. இன்னும் சொல்லப் போனால், உலக வங்கியின் உத்தரவுப்படிதான் இத்தகைய எடுபிடிகள் இந்திய அரசின் முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தப் படுகிறார்கள்.

அண்மையில், ஐ.எம்.எப். நிறுவனத்தில் செயல்பட்டு வந்த சாம் பார்த்தசாரதி, தற்போது வருவாய்த் துறையின் பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இதே போல முன்னாள் உலக வங்கி ஊழியரான அர்விந்த் ஷிர்மானி தற்போது நிதியமைச்சர் மன்மோகன் சிங்கின் பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களைத் தவிர உலக வங்கியின் எடுபிடிகளான இன்னும் 5 பேர் இந்திய அரசின் முக்கிய பொறுப்புக்களில் ஏற்கனவே உள்ளனர்.

மான்டேக் சிங் அலுவாலியா, பொருளாதாரத் துறை செயலராக உள்ளார். பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தலைவராக பிமல் ஜலான் நியமிக்கப்பட்டுள்ளார். தொழிலமைச்சகத்தின் பொருளாதார ஆலோசகராக ராகேஷ் மோகன் உள்ளார். இதே போல வர்த்தக அமைச்சகத்தில் ஜெயந்தோ ராய் பொறுப்பில் உள்ளார். தற்போது பொறுப்பு மாற்றப்பட்டுள்ள அர்விந்த் விர்மானி, நேற்று வரை திட்டக் கமிஷனின் பொருளாதார ஆலோசகராக செயல்பட்டு வந்தார். இவர்கள் எல்லோருமே உலக வங்கியில் ஐந்தாண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி விட்டு அதனிடம் பென்ஷனும் சலுகைகளும் பெற்று வருபவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னராக உள்ள வெங்கிடராமன், முன்னாள் உலக வங்கி ஊழியர் தான்!

இப்படி இந்தியப் பொருளாதாரத் துறையின் முக்கிய பொறுப்புகளில் உலக வங்கியின் எடுபிடிகள் நிரம்பி வழியும் போது, இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள், உலக வங்கியின் கட்டளையை மீறிவிட முடியுமா?

www.padippakam.com

வைத்துக் கணக்கிட்டால் ஏறத்தாழ 20% குறைக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

### மறுகாலனியாக இந்தியா

உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் இத்தகைய கடுமையான நிபந்தனைகளின் மூலம் திவால் நிலைக்குத் தள்ளப்பட்ட பொருளாதாரத்தை சீர்திருத்துவதாக ஆட்சியாளர்கள் பசப்புகிறார்கள். உண்மையில் இது இந்தியாவின் சுயாதிபத்திய உரிமைகளைப் பறித்து நாட்டை மீண்டும் மறுகாலனியாக்கும் கொள்கைகளேயாகும். முன்பு பிரிட்டிஷாரிடம் இந்தியா காலனியாக இருந்தபோது வெள்ளைக்காரர்களின் கொள்ளைச் சுரண்டலுக்கு ஏற்ப எத்தகைய நிலைமைகள் இருந்ததோ, அதே போன்ற நிலைமைகள் தான் இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷாரின் ஆட்சியில் வைசிராய்கள் இருந்தார்கள். இப்போது உலக வங்கியின் பிராந்திய இயக்குனர்கள் அந்த வேலையைச் செய்கிறார்கள். உலக வங்கியின் உத்தரவுப்படி முறையாக பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதா என்று மேற்பார்வையிடுகிறார்கள். அதுமட்டுமல்ல; மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நேரில் வந்து சோதித்தறிந்து தேவையான மாற்றங்களைச் செய்யுமாறு உத்திரவிடுகிறார்கள்.

இத்தனை நாளும் எங்கோ வெகு தொலைவிலிருந்து கொண்டு உலக வங்கி நிபந்தனை விதிப்பதாக இருந்த நிலைமை போய், இப்போது டெல்லி சாணக்கியபுரியில் உலக வங்கியின் ரகசிய அலுவலகம் செயல்படுவதாக அம்பலமாகியுள்ளது. இன்னும் 10 ஆண்டுகளுக்கு ஐ.எம்.எப்.பின் நிபந்தனைப்படி "கட்டுமான மாற்றங்கள் செய்யப்படும்" என்று நிதி மந்திரியே அறிவித்துள்ளார். அவற்றை நேரடியாக மேற்பார்வையிடுவதற்காக அலுவலகம் நிறுவிக் கொள்ளுமளவுக்கு உலக வங்கியின் ஆதிக்கம் விரிவடைந்துள்ளது.

இந்தியாவில் சட்டங்கள் போடுவதும் திட்டங்கள் தீட்டுவதும் மாபெரும் ஜனநாயக அமைப்பான நாடாளுமன்றமும் சட்டமன்றங்களும் தான் என்று ஆளும் வர்க்க சித்தாந்தவாதிகள் நம்பச் சொல்கிறார்கள். ஆனால் நாடாளுமன்றத்தையே செல்லாக் காசாக்கி விட்டு உலக வங்கிதான் இணையான அரசாங்கத்தை நடத்துகிறது. நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலே, மந்திரிகளுக்கே கூட தெரியாமல் ஐ.எம்.எப். விதிக்கும் நிபந்தனைகள் அடுத்த நிமிடமே அரசின் கொள்கை முடிவாக அறிவிக்கப்படுகின்றன.

கடந்த மாதம் தாய்லாந்து நாட்டுத் தலைநகரான பாங்காக்கில் நடைபெற்ற உலக வங்கி இயக்குனர்களின் கூட்டத்தில் நிதி மந்திரி மன்மோகன் சிங்கும் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில், நலிவடைந்த அரசுத்துறை ஆலைகளை மூடவேண்டும்; அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்கவேண்டும்; அன்னிய வங்கிகள் இந்தியாவில் தடையின்றி செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இவற்றை விசுவாசமாக ஏற்றுக் கொண்ட நிதி மந்திரி, மந்திரி சபையைக் கூட கலந்தாலோசிக்காமல் இந்



இந்தியாவே கொள்ளையடிக்கப்பட்டு விட்டது; எஞ்சியிருக்கும் சொத்து இக்கூட்டிலிருக்கும் உயிர்கள்தான்!

நிபந்தனைகளையே அரசின் கொள்கை முடிவுகளாக பாங்காக் நகரத்திலேயே அறிவித்தார்.

இணையான அரசு நடத்தும் உலக வங்கி, நாடாளுமன்றத்தை வெறும் தலையாட்டி பொம்மைகளின் கூடாரமாக மாற்றுவது மட்டுமல்ல; அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளைக்கூட மேற்பார்வையிடுகிறது. தேர்தல்களை எப்போது நடத்தலாம் என்று தீர்மானிப்பதும்கூட உலக வங்கி தான். மனிதவுரிமைகளை மீறி விட்டதாகக் கூறி ஏழை நாடுகளுக்குக் கடன் கொடுக்க மறுப்பது; தேர்தல்களை நடத்தச் சொல்லி நிர்ப்பந்தித்து தமக்கு சாதகமான கும்பலை பதவியில் அமர்த்துவது முதலானவை அதன் உத்திகள். பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக்கூறி இதே வகையில் இந்தியாவைப் பணிய வைத்துள்ளது உலக வங்கி.

வளைகுடாப் போரின்போது அமெரிக்கப்போர் விமானங்களுக்கு ரகசியமாக எரிபொருள் நிரப்பிக் கொள்ளும் தளமாக சேவை செய்த இந்தியா, இன்றும்கூட அதைத்தொடர்ந்து வருகிறது. உலக வங்கியின் நிர்பந்தம்தான் இதற்குக் காரணம் என்று சொல்லத் தேவையில்லை. இதே போல, வளைகுடாப் போருக்குப் பிறகு எந்தவொரு ஏழை நாடும் அணு ஆயுதங்களைத் தயாரிக்கக்கூடாது என்று ஏகாதிபத்திய வல்லரசுகள் மறைமுகமாக மிரட்டுகின்றன. அணு ஆயுத உற்பத்தியையும் விரிவாக்கத்தையும் தடுப்பது, உலக சமாதானம் என்ற பெயரில், எக்காரணத்தைக் கொண்டு அணு ஆயுதங்களைத் தயாரிக்க மாட்டோம் என்று ஒப்பந்தத்தில் (NPT) கையெழுத்திடுமாறு அமெரிக்கா மிரட்டுகிறது. இல்லையெனில் உலக வங்கியின் கடன்[illegible] டுவோம். "சூப்பர் 301" முதல[illegible] ரிக்க வர்த்தக தடைச் சட்டங்[illegible] கொண்டு இந்தியாவைக் கறுப்புப் பட்டியில் சேர்த்து விடுவோம் என்று அச்சுறுத்துகிறது. கடைசியில், அணு ஆயதங்களைத் தயாரிப்பதா, வேண்டாமா என்று தீர்மானிக்கும் உரிமை இந்தியாவிடம் இல்லை. அது அமெரிக்க வெள்ளை மாளிகையில்தான் தீர்மானிக்கப்படுகிறது.

### இந்தியாவின் தலைநகர் வாஷிங்டன்

சுருக்கமாகச் சொன்னால், இனி இந்தியாவின் தலைநகரம் டெல்லி அல்ல; வாஷிங்டன்! இப்படி எல்லா வகையிலும் சுயாதிபத்திய உரிமையை இழந்து, இந்தியா மீண்டும் மறுகாலனியாக்கப்பட்ட போதிலும் கூட, இன்னமும் இந்தியா சுதந்திர நாடு தான் என்று ஆளும் வர்க்க சித்தாந்தவாதிகள் பசப்புகின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகளும் ஓடுகாலிகளும் பொருளாதார ரீதியில் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருந்தாலும் இந்தியா, அரசியல் ரீதியில் சுதந்திரமான நாடு என்று ஏய்க்கின்றனர்.

ஐ.எம்.எப்பின் கடுமையான நிபந்தனைகளை ஏற்று நாட்டை முற்றாக அடகு வைக்கும் கொள்கைக்கு எதிராக வெற்றுக் கூச்சல் போடும் போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் ஜனதா தளம் - தேசிய முன்னணியிடம் கூட இதற்கெதிரான மாற்றுப் பொருளாதாரத்திட்டம் இல்லை. பாசிச இந்திரா - ராஜீவின் பொருளாதாரக் கொள்கைகளைத்தான் தனது ஆட்சிக் காலத்தில் தேசிய முன்னணி செயல்படுத்தியது. கேரளா, மே.வங்கத்தில் இதே கொள்கையைத் தான் தமது ஆட்சிக் காலத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் பின்பற்றினர். ஐ.எம்.எப்பின் நிபந்தனையின்படி மே.வங்கத்தில் பேருந்துக் கட்டணங்களை உயர்த்தியதை எதிர்த்து மக்கள் போராடிய போது அடக்கு முறையை ஏவினர்.

போலிகளிடமும், எதிர்க்கட்சிகளிடமும் வெளிப்படையாக மக்கள் மீது சுமையேற்றாமல் ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளைச் செயல்படுத்த வேண்டும் என்ற கொள்கைதான் உள்ளது. மக்கள் மீது நேரடியாகப் பொருளாதாரச் சுமைகளை ஏற்றினால், பாராளுமன்ற ஆட்சி முறையின் மீது மக்கள் வெறுப்படைந்து பெரும் புரட்சியில் இறங்கி விடுவார்கள் என்பதால் நைச்சியமான முறைகளின் மூலம் இதைச் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் கொள்கையாக உள்ளது. இப்படி அனைத்து ஓட்டுக் கட்சிகளின் நேரடி மறைமுக ஆதரவோடு ஏகாதிபத்தியங்கள் மற்றும் தரகுப் பெருமுதலாளிகளின் நலனுக்காக கோடானுகோடி மக்களை வறுமைப்படுகுழியில் தள்ளிவிட்டு நாட்டை மறுகாலனியாக்கி வருகிறது, கழிசடை காங்கிரசு அரசு.

முடியாது; இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. இந்தியா மறுகாலனியாக்கப்படுமுன்னே, இன்னுமொரு எத்தியோப்பியாவாக மாற்றப்படுமுன்னே விழித்தெழுங்கள். தேசவிரோத - மக்கள் விரோத ஆட்சியாளர்களையும் அவர்களின் எஜமானவர்களான ஏகாதிபத்தியங்களையும் தூக்கியெறியும் பெரும் புரட்சியில் இறங்க இன்றே கிளர்ந்தெழுங்கள்!

● குமார்

www.padippakam.com

# ...ள் முகாம் அவலம்
# தமிழரின் குமுறல்

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி தாலுக்காவில் உள்ளது போச்சம் பள்ளி என்ற கிராம்ம். இங்குள்ள ஒழுங்கு முறை விற்பனைகூட வளாகத்தில் ஈழ தமிழர் அகதி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் 170 குடும்பங்களாக மொத்த நபர் 530 பேர் உள்ளனர். இவர்களுக்கு தேவையான வசதிகள் ஒன்றுமே இங்கு இல்லை. குறிப்பாக தண்ணீர் வசதி மிகவும் குறைவு. அதற்கு ஒரே ஒரு கைப்பம்புதான் பூர்த்தி செய்கிறது. பலமுறை அகதிகள் தண்ணீர் வசதி குறித்து உரிய அதிகாரிகளிடம் எடுத்துரைத்தும் பலன் இல்லை. அடுத்த பெரும் பிரச்சனை கழிவறை வசதி மிக மிக மோசம். ஒரே ஒரு கழிவறையை நான்காக தடுத்துள்ளனர். இதுவும் 'ப்ளஷ் அவுட்' முறை கிடையாது. ஆதிகாலத்து முறையான ஒரு கட்டை சுவர், அதன்மேல் ஏறி அமர்ந்துதான் இயற்கை உபாதையை கழிக்கின்றனர்.

குடியிருக்கும் ''டெண்ட்கள்'' மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ''ஆஸ்பெட்டாஸ்'' அட்டை வேயப்பட்ட பெரிய கொட்டகையின் உள்புறம் பலஅறைகளாக தடுத்துள்ளனர். இந்த தடுப்பும் ஏதோ ஒரு வகை அட்டையால் தடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஆள் உயரத்தை விட சற்றே அதிகமான உயரத்தில்தான் இந்த அட்டை அடைப்புகள் உள்ளன. சாதாரண உயரத்தில் உள்ள ஒரு நபர் சற்று எக்கி பார்த்தால் அடுத்த அறையில் நடப்பதை நன்றாகப் பார்க்கலாம். வெயில் காலத்தில் இந்த ''டெண்ட்கள்'' உள்ளே அனல் பறக்கும். மற்றும் வீட்டினுள் எரிக்கப்படும் அடுப்பு புகை மண்டலமாக அனைத்து அறைகளிலும் சூழ்ந்து கொள்ளும். இதனால் இந்த ''டெண்ட்''களில் எப்பொழுதும் புகை சூழ்ந்து இருக்கும். குழந்தைகள் மூச்சு முட்டி அலறுவதையும தாய்மார்கள் புகையுடன் போராடுவதையும் இங்கு சாதாரணமாக காணலாம். இதனால் பல தீராத வியாதிகள் அனைவரையும் ஒட்டிக் கொள்கிறது. கூரை இந்த மழைகாலத்தில் ஆங்காங்கே பன்னீர் தெளிக்கின்றது.

அன்னைவரும் கல்வியறிவு பெற வேண்டுமென அரசு எழுத்தறிவு இயக்கம் என்ற பெயரில் கோடி கணக்கில் பணம் செலவு செய்கிறது. ஆனால் இந்த இளம் ஈழத்து அறிவுக் களஞ்சியங்கள் கல்வி வாய்ப்பின்றி உள்ளனர். இங்குள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இலங்கை மாணவர்களை சேர்த்துக் கொள்வதில்லையாம். இலங்கை மாணவர்களை பள்ளியில் சேர்த்துக் கொள்வதில் இவர்களுக்கு என்ன கேடென யாருக்கும் புரியவில்லை.

போச்சம் பள்ளியில் 'அண்ணா அறிவாலயம்' என்ற பெயரில் தனியார் நடத்தும் பள்ளி உள்ளது. இங்கு ஒரு ஈழ அகதி சென்று தனது மகனை சேர்க்க முயன்றுள்ளார். அவர்க்கு மிக கேவலமான அனுபவம் கிடைத்ததுதான் மிச்சம், ''சீட்'' கிடைக்கவில்லை. மேலும் இப்பள்ளியில் தலைமை ஆசிரியர் ''அகதி கம்னாட்டிகளா, வெளியே போங்கடா. உங்களுக்கு படிப்பு ஒரு கேடா, வெளியே போங்கடா நாய்களா'' என்று வாயில் வந்தபடி திட்டி விரட்டியுள்ளார். இப்பொழுது இங்குள்ள மாணவர்கள் கல்விக்கூடம் என்ற ஒன்றையே கிட்டதட்ட மறந்து விட்டனர்.

**''இங்கு இப்படி மானங்கெட்டு வாழ்வதை விட எங்கட நாடு சென்று தோக்கு ஏந்தலாம் அல்லது சிங்கள ஆமியால சாவலாம்''**
**— ஓர் ஈழ அகதியின் குமுறல்!**



இவைகட்கு விடிவு உண்டா? அகதிகள் என்ன செய்ய இயலும். அதிகமாகப் போனால் தங்களின் உயர் அதிகாரிகளான தாசில்தார், கலெக்டர் போன்ற அதிகாரிகளுக்கு மனு செய்யலாம். செய்தார்களா? பலமுறை... பலப்பல முறை. பலன்தான் ஒன்றுமில்லை. எப்படி பலனிருக்கும்?

பிரேமதாசாவின் கைக்கூலியாக செயல்படும் ஜெயலலிதாவின் கைக்கூலிகள்தானே நமது ஆட்சியரும், தாசில்தார்களும். அப்படியிருக்க ஈழ தமிழ் அகதிகள் எப்படி இந்த அரசிடமும் அதன் அதிகாரிகளிடமும் தங்களின் அத்தியாவசிய அடிப்படை உரிமைகளை 'கேட்டுப்பெற' இயலும்.

அகதிகளின் இப்பொழுதய மனோ நிலை என்ன? ''இங்கு இப்படி மானங்கெட்டு வாழ்வதை விட எங்கட நாடு சென்று தோக்கு ஏந்தலாம் அல்லது சிங்கள ஆமியால சாவலாம்'' என்பதுதான்.

அகதிகளை அடிமைகளை போல நடத்துவதில் யாருக்காவது ஏதாவது. பலனுண்டா?

உண்டு... உண்டு நிறைய உண்டு. கடினமான பாறை மண் வெட்டுதல், மரக்கன்றுகள் நட குழி வெட்டுதல் போன்ற வேலைகளைச் செய்ய இப்பொழுது ஈழத் தமிழர்களை பயன்படுத்துகின்றனர். ஈழத் தமிழரிடம் வாங்குவது நிறைந்த வேலை. கொடுப்பது குறைந்த கூலி. மற்றொரு கொடுமை சிறுவர்களை வேலை வாங்குவது. இம்முகாம் ஒழுங்கு முறை விற்பனைக்கூட ''காம்பௌண்ட்'' உள்ளேயே இருப்பதனால் இங்கு விற்பனைக்கு வரும் நிலக்கடலையை காயவைப்பது, மூட்டையினுள் அள்ளி கொட்டுவது, குவியலாக்குவது போன்ற வேலைகளை அந்த பிஞ்சுகரங்கள் ஐம்பது காசும் எழுபத்தைந்து காசும் கூலி பெற்று செய்கின்றனர். நல்ல விளையாட்டில் ஆர்வம் செலுத்த வேண்டிய பலசாலி மாணவர்கள் தங்களின் பலத்தை மூட்டை தூக்கிப் போட பயன்படுத்துகின்றனர்.

ஈழத்து மாணவர்கள் இப்படி ஊருக்கு உழைக்கட்டும் என்ற பரந்த எண்ணத்தில்தான் பள்ளி நிர்வாகிகள் இவர்களை தங்கள் பள்ளியில் சேர்க்கவில்லை போலும்.

தமிழகத்தில் உள்ள எல்லா அகதி முகாம்களும் இந்த லட்சணத்தில்தான் உள்ளன. சகோதரர்களாக பழகிய இந்திய தமிழர்களும் பாசிச ஜெயாவின் பொய் பிரசாரத்தினால் ஈழத்து சகோதரனை மாற்றானாக பார்க்க துவங்கிவிட்டனர். ஈழ தமிழர்களின் துயரம் எப்பொழுது தீரும். இவர்கள் விடியலுக்காகத்தான் விழித்துள்ளனர். விடியல் கண்டிப்பாக கிடைக்குமென நம்புகின்றனர். ஆனால் அதற்குள் இங்கு இவர்களின் விழிகள் மட்டும் பறிக்கப்பட்டுவிடும்.

தகவல்: ஓர் ஈழ அகதி


படிப்பகம்

www.padippakam.com

# புலிகளை ஆதரிக்காதவர்கள் மீதும் ''தடா''

ராஜீவ், பத்மநாபா கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகள், அவர்களது கூட்டாளிகள் தாம் ''தடா (TADA)'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் திரும்பத் திரும்பக் கூறுகின்றனர்.

''தடாவை அவ்வளவு சுலபமாகப் பயன்படுத்த முடியாது; ஏனென்றால் தடாவின் கீழ் கைதுசெய்யப்படும் ஒவ்வொரு வழக்கும் தனிச்சிறப்பான வழக்கு மன்றத்துக்குப் போகிறது. மேலும் மாநில உள்துறை செயலாளர் (ஒவ்வொரு வழக்கையும்) மறுபரிசீலனை செய்கிறார். எனவே தடாவைத் தராதரமின்றிப் பயன்படுத்த முடியாது. இதுவரை ஒரு கையளவானவரே ''தடா''வின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்; அதைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிரான போதிய பாதுகாப்புகள் உள்ளன'' என்று ''வீக்'' பத்திரிக்கைக்குப் பேட்டியளித்துள்ளார் டி.ஜி.பி. ஸ்ரீபால்.

இது அவ்வளவும் பொய். இதுவரை 187 பேர் 'தடா' என்கிற பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, 'அப்ரூவர்' ஆக்கப்பட்ட நாகராஜன் தவிர அனைவரும் காராகிருகத்தில் தள்ளப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் விவகாரத்தில் எவ்வகையிலும் சம்பந்தப்படாதவர்களான கடலூர் - நெய்வேலி மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் தொழிலாளர் பிரச்சாரக் குழுத் தோழர்கள் ஐந்து பேர் ''தடா''வின் கீழ்கைது செய்து சித்திரவதை செய்யப்படுவதோடு, சிறப்பு வழக்கு மன்றத்தின் முன்பு கொண்டுவரவே இல்லை.

டி.ஜி.பி. ஸ்ரீபால் சொன்னதற்கு நேரெதிராக பழிவாங்குவதற்கும், கேடாகப் பயன்படுத்துவதற்கும் மிகச் சுலபமாக ஏவி விடக் கூடிய கருப்புச் சட்டம்தான் இந்தத் ''தடா'' என்பதற்கு இந்தத் தோழர்கள் மீதான வழக்கே சான்றாக விளங்குகிறது.

ஈழ அகதிகளை வெளியேற்றுவதற்கு எதிராகவும், ஈழ போராளிகளின் உரிமைக்காகவும் தொடர்ந்து கடலூர் ம.க.இ.க. வும் நெய்வேலி தொழிலாளர் பிரச்சாரக் குழுவும் இயக்கம் எடுத்து வந்தது குறித்து ஆத்திரமடைந்தனர், காங்கிரசும் எம்.எல்.ஏ. வெங்கடேசனும், காங்.பிரமுகர் சிவக்கொழுந்துவும். இந்தத் தோழர்களை தே.பா.ச. விலோ, ''தடா''விலோ கைது செய்யும்படி மாவட்டாட்சியாளருக்கும், போலீசுக்கும் பலமுறை மனுப்போட்டனர். இதனால் தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக தெருமுனைக் கூட்டம் நடத்தியதற்காக நெய்வேலியில் மூன்று தோழர்களும், சுவரொட்டி இயக்கத்திற்காக கடலூரில் ஆறு தோழர்களும் கைது செய்யப்பட்டு பொய்வழக்கு போடப்பட்டு பிணையில் வெளிவந்தனர்.

16.10.91 அன்று நெய்வேலி 26வது வட்டத்திலுள்ள வீடுகளில் பிரசுர விநியோகம் மற்றும் நிதிவசூலில் தோழர்கள் ஈடுபட்டனர். இதனால் வெறிபிடித்த காங்கிரசு, அ.தி.மு.க. காலிகள் போலீசுக்குத் தகவல் தந்தனர். அங்கு வந்த நெய்வேலி புறநகர போலீசு, தோழர்கள் செந்தில்குமார், ரமேஷ், பாலு, கிருஷ்ணா, அருள்மணி ஆகியோரைக் கைது செய்து இழுத்துக் கொண்டு போனது. அஞ்சாத தோழர்கள் வழிநெடுக, ''போலீசு அராஜகம் ஒழிக! பார்ப்பன - பாசிச ஜெயாவின் அடக்குமுறையை முறியடிப்போம்! காங்கிரசு - அ.தி.மு.க. காலிகள் ஒழிக!'' என முழங்கினர்.


காவல்நிலைய அதிகாரி மகாலிங்கம் தோழர்களை அடித்து உள்ளாடையுடன் சிறையில் பூட்டினார். பின் தகவல் கிடைத்து வந்த சூப்பிரெண்டெண்ட் ஜாங்கிட் தனது சகாக்களுடன் சேர்ந்து தோழர்கள் அனைவரையும் வெறிநாய் கடித்துக் குதறுவது போல சுழற்றிச் சுழற்றித் தாக்கினார். பல கம்புகள் உடைந்தன; ஒரு தோழரின் மூக்குக் கண்ணாடி நொறுங்கியது. ஒரு தோழர் மூர்ச்சை அடையும் வரை இது நடந்தது.

தோழர்கள் உடல் முழுவதும் ரத்தக்காயங்களும், ஏராளமான உள் காயங்களும் ஏற்பட்டன. வேறுவேறு போலீசு நிலையங்களில் அவர்கள் அடைக்கப்பட்டதையும், இரவு உணவு கொடுக்காததையும் கண்டித்து தோழர் செந்தில்குமார் உண்ணாவிரதம் இருந்தார். மீண்டும் தோழர்கள் ஒரே சிறையில் அடைக்கப்பட்டனர். கைரேகை, புகைப்படம் எடுத்துக்கொண்டு தோழர்களை பண்ருட்டி மருத்துவமனையில் காட்டிவிட்டு, மீண்டும் சிறையிலடைத்தனர். தங்களை வழக்கு மன்ற நடுவர் முன்பு ஆஜர்படுத்தும்படி கோரி தோழர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

அடுத்தநாள் (18.10.91) நெய்வேலி வழியாக செல்லவிருந்த ஜெயலலிதாவைக் கொல்ல ''ஜெலட்டின்'' குச்சிகளும், கம்பி 'ஒயரும்' வைத்துக் கொண்டு சதி செய்ததாகக் கூறி TADA (தடா) சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து 60 நாள் காவல் உத்திரவு வாங்கி பண்ருட்டி கிளைச்சிறையில் தோழர்கள் அடைக்கப்பட்டனர். சுகாதாரம், உணவு, சிறைக்குள் அடைத்தே வைப்பது ஆகியவை காரணமாக கடலூர் மத்திய சிறைக்கு மாற்றவும், அருள்மணியின் உடைந்த மூக்குக் கண்ணாடியை சரி செய்யவும் கோரி பலமுறை நேரிலும், மனுமூலமும் தோழர்கள் கோரினர். எப்பலனும் கிடைக்காததால் தோழர்கள் மீண்டும் உண்ணாவிரதம் துவங்கினர். இதற்கிடையே, ''தடா''வின் கீழ் கைது செய்யப்பட்ட பண்ருட்டி முற்போக்கு இளைஞர் அணித் தோழர்கள் ஆறுபேர் இச்சிறையில் அடைக்கப்பட்டனர்.

உண்ணாவிரதம் தொடங்கிய இரண்டாம் நாள் சிறை விதிமுறைகளைக் கடைபிடிப்பது, செய்தித்தாள் வழங்குவது ஆகியன கோரி சிறைக்கண்காணிப்பாளரிடம் பேசிக் கொண்டிருந்தபோதே வார்டர் குழந்தைவேலு, ராஜ்குமார், ஏட்டு ராமலிங்கம் ஆகியோர் தோழர்களை மிருகத்தனமாகத் தாக்கினர். கண்காணிப்பாளர் வேல் முருகனும் அவர்களோடு சேர்ந்து தாக்கினார். இதனால் தோழர் செந்தில் குமாருக்கு வலது கை முறிந்தது. தாக்குதலைக் கண்டும் தளராமல் தோழர்கள் உண்ணாவிரதத்தைத் தொடரவே அடுத்த நாள் கடலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டனர். பண்ருட்டியிலிருந்து கடலூர் செல்லும்வரை வழிநெடுகிலும் விண்ணதிர முழங்கிச் சென்றனர்.

இத்தகைய அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சவோ மனந்தளரவோ இல்லாமல் தோழர்கள் உற்சாகமாகவே உள்ளனர். பல மார்க்சிய - லெனினிய வகுப்புகளும் நவம்பர் புரட்சி தினக் கூட்டமும் நடத்தினர்.



புரட்சிகரப் பாடல்கள் சிறைக்குள்ளும் எதிரொலிக்கின்றன.

இதற்கிடையே கடலூர் ம.க.இ.க. தோழர்களான தீனதயாளனையும், சக்கரவர்த்தியையும் பிடிப்பதற்காக அவர்களது உறவினர்கள், உற்றார்களுக்குப் பல தொல்லைகளையும் தருகிறது போலீசு. அவர்களைப் பிடித்துக் கொண்டுபோய் சட்டவிரோதமாய் சிறையிலடைத்துப் பணம் பறிக்கிறது. ''ரெய்டு''கள் நடத்தி மிரட்டுகிறது. புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் விற்கும் கடைக்காரர்களை மிரட்டுவதோடு புத்தகங்களையும் அள்ளிக்கொண்டு போகிறது. கல்விச் சீர்திருத்தங்கள் கோருவோரையும் கூட, ''தடா''வில் தள்ளிவிடுவேன் என்று மிரட்டிக் கொண்டு அலைகிறார் சூப்பிரெண்டெண்ட் ஜாங்கிட்.

அரசு பயங்கரவாத அடக்குமுறையினால் புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களை ஒடுக்கவே முடியாது. மாறாக மேலும் கூடுதலான மக்கள் விழிப்படைந்து இந்தப் பார்ப்பன - பாசிச ஆட்சிக்குப் பாடம் புகட்டுவார்கள் என்பது விரைவிலேயே அவர்களுக்குத் தெரிய வரும்.

படிப்பகம்

www.padippakam.com

## காங்கிரசு – பாகிஸ்தான்

# இரண்டாவது வங்கப்பிரிவினை

**பாகிஸ்தான் பிரிவினைக்கு ஜின்னாவைக் குற்றம்சாட்டும் காங்கிரசும் பிற கட்சிகளும் இன்று காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளுக்கு பாகிஸ்தான்தான் காரணம் என்கின்றனர். உல்பா போராளிகளுக்கு பங்களா தேஷ் அடைக்கலம் தருவதாக குற்றம் சாட்டுகின்றனர். பஞ்சாப்பில் மதவெறி சக்திகளைத் தூண்டி வளர்த்தது இந்திரா என்பதும், இந்திராவின் அடக்குமுறை மற்றும் ராஜீவின் அரசியல் மோசடியின் விளைவுதான் அஸ்ஸாம் நெருக்கடி என்பதும், காஷ்மீர் மக்களுக்கு இந்திய ஆட்சியாளர்கள் இழைத்த துரோகத்தின் எதிர்விளைவுதான் அம்மக்களின் போராட்டம் என்பதும் நடப்பு அரசியலைக் கூர்ந்து கவனிப்போர் அனைவரும் அறிந்திருக்கும் உண்மை.**

**கண்ணெதிரே நடக்கும் நிகழ்ச்சியையே திரித்தும், இருட்டடிப்பு செய்தும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் அகில இந்திய ஓட்டுக் கட்சிகளும், பத்திரிக்கைகளும், ஒரு தலைமுறைக்கு முந்தைய வரலாற்றை மிகச் சுலபமாகத் தமக்குச் சாதகமாக வளைத்துக் கொள்வதில் வியப்பில்லை. இன்று இந்தியா நொறுங்கிச் சிதறுவதற்குக் காரணமான காங்கிரசும், இந்துமத வெறியர்களும் தான் அன்றைய பாகிஸ்தான் பிரிவினைக்கும் காரணமாக இருந்தார்கள் என்பதை ஆணித்தரமான ஆதாரங்களுடன் விளக்குகிறது இந்தக் கட்டுரை.**

**பிரிட்டிஷ் இந்தியாவை விள்ளாமல் விரியாமல் தன் கைக்கு மாற்றிக் கொள்ள காங்கிரசும் அதன் பின்பலமாக இருந்த மார்வாரி, பனியா தரகு முதலாளிகளும் முயன்றனர். சர்வ வல்லமை படைத்த மைய அரசின்கீழ் மொழி, இன மதத் தனித்தன்மைகளற்ற இந்து - இந்தியாவைக் கட்டுவதே அவர்களது விருப்பமாக இருந்தது. முஸ்லிம் லீக் இதை எதிர்த்து அதிகாரப் பரவலின் அடிப்படையிலான கூட்டரசை வலியுறுத்தவே காங்கிரசு தன் தந்திரத்தை மாற்றிக் கொண்டது.**

**பஞ்சாபையும் வங்காளத்தையும் உடைத்து பாகிஸ்தானை உருவாக்கி விட்டு மீதமுள்ள பகுதியை தான் விரும்பியபடி இந்துஸ்தானமாக்க முயன்றது. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே பிரிவினையை எதிர்த்த வங்காளிகளும், பஞ்சாபிகளும் தமது இனம் மதத்தினடிப்படையில் துண்டாடப்படுவதை எதிர்த்தனர். உடைக்கப்படாமல் இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் இணைவதையே அவர்கள் விரும்பினர். இந்தத் தேசிய உணர்வைக் கருக்க மதவெறித் தீ மூட்டப்பட்டது. பஞ்சாபும், வங்காளமும் உடைக்கப்பட்டன. காங்கிரசு, இன உரிமை உணர்வையும் கட்டோடு வெறுத்ததற்கு இது ஓர் எடுத்துக் காட்டு. விரிவான சந்தை, நிறைவான லாபம் என்ற தரகு முதலாளிகளின் ஆசையே காங்கிரசின் அரசியலுக்கு அடிப்படை.**

**மேலும் துவக்க முதலே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சியும் அதற்கு மகிழ்ச்சியுடன் தம்மை ஒப்புக் கொடுத்த தரகு முதலாளித்துவத்தின் பிரதிநிதிகளாகிய காந்தியும் ஜின்னாவும் பிரிவினை குறித்து எள்ளளவும் வருந்தவில்லை; முஸ்லீம் தரகு முதலாளிகளுக்கு அதிகாரத்தில் பங்கு கொடுக்காமல் முழு அதிகாரத்தையும் தானே கைப்பற்ற முயன்று தோற்ற இந்துத் தரகு முதலாளிகள் இரண்டாவது துருப்புச் சீட்டுதான் பாகிஸ்தான். எனவே, மதவெறி, கலவரம், பிரிவினை ஆகியவற்றில் பிரதான பங்கு காங்கிரசினுடையதுதான்.**

**காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாமில் ராணுவத்தை நிறுத்தியும், பாகிஸ்தான், வங்காள தேசத்துக்கு ராணுவத்தை அனுப்பியும் ''அகண்ட பாரதம்'' படைக்க விரும்பும் முரளி மனோகர் ஜோஷியின் மூதாதையர்கள் ஹெட்கேவாரும் கோல்வால்கரும் மட்டுமல்ல, காந்தியும் நேருவும் கூடத்தான் என்பதை நிரூபிக்கிறது தோழர் சுனிதிகுமார் கோஷ் எழுதிய இந்தக் கட்டுரை.**

**— மொழிபெயர்ப்பாளர்**

படிப்பகம்

1947 இல் மத அடிப்படையில் இந்தியாவைத் துண்டாடியவர்கள் யார்? எந்த சக்தி? இந்தக் கேள்விக்கு இரண்டு முரண்பட்ட விடைகள் தரப்படுகின்றன. ஜின்னாவின் வறட்டுப் பிடிவாதம்தான் இந்தத் துயரமான பிரிவினைக்குக் காரணம் என்று இந்தியாவின் பெரும்பான்மையான அரசியல்வாதிகளும், கல்வியாளர்களும், பிரபல பத்திரிகையாளர்களும் கருதுகிறார்கள். பத்திரிகையாளரும், ராஜதந்திரியுமான குல்தீப் நய்யாரும் இதே கருத்தையே முன்வைத்திருக்கிறார். (பார்க்க: ''பாகிஸ்தான் பிரிவினையில் ஜின்னாவின் உறுதி'' -ஸ்டேட்ஸ்மேன், ஆகஸ்டு-14 '91)

ஆனால் பாகிஸ்தான் பிரிவினைக்குக் காங்கிரஸ் தலைவர்கள்தான் பொறுப்பு என்கிறார் அபுல்கலாம் ஆசாத்.[1] ''பாகிஸ்தான் பிரிவினையைத் தவிர்க்க முடியாது என்றுதான் பலரும் கருதினர். இந்தியத் தலைவர்கள், குறிப்பாக நேரு, படேல் ஆகியோர் பிரிவினையையே விரும்பினர்'' என்கிறார் மைக்கேல் பிரெசர். இவர் நேருவின் அமெரிக்க விசிறி; அவரது வாழ்க்கை வரலாற்றையும் எழுதியவர். பிரெசருக்கு நேரு அளித்த பேட்டியிலும் அவர் இந்தக் கருத்தையே வெளிப்படுத்தியிருக்கிறார்.[2] அன்றைய அரசியல் நிகழ்வுகளை நெருங்கியிருந்து காணும் வாய்ப்பு பெற்றிருந்த, முன்னாள் இந்தியச் சீர்த்திருத்தக் கமிஷனின் தலைவர் எச்.வி.ஹட்ஸன், பி.சிவாராவ், ஃபிராங்க் மோரேஸ் (முன்னாள் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் - மொ.ர்) போன்றோரும் இவ்வாறுதான் கூறுகின்றனர்.[3]

### பிரச்சனையின் மையம் என்ன?

பிராந்தியங்கள் (அல்லது மாநிலங்கள்) மீது ஏறி மிதிக்கும் மைய அரசா, அல்லது பிராந்தியங்களுக்குத் தன்னாட்சி உரிமையைத் தருகின்ற உண்மையான ஒன்றிய அரசா? இந்தியாவின் எதிர்கால அரசு (1947-க்குப் பின்) எந்த வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற பிரச்சினையில்தான் காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகிற்குமிடையிலான கருத்து வேறுபாடு மையம் கொண்டிருந்தது. இக்கருத்து வேறுபாடு முற்றிய தன் விளைவுதான் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை.

அதிகாரம் கொண்ட பிராந்தியங்கள் அடங்கிய கூட்டாட்சி அமைப்பாகத்தான் இந்திய சுயராச்சியம் இருக்கவேண்டும் என்பது ஏறத்தாழ 1924 முதலே முஸ்லீம் லீகின் கோரிக்கையாக இருந்து வந்தது. தீவிரவாதப் பிரிவைச் சார்ந்த காந்தியின் நண்பரும், முதல் வட்டமேசை மாநாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவருமான மௌலானா முகமது அலி, ஜனவரி 1931-இல் இறக்கும் தருவாயில் கீழ்க்கண்டவாறு அறிவித்தார். ''ஏக போகச் செல்வாக்கு செலுத்தும் ஒரு மிகச் சிறிய சாதி, இந்து மதத்தினரின் தலைவிதியை நிர்ணயிக்கவும், அதுவே பெரும்பான்மை மதமாக இருப்பதால் அதன் மூலம் இந்திய நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அதிகாரத்தையே தன் கையில் வைத்திருக்கவும் முயல்கிறது - அவர்கள்தான் பணியாக்கள்.''

www.padippakam.com

அந்நிய சாத்தான்களை, ஒரு வியாபாரிகளின் தேசம் நம் தலைவிதியை தீர்மானிப்பதை - ஒழித்துக் கட்டுவதில் வேறெந்த இந்தியனையும் விட நான் அதிகமாகவே ஆவலாக இருக்கிறேன். அந்த இடத்தில் சுதேசி சாத்தான்களை - வியாபாரிகளின் சாதியை உருவாக்குவதையும் நான் விரும்பவில்லை.

முஸ்லீம் மக்களின் 14 அம்சக் கோரிக்கையின் பிரதான அம்சம தனித்தொகுதி அல்ல; கூட்டரசாங்கம் (Federal Govt) தான். எங்கு நோக்கிலும் தம்மீது ஏறிச் சவாரி செய்கின்ற நிரந்தர இந்துப் பெரும்பான்மை கொண்ட ஒற்றை மைய அரசை முஸ்லீம்கள் விரும்பவில்லை.[4]

முஸ்லீம் லீக் கட்சியினரும், அனைத்திந்திய முஸ்லீம் மாநாட்டுக் கட்சியினரும் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியின் முஸ்லீம் தலைவர்களான டாக்டர் அன்சாரி போன்றோரும், 1931 ஏப்ரலில் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள லண்டனுக்கு புறப்படுவதற்கு முன் நடந்த மாநாட்டில் காந்தியைச் சந்தித்து இதே கோரிக்கையைத்தான் எழுப்பினர்.[5]

1928-இல் நேருவால் முன் வைக்கப்பட்ட அரசியல் நிர்ணயச் சட்டத்தில் காங்கிரசின் நிலைப்பாடு தெளிவாகப் புலனாகியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய சட்டசபைகளையும், அமைச்சரவைகளையும் எல்லா விவகாரங்களிலும் கீழ்ப்படுத்தவும், ஏன் கலைப்பதற்கும் கூட முன்வைத்த அ.நி. சட்டம் மைய அரசுக்கு அதிகாரமளித்தது.[6] பொது மேடைகளில சில சந்தர்ப்பங்களில் வேறு விதமாகப் பேசிய போதிலும், பிராந்தியங்களுக்கு நியாயமான சுயாட்சி அளிப்பதை நேரு கடுமையாக எதிர்த்தார். வலிமையான மைய அரசு என்ற கருத்தைத்தான் அவர் ஆதரித்தார்.[7]

இரண்டாவது வட்டமேசை மாநாட்டுக்குப் புறப்படுவதற்கு முன் ஜூலை 1931-இல் கூடிய காங்கிரஸ் செயற்குழு கீழ்க்கண்டவாறு அறிவித்தது. "இந்தியாவின் எதிர்கால அரசு கூட்டரசாகவே இருக்கும். மைய அரசின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட அதிகாரங்கள் பிராந்திய அரசுகளிடம் இருக்கும் - அது இந்தியாவின் நலனுக்கு ஊறு விளைவிக்காத பட்சத்தில்.[8] பல முக்கியப் பிரச்சினைகளிலும் காங்கிரஸ் தலைவர்களின் தீர்மானங்களும் அறிக்கைகளும் இருந்ததைப் போன்றே இதுவும் மழுப்பலாகவும், மோசடியாகவும் இருந்தது.

### ஆங்கில அரசின் ஒரே வாரிசு!

1931-இன் துவக்கத்திலிருந்தே முஸ்லீம்கள் காங்கிரசிலிருந்து ஒதுங்கத் தொடங்கினர்; ஆனால் காங்கிரஸ் தலைவர்களோ அனைத்து வர்க்கங்கள் மற்றும் மதங்களைச் சார்ந்த இந்திய மக்கள் அனைவரையுமே தாங்கள் மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும், எனவே பிரிட்டிஷ் அரசின் வாரிசு தாங்கள் தான் என்றும் அறிவிக்கத் தொடங்கினர். வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின் ஒரே பிரதிநிதியாகக் கலந்து கொண்ட காந்தி, அம்மாநாட்டிலும், பிறகு வேறு பல சந்தர்ப்பங்களிலும் இதையே வலியுறுத்தினார்.[9]



பாகிஸ்தான் பிரிவினைக்கு யார் காரணம்? காந்தியா அல்லது ஜின்னாவா?

"எல்லாப் பிரச்சினைகளையும் தன்னுடன் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறும்" ஏனெனில் "முஸ்லீம்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்பவர்களை விட அவர்களது நலனைத் தான் நல்ல முறையில் பிரதிபலிப்பதாகவும்" பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்ட் இடம் காந்தி கூறினார்.[10]

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இதைப் போலவே பேசிவந்த நேருவும், "காரியத்தை சாதிக்கவல்ல ஒரே அமைப்பு காங்கிரஸ்தான்" என்றும், தனக்குத் தடையாக வருகின்ற எந்த அமைப்பையும் தூக்கி எறிந்து விட்டு தடைகளைத் தகர்த்து காங்கிரஸ் தனது பயணத்தைத் தொடரும்" என்றும் ஆகஸ்டு 1945-இல் அறிவித்தார். ஜனவரி 1942-இல் இந்திய அரசுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றில் "பிரிட்டிஷ் ஆட்சியின் வாரிசு என்பதிலும், பாராளுமன்ற, நிர்வாக அதிகாரங்கள் தனது கட்டுப்பாட்டில் மாற்றித் தரப்பட வேண்டும் என்பதிலும் காங்கிரசுக்கு இருந்த உறுதியையும்"[12] பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

"பிரிட்டிஷ் இந்தியா முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர விரும்பம் காங்கிரசின் நோக்கம்தான்'.[13] மதக்கலவரங்கள் அதிகரிக்கக் காரணம் என்று கூறுகிறார் ரெஜினால்டு கப்லேண்ட்.

> "அகிம்சாவாதிகள் என தங்களை சித்தரித்துக் கொண்ட காங்கிரசுக் காரர்கள் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபடுவதை அனுமதிக்கவில்லை. இத்தகைய 'புனிதமற்ற கூட்டு' பற்றி சிந்திப்பதை விட மரணத்தைத் தழுவுவதே மேல் என்று கருதினார் காந்தி."

### பாகிஸ்தான் பிரிவினையை நோக்கிய பாதை!

பாக் பிரிவினையை நோக்கிய பாதையில் 1928-ம் ஆண்டின் நேரு அறிக்கை ஒரு முக்கியமான மைல்கள். இது மட்டுமல்ல; பம்பாயில் கூட்டு மந்திரிசபை அமைக்கலாமென்று 1937-இல் ஜின்னா முன்வைதத கோரிக்கையை காங்கிரஸ் நிராகரித்தது. உ.பி. அமைச்சரவையில் இரண்டு முஸலீம் லீக் எம்.எல்.ஏ.க்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனில் முஸலீம் லீக் கட்சியையும், உ.பி.பாராளுமன்றக் குழுவையும் கலைத்து விட வேண்டும் என்றும் எல்லா முஸ்லீம் லீக் எம்.எல்.ஏக்களும் காங்கிரசின் திட்டத்தையும் கட்சிக் கட்டுப்பாட்டையும் 'முழுமையாக' ஏற்றுக் கொண்டு காங்கிரசு உறுப்பினர்களாகவே ஆகிவிடவேண்டுமென்றும் நேரு விதித்த மிகக் கடுமையான நிபந்தனைகளும் பிரிவினையை நோக்கிய பாதையில் மேலும் முக்கியமான மைல்கற்கள்.[14]

1937-இல் நடைபெற்ற தேர்தலில் நாட்டின் மொத்த பிராந்தியங்கள் பதினொன்றில் உ.பி, பம்பாய் உள்ளிட்ட 6 பிராந்தியங்களில் ஒரு முஸ்லீம் தொகுதியில் கூட காங்கிரசு வெற்றி பெற இயலவில்லை.[15] இத்தனைக்கும் ராஜேந்திர பிரசாத், எஸ்.கோபால் ஆகியோர் குறிப்பிடுவது போல - இரண்டு கட்சிகளின் திட்டங்களில் எவ்வித வேறுபாடுமில்லை.[16]

ஒன்றுபட்ட இந்திய அரசில் தங்களது பங்கு அதிகாரத்தைப் பெறவே முடியாது என்பதையும், அத்தகைய ஒன்றுபட்ட அரசில் காங்கிரசுக்கு வால்பிடிக்க மட்டுமே முடியும் என்பதையும் மேற்சொன்ன கசப்பான அனுபவம் முஸ்லீம் தலைவர்களுக்கு உணர்த்தியது; இதற்குமுன் விட்டுக் கொடுக்கும் இயல்புடையவராக இருந்த ஜின்னா, 1937-இல் நடந்த முஸ்லீம் லீக் மாநாட்டில்



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியாளர்கள் மீது அடுத்த சுற்று அடக்குமுறை

புரட்சிகர, ஜனநாயக அமைப்புகளின் மீது மீண்டும் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா அரசு அடக்குமுறையை ஏவிவிட்டுள்ளது.

திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம் - மங்கலம் தோழர்கள் சுப்பிரமணியன், பழனி, வேடிராசு, ஜெகதீசன், ஆர்ப்பாக்கம் தோழர்கள் சம்பத், சேகர், எல்லப்பன் ஆகிய விவசாயிகள் விடுதலை முன்னணியினர் கடந்த 5.11.91 அன்று தமது வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்தனர்; அவர்களை அதிகாலை 2 மணிமுதல் 4.30 மணி வரை தட்டி எழுப்பிக் கைது செய்த போலீசார், பஸ்களைக் கொளுத்தியதாகவும், சாலைகளைத் தோண்டி போக்குவரத்தைத் தடை செய்ததாகவும் சதித்திட்டம் தீட்டியதாகவும், இப்படிச் சதிசெய்தபோதே தாங்கள் கைது செய்ததாகவும் மங்கலம் போலீசார் பொய் வழக்குப் போட்டனர்.

"ஏன் இப்படி அடுத்தடுத்து செய்கிறீர்கள்?" என்று கேட்டபோது மேலிடத்து உத்திரவு, எஸ்.பி. உத்தரவு என்றனர். திருவண்ணாமலை மாஜிஸ்ட்ரேட் இல்லாததால் செங்கம் கோர்ட்டுக்குக் கொண்டுபோயினர். அங்கு போலீசு அடாவடியாக, வேண்டுமென்றே பொய்வழக்குப் போடுகிறது என்றும் இது மூன்றாவது முறை என்றும் தோழர்கள் புகார் கூறினர். மாஜிஸ்டிரேட் போலீசாரிடம் "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்" என்று கேட்டதற்கும் "எஸ்.பி. உத்திரவு" என்று போலீசார் கூறினர். சதி செய்தபோதே கைதானதாக 151-வது குற்றப் பிரிவிலும் அதற்கே முரணாகப பொதுச சொத்துக்கு சேதம் ஏற்படுத்தியதாக 7(1)(அ) பிரிவிலும் வழக்குப் போட்டுள்ளனர்.

இதேபோல சேலம் மாவட்டம் பள்ளிபாளையத்தில் ஐவரையும், ஊத்தங்கரையில் தோழர் சி.என்.. சுப்பிரமணியையும் இரண்டாவது முறையாகக் கைது செய்து பொய் வழக்குகள் போட்டுள்ளனர்.

காங்கிரசுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தார்.

உலகை உய்விக்கும் அகிம்சாவாதிகளெனத் தங்களைச் சித்தரித்துக் கொண்ட காங்கிரஸ்காரர்கள் இந்துக்களும் முஸ்லீம்களும் களத்தில் ஒன்றுபடுவதை அனுமதிக்கவில்லை. இத்தகைய 'புனிதமற்ற கூட்டு' பற்றி சிந்திப்பதை விட மரணத்தைத் தழுவதே மேல் எனக் கருதினார் காந்தி. மேட்டுக் குடியினர் மட்டத்தில் முஸ்லீம் தலைவர்களுடன் ஒன்றுபடுவதற்குக் கூட காங்கிரஸ் தலைவர்கள் தயாராக இல்லை. காங்கிரஸ் தலைவர்கள் கூட்டணி அமைக்கத் தயாராக இல்லை; முஸ்லீம் லீகைச் சீரணித்து விடவே விரும்பினார்கள். விளைவு, மதவெறி எனும் நஞ்சு பரவத் தொடங்கியது.

### மதவெறியின் ஊற்றுமூலம்!

1946-இன் இறுதியில் அமைதியை நிலைநாட்டும் லட்சியப் பயணம் என்று காந்தி அறிவித்த யாத்திரையினூடாக, கிராமங்களில் அவர் நடத்திய பிரார்த்தனைக் கூட்டங்களில் அவரிடம் மீண்டும் மீண்டும் கேட்கப்பட்ட கேள்வி இதுதான். "மதக் கலவரங்களின் . மூலகாரணமான காங்கிரஸ் -முஸ்லீம் லீக் கருத்துவேறுபாடு நீடித்தாலும், இந்து - முஸ்லீம் ஒற்றுமையை நிலைநாட்டும் நம்பிக்கை உள்ளதா?"[17]

மே - 1947 இல் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள சோத்பூரில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தின்போதும் காந்தியிடம் இதே கேள்வி கேட்கப்பட்டபோது அவர் சொன்னார், "மேலே (தலைமையில்) எல்லாம் தவறாகப் போகும்போது அதன் விஷமத்தனமான செல்வாக்கிலிருந்து கீழே உள்ள மக்களின் நற்குணங்கள் எவ்வாறு தம்மை நிலை நிறுத்திக் கொள்ள இயலும்?"[18]

உண்மை என்ன? இரண்டு மதங்களையும் சேர்ந்த மேல்தட்டு வர்க்கங்களிடையே இருந்த முரண்பாடு தான் மதவெறியின் ஊற்றுக் கண்ணாக இருந்தது. தான் விலகிய பின்னரும் தனது நலன்களைப் பாதுகாக்க, தனக்கு ஒத்துழைக்கக் கூடிய கட்டுமானங்களைக் காலனிய இந்தியாவில் உருவாக்கி வைக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முயன்றது. இதற்காகத்தான் படிப்படியாக (கட்டம் கட்டமாக) அதிகாரத்தை மாற்றித் தரும் தந்திரத்தைக் கையாண்டது. அதிகார மாற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திற்கு முன்பும் பிரிட்டிஷ் அரசுக்கும் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மேல்தட்டு வர்க்கத் தலைவர்களுக்குமிடையில் வெகு நீண்ட பேச்சுவார்த்தைகள் நடந்தன.

ஒவ்வொரு பிரிவு மேல்தட்டு வர்க்கமும் தனக்குக் கூடுதல் சலுகைகளைப் பிரிட்டிஷாரிடம் பெற முனைந்ததால் பேச்சு வார்த்தை அவர்களுக்கிடையே கடுமையான மோதலைத் தோற்றுவித்தது. தமது கோரிக்கைகளுக்கு வலிமை சேர்க்க அவரவர் தத்தம் மதத்தினரைத் திரட்டத் தொடங்கினர். மேலே திரண்டு வந்த நஞ்சு கீழே பாய்ந்து மக்களையும் தீண்டியது. அயோத்தியின் கோயில் - மசூதி விவகாரத்தைப் போலவே அன்றும், மதம் ஆளும் வர்க்கங்களின் கையில் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது.

> "முஸ்லிம்களின் 14 அம்சக் கோரிக்கையின் பிரதான அம்சம் கூட்டரசாங்கம்தான். தம் மீது ஏறிச் சவாரி செய்கின்ற நிரந்தர இந்துப் பெரும்பான்மை கொண்ட ஒற்றை மைய அரசை முஸ்லீம்கள் விரும்பவில்லை."

(அடுத்த இதழில் முடியும்)

### ஆதார நூல்கள்


1. ஆசாத், "இந்தியா சுதந்திரத்தை வெல்கிறது" (சென்னை, 1988 பதிப்பு) பக்: 170, 185
2. பிரெசர், "நேரு: ஒரு அரசியல் வாழ்க்கை வரலாறு" (லண்டன் - 1959) பக்: 374-5
3. ஹட்சன் "மாபெரும் பிளவு" (லண்டன், 1969) 182-3; சிவா ராவ், 'இந்திய சுதந்திர இயக்கம்' (டெல்லி - 1972) 131, 133; ∴பிராங்க் மொரேஸ், "ஒரு சகாப்தத்தின் சாட்சி" (லண்டன், 1973) 81.
4. முகமது அலி, "முகமது அலியின் கடைசி வார்த்தைகள்". அகில இந்திய காங். கமிட்டி ஆவணங்கள், கோப்பு G - 85/1931 (நேரு நினைவு நூலகம்)
5. "இந்திய ஆண்டுப் பதிவேடு" (கல்கத்தா) (இனி IAR எனக் குறிப்பிடப்படும்.) I - 291, 284-8, 294-5, 295-301.
6. அனைத்துக்கட்சி மாநாடு 1928, இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளைத் தீர்மானிக்க மாநாட்டில் நியமிக்கப்பட்ட, "குழுவின் துணை அறிக்கை" (அலகாபாத், n.d,36.) "இந்தியாவும் பிரிட்டிஷ் சாம்ராச்சியமும் 1919 - 47" -சுனிதி குமார் கோஷ் - I பக்: 283 - 5
7. "ஜவகர்லால் நேருவின் தேர்ந்தெடுத்த படைப்புகள்" (ஆசிரியர்: எஸ்.கோபால் -டில்லி) (இனி SWN என்று குறிக்கப்படும்.) IV - 523, 524; V 43.
8. பி.பட்டாபி சீதாராமய்யா, "இந்திய தேசிய காங்கிரசின் வரலாறு" (பம்பாய் -1946) I - 482.
9. "மகாத்மா காந்தி - தொகுப்பு நூல்கள்" (டில்லி). (இனி CWG என குறிக்கப்படும்) அத்: XLV: 253; XL III. 14-5, 117; LXX11. 407-8; LXX VI 378; LXXVII 380.
10. அதே நூல், XL VIII. 96, 357; LXVI. 344, 419; LXVII. 225; LXIX, 403.
11. SWN. XIV. 160; VII 468; VIII. 7, 12, 326
12. "அதிகார மாற்றம் 1942 - 7" (தலைமை ஆசிரியர்: என்.மன்சேர் - லண்டன்) I, 82 (இனி TOP எனக் குறிக்கப்படும்.)
13. WIH. மாரிஸ் - ஜோன்ஸ் - இன் "அது உண்மையானால் அதன் பொருள் என்ன?" எனும் நூலில் மேற்கோள் காட்டப்பட்டது. மூல நூல்கள்: "இ.தே. காங்கிரசைப் பற்றி சில பிரிட்டிஷ் கண்ணோட்டங்கள்" ஆர்.சிசன் & வோல்பெர்ட், "காங்கிரசும் இந்திய தேசியமும் (டெல்லி - 1988) 109 - 10.
14. கே.எம்.முன்ஷி, "சுதந்திரம் நோக்கி யாத்திரை" (பம்பாய், 1967) 47-8; கஞ்சி துவாரகாதாஸ் "இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் 1913 - 1937" (பம்பாய் -1966) 466 - 7; SWN. VIII, 168 - 70. சிவா ராவ் "இந்தியா 1935 - 47" "இந்தியப் பிரிவினை" (லண்டன் - 1970), ஆசாத், மேற்சொன்ன நூல், 170.
15. ராஜேந்திர பிரசாத், "பிளவுண்ட இந்தியா" (பம்பாய் - 1946)135; எஸ்.கோபாலன் "ஜவகர்லால் நேரு" I (டெல்லி, 1981) 227; பார்க்க: டி.ஜி.டெண்டுல்கர் "மகாத்மா" IV (பம்பாய், 1952) 108; IAR 1936, I, 301 முஸ்லிம் லீகின் தேர்தல் அறிக்கை.
16. சீதாராமய்யா, மேற்சொன்ன நூல் II, 690; சிவாராவ், "இந்தியா, 1935 - 47 "419, கோபால், மேற்சொனன நூல், 226; கஞ்சி துவாரகாதாஸ் -465; SWN, VIII, 166
17. CWG LXXXVI, 381 - 2, 456; LXXXVII, 22
18. மேற்சொன்ன நூல் 466.




படிப்பகம்

www.padippakam.com



# ஏழைகள என்றால் இப்படியும் சாவா?

பம்பாயிலிருந்து பிற முக்கிய நகரங்களுக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்து நடப்பது சாதாரண ஒன்று. இருப்பினும் அகமதாபாத் - பம்பாய் நெடுஞ்சாலையில் நவம்பர் 20-ந் தேதி நடந்த விபத்து வித்தியாசமானது. என்.ஜி. எல்.கெமிக்கல்ஸ் என்ற தனியார் கம்பெனியின் லாரி, அகமதாபாத்திலிருந்து பம்பாய்க்கு ஒருவகை அமிலத்தை (Acid) ஏற்றி வந்தது. நவம்-20- ந் தேதி பம்பாய் தாஹானு பகுதியில் உள்ள மாத்வான்-கிண்டி கிராமத்தருகே பாலத்தின் சுவரில் மோதி கவிழ்ந்தது. லாரி டேங்கிலிருந்து அமிலம் சாலையில் வழிந்தோடியது. இத்திரவம் பார்ப்பதற்கு மண்ணெண்ணெய் போல் இருந்தது. கிராம மக்களும் மண்ணெண்ணெய் என்று நினைத்து குறிப்பாக பெண்களும் சிறுவர்களும் 'டின்'களையும் பாத்திரங்களையும் எடுத்து வந்து பிடித்தனர். அமிலத்திலிருந்து ஓலியம் (Oleum) என்ற வாயு வெளிவந்து திடீரென தீப்பிடித்து எரிந்ததில் பெண்களும், சிறுவர்களும் சிக்கிக் கொண்டனர். மேலும் தீ கிராமத்து குடிசைகளிலும் பற்றி பல வீடுகள் சாம்பலாயின. இதில் 61 பேர் இறந்ததாகவும், 15-க்கும் மேற்பட்டோர் பெரிதும் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாகவும் அரசு புள்ளி விவரமளிக்கிறது.

லாரியில் வந்தது என்ன திரவம் என்பது நவம்பர் 22 வரை யாருக்கும் தெரியவில்லை. அருகில் உள்ள ஒரு கெமிக்கல் கம்பெனியின் பரிசோதகர்கள் சோதித்துப் பார்த்தும்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. இதேபோல் இந்த லாரியைப் பற்றிய விவரம், லாரி எங்கிருந்து எங்கு எதற்காகச் சென்றது போன்ற விவரங்கள் கூட தாமதமாகவே தெரியவந்தது.

அரசு இயங்கும் 'லட்சண'த்திற்கு சான்றுதான், இச்சம்பவம். ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருள் உரிய பாதுகாப்பு இன்றி, அரசு தரப்பு கண்காணிப்பு - சோதனை - பதிவுகள் எதுவுமின்றி சிறிதும் அக்கறையின்றி அனாமத்தாக எடுத்து செல்லப்பட்டுள்ளது.

வேலையின்மை, விலைவாசி ஏற்றம், வரிச்சுமை, தனி நபர்களின் லாபம் - கொள்ளை முதலியவற்றால் இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் நிரந்தர வறுமைக்கும் பட்டினிக்கும் தள்ளப்பட்டு விட்டார்கள். அன்றாட வேளையை தள்ளுவதற்காக எண்ணற்றோர் எச்சில் இலை பொருக்கி சாப்பிடுவதையும், குப்பைகளில் - சாலைகளில் பொறுக்கியெடுத்து உண்பதையும், திருடி - ஏமாற்றி பிழைப்பதையும் சாதாரணமாகப் பார்க்கிறோம். இதேபோல் மாத்வான் - கிண்டி கிராமப்பழங்குடி மக்களை வறுமையும், அறியாமையும், விரட்டி சாலையில் வடிவது மண்ணெண்ணெய் என எடுக்க வைத்து உயிரைப் பறித்துக் கொண்டது.மக்களின் இந்தவறுமையும், அறியாமையும் இயற்கையாக ஏற்பட்ட ஒன்றல்ல; காலம்காலமாக சுயநலவாத சிறு கும்பலால் உருவாக்கப்பட்டதே! இதற்கும் இந்த ஆட்சியாளர்கள் தான் பதில் சொல்லியாக வேண்டும்!

# "அரிசனச் சிறுமி அழகாய் இருப்பதா? தேவதாசி ஆக்கு!" – நிலப்பிரபுக்களின் கொட்டம்!

நான்கு மாதத்திற்கு முன்பு ஆந்திராவில் நிலப்பிரபுக்கள், தாழ்த்தப்பட்ட சிறுமியை தேவதாசியாக்கியச் சம்பவம் அண்மையில் அம்பலத்திற்கு வந்தது.

ஆந்திரா - பிரகாசம் மாவட்டத்தில் மரச்சகுண்டா கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த அச்சிறுமி மிகவும் அழகாக இருந்தாள். நிலப்பிரபுக்கள் அவள் மேல் ஒரு கண்ணாகவே இருந்தனர். ஊர் வழக்கப்படி எல்லம்மா கடவுளுக்கு தேவதாசியாக்கி விட்டால் உரிமையோடு அவளை அனுபவிக்கலாம் என வெறிபிடித்து செயல்படத் தொடங்கினர். வறுமையின் கோரப்பிடியில் தவித்துக் கொண்டிருந்த அவளின் பெற்றோர்களை, ஒரு ஏக்கர் நிலமும், 20,000 ரூபாய் பணமும் கொடுத்து மகளை தேவதாசியாக்க சம்மதிக்க வைத்தனர். சிறுமி, தாழ்த்தப்பட்ட பெண் என்பதால் அவளை புனிதமாக்குவதற்காக சடங்கு சம்பிரதாயங்களுடன் எல்லம்மா கடவுளுக்கு விழா எடுத்தனர். சுண்ண நீர், மஞ்சள், குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட பானை நீரில் சிறுமியை முக்கியெடுத்து ஊர்வலம் நடத்தி புனிதப்படுத்தினர்! சிறுமி பூப்பெய்திய பின் கோயில் குளத்தில் அவளை முக்கி எடுத்து ஒரு தேவதாசியிடம் பயிற்சிக்கு விடுவார்கள். அதன்பிறகே இச்சிறுமி முறைப்படி தேவதாசியாவாள். விழாவின் முடிவில், அச்சிறுமியை (பூப்பெய்திய பின் முதலில் அனுபவிப்பதற்காக) ஏலம் விட்டனர். இதில் நிலபிரபுக்கள் கலந்து கொண்டு ஏலம் எடுத்துள்ளனர்.

அண்மையில் அமீனா எனும் சிறுமியை ஒரு முஸ்லீம் கிழவன் திருமணம் செய்து கொண்டு துபாய்க்கு கடத்திய செய்தி அம்பலமாகி பரபரப்புக்குள்ளாகியது.இதை இந்து வெறியர்கள், முஸ்லீம் மதத்தை இழிவுபடுத்துவதற்காக பூதாகரப்படுத்தி கூச்சலிட்டார்கள். இந்து வெறியர்கள் மேற்கண்ட சம்பவத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

இத்தகையச் சீரழிவுகள் அனைத்து மதத்திலும் காணக்கிடப்பவையே. சொல்லப்போனால் கிறித்துவ, முஸ்லீம் மதத்தைக் காட்டிலும் இந்து மதத்தில்தான் கொடிய வர்ணாசிய முறையின் கீழ் குழந்தை திருமணம், சதி, பிறன் மனைவி நாடுதல் போன்ற சீரழிவுகள் அதிகம். வர்ணாசிரம - சாதிக் கட்டுப்பாட்டையும் தூக்கியெறிந்து வசதிக்கேற்ப மாற்றுமளவிற்கு நிலபிரபுக்கள் காமவெறி ஆதிக்க வெறி பிடித்தலைந்ததை மேற்கண்ட சம்பவம் உணர்த்துகிறது. சனாதன - இந்து மத குப்பைகளை தீயிலிடும்பொழுது மட்டுமே அதற்குரிய அடிப்படையான அரை நிலப்பிரபுத்துவ முறையை தகர்க்கும் பொழுது மட்டுமே இத்தகைய அநீதிகளை ஒழித்துக்கட்டி பெண்ணினம் விடுதலை பெறமுடியும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா.சண்முகராசு, 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : எழில் பிரிண்ட்ஸ், 321, ஆற்காடு சாலை, சென்னை-600 024.

படிப்பகம்

www.padippakam.com






# இதுதான் இன்றைய இந்தியா

இந்தக் கார் - பைக் போலவே சென்னை சட்டக் கல்லூரி மாணவர்களும் போலீசின் அடியாட் கும்பலால் தாக்கப்பட்டார்கள்! 11-12-91 அன்று சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் மூவர் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணம் செய்ததை தடுத்த ஒரு போக்குவரத்து போலீசு அதிகாரி, முறையாக நடவடிக்கை எடுப்பதை விடுத்து இழிவாக வாய்க்கு வந்தபடி ஏசினார். இதைக் கண்டித்து கல்லூரி மாணவர்கள் அனைவரும் சாலைக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்குவந்த சப்-இன்ஸ்பெக்டர் பாண்டியனும் தகாத வார்த்தைகளால் மாணவர்களை ஏசவே போராட்டம் கொந்தளிப்பானது. போலீசுக்கு எதிராக மாணவர்கள் ஆக்ரோசத்துடன் முழக்கமிட்டனர். இதைப் பொறுக்க முடியாத போலீசு கும்பல், பாரிமுனை மற்றும் சுற்று வட்டாரத்திலுள்ள சமூக விரோதிகளை உடன் திரட்டிவந்து மாணவர்கள் மீது ஏவியது. கற்கள், கண்ணீர் புகைக் குண்டுகள், சைக்கிள் செயின், உருட்டுக் கட்டைகளைக் கொண்டு அக்கும்பல், கல்லூரி வளாகத்திற்குள்ளேயே புகுந்து நிராயுதபாணியாக இருந்த மாணவர்களை ஓட ஓட விரட்டித் தாக்கியது. இதைத் தட்டிக் கேட்பதற்காக சென்ற அருகிலுள்ள நீதிமன்ற வக்கீல்களையும் தாக்கியது. மாணவர்களின் வாகனங்களையும் நொறுக்கி தீயும் வைத்தது. இத்தகைய காட்டுமிராண்டித் தாக்குதல் போலீசின் மேற்பார்வையுடன் ஏறக்குறைய இரண்டரை மணி நேரம் நடந்தது!

அகில இந்திய ரீதியிலான 35-வது 'போலீஸ் டூட்டி மீட்' - போலீசாருக்கான விளையாட்டுப் போட்டிவிழா, 10-12-91 அன்று சென்னையில் நடந்தது. இதில் கலந்துகொண்ட ஜெயலலிதா, ''சமூகம், அரசியல், கலாச்சாரம் மற்றும் முன்னேற்றத்திற்காக செயல்படும் போலீசின் பணி, சிக்கலானதும், கடினமானதும் ஆகும்; இதில் மரியாதைக்குரிய இடத்தை வகிக்கும் தமிழகப் போலீசு பாராட்டுதலுக்குரியது'' என பாராட்டி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் வெற்றிபெற்ற தமிழக போலீசு குழுவினருக்கும், தமிழகத்திலுள்ள பி.எஸ்.எப், சி.ஆர்.பி.எப், ஆர்.பி.எப். போன்ற குழுவினருக்கும் மட்டும் ரூ.10000, 5000 என தனது சொந்த பணத்திலிருந்து எடுத்து வழங்கினார்!

மதுரை மருத்துவ கல்லூரி மாணவர்கள், சென்னை கால்நடைக் கல்லூரி மாணவர்கள், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள், இப்பொழுது சட்டக்கல்லூரி மாணவர்கள் என மாணவச் சமூகத்தின் மீது போலீசின் தாக்குதல் வெறியோடு தொடர்கிறது. அதுவும் சமூக விரோதிகளைக் கொண்டு தாக்குவது என முன்னேறியும் உள்ளது.

போராடும் மாணவர்களுக்கு வன்முறையாளர் பட்டம்! வன்முறையை அரங்கேற்றும் போலீசுக்கு பாராட்டுகள், பரிசுகள்! நம்மீது விழும் ஒவ்வொரு அடிக்கும்கூட, பரிசுதர ஜெயலலிதா காத்திருக்கும்போது போலீசின் அக்கிரமங்கள் வேறு எப்படி இருக்கும்? இதுதான் பாசிஸ்டு ஆட்சி!





படிப்பகம்